கர - ஐப்பசி
கலைக்கதிர்
280
4.5

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்துக்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணாக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தாராளமாய்க் கொடுக்கிறோம்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

உணவு தானியம், கரும்பு, பருத்தி ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் ரசாயன உரங்களாகிய அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் பாஸ்பேட், சூப்பர்பாஸ்பேட், ஆகியவை எல்லா விவசாயிகளுக்கும் சவுகர்யமாகக் கிடைக்க எல்லா முக்ய இடங்களிலும் டிப்போக்கள் ஏற்படுத்தி சர்க்காரின் நிர்ணய விலைக்கு சப்ளை செய்கிறோம்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51   தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ. 151 — கோயமுத்தூர்

இன்ஷ்யூரன்ஸ்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள், மற்றும் லாபகரமான ஏஜன்சி நிபந்தனைகள் பற்றிய விபரங்களுக்கு எழுதவும்.

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்

தந்தி: "PROTECTION" போன்: "121"

அவள் அழகின்
புகழ்ச்சி

ஹைஸோ

சந்தன சோப்

THE HYDERABAD SOAP & OIL WORKS L^TD.

HYDERABAD, DECCAN.

ads

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்

வந்து பாருங்கள்

ஸ்டார் ஆப் இந்தியா
பென்ஸில்களுக்கு
மெட்ராஸ் பென்ஸில்
பாக்டரி

★

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு
வி. பெருமாள் செட்டி
அண்டு சன்ஸ்

★

சிறந்த லித்தோ
அச்சு வேலைக்கு
ஹோ & கோ.

★

★

3, ஸ்டிரிங்கர் தெரு

சென்னை — 1

PSG



எல். டைப்பு பம்பு

விவசாயிகளுக்கு ஓர் வேண்டுகோள்!

நிலவளத்துக்கு நன்கு எருவிடுங்கள்.

●

நீர்வளத்துக்கு PSG பம்புசெட் நிறுவுங்கள்.
அவைகள் குறைந்த செலவில் நீடித்து உழைப்பவை.

●

பயிர் வளத்துக்கு PSG விவசாய கருவிகளை உபயோகியுங்கள். சிறந்த சாகுபடிக்கு அவைகள் மிகவும் ஏற்றவை.

விவசாயம் செழிக்க...

கவலை உருளை



இருப்புக் கலப்பை

கரும்பாலை

தூற்றும் இயந்திரம்

PSG

விவசாயக் கருவிகளும் இயந்திரங்களும்

விவரங்களுக்கு எழுதுங்கள்

பி. எஸ். ஜி. இன்டஸ்டிரியல். இன்ஸ்டிடியூட்

பீளமேடு போஸ்டு கோயமுத்தூர்

— தயார் செய்பவை —

PSG

1. மெஷின் டூல்ஸ்
2. எலக்ட்ரிக் மோட்டார்கள்
3. சென்ட்ரிபியூகல் பம்புகள்
4. டெக்ஸ்டைல் மெஷினரி
5. ஆயில் மில்லிங் மெஷினரி
6. விவசாயக் கருவிகள்

①

லேத்து


ரேடியல் டிரில்லிங் மெஷின்


மெகானிக்ஸ் வைஸ்

②


ஏ.சி. மோட்டார்

எலக்ட்ரிக் சைரன்

எக்ஜாஸ்ட் பேன்

③


பி.எஸ்.டைப் பம்பு


எஸ்.டைப் பம்பு


எச்.டைப் பெல்ட் பம்பு

④


காட்டன் ஜின்

பண்லிங் பிரஸ்


ரீலிங் மெஷின்

பேலிங் பிரஸ்

⑤


ஆயில் எக்ஸ்பெல்லர்


பில்டர் பிரஸ்


டிசின்டி கிரேடர்

⑥

கவலைஉருளை

கலப்பை

கரும்பு ஆலை

தூற்றும் இயந்திரம்

பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்

பூளைமேடு கோயமுத்தூர் (தென் இந்தியா)

கலைக்கதிர்

மலர் — ௩ கர : ஐப்பசி இதழ் — ௧௧

ஆசிரியர் :
ஜி. ஆர். தாமோதரன்,
B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), A. M. I. E. E. (London.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 OCT 1951
MADRAS

இந்த இதழில்

உள்ளத்தின் உண்மை ... திரு. தா. ஏ. சண்முகம் 2
சிலப்பதிகாரச் செய்யுள் ... போ. குருசாமி 4
காந்தி கற்பித்த கலை ... திரு. பொ. திருகூடசுந்தரம்... 9
மாமிசம் தின்னிச் செடிகள் ... திரு. எஸ். சிவசுப்பிரமணியம் 13
தொடக்க நிலை ... திரு. தி. கோயில்பிள்ளை 18
வானொலியும் வானுலகும் ... திரு. கி. அ. கறுப்பண்ணன் 22
சிதைந்த மலர் ... 'வெற்றி' 27
இன்பமே வா! ... "சக்திக்கனல்" 35
பூமியின் உள்ளகம் ... திரு. வீ. இராசமாணிக்கம் 41
பல சரக்கு ... ... "சுரும்பு" 45
பெண்ணின் கண்ணீர் ... 'அறிவடிவன்' 49
குழாய் விளக்குகள் ... 'அணு' 55
வினாக்களும் விடைகளும் ... 58
கம்பன் புளுகும்
வால்மீகி வாய்மையும் ... திரு. பா.வே. மாணிக்கநாயக்கர் 59
ஜப்பான் சமாதான...... ... திரு. சு. நடராசன் 62
தெய்வம் தோற்றது ... "கலைவாணன்" 67

2/172/

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின்
கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

விலை அணா 8

உள்ளத்தின் உண்மை

குறிப்பு:— மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப் பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெரு. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும் முழு முகவரியையும் குறித்து "ஆசிரியர், 'கலைக்கதிர்' பூளைமேடு, கோயமுத்தூர்" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

●

என்னுடைய பன்னிரண்டு வயதுப் பையன் சிறிது நாளாக நான் சொல்வதை எதிர்த்து நடப்பதிலும் சிறு காசுகளைத் திருடுவதிலும் முனைந்திருக்கிறன். எவ்வளவு அடித்துப் பயமுறுத்தியும் பயன் இல்லை .... அவனைச் சீர்திருத்த வழி?

உங்களுடைய பையன் இதுகாறும் குழந்தைப் பருவத்தி லிருந்திருக்கிறுன். தற்போது குமாரப் பருவத்தை அடையும் தறுவாயிலிருக்கிறுன். அவன் உள்ளமும் உடலும் வளர்ச்சி அடைய ஆரம்பிக்கின்றன. அதன் காரணமாக இதுகாறும் தான் அடங்கிக் கட்டுப்பட்டு இருந்த நிலை போய், சிறிது அளவு உங்களுக்கு எதிர்மாருக நடக்க ஆரம்பிக்கிறுன். மேலும் அவன் பள்ளியிலும் விளையாட்டு மைதானங்களிலும் தன்னைப் போன்ற இளைஞர்களோடு பழகி வருவதாலும் உடல் வளர்ச்சி அடைவதாலும் அவனுக்குத் தேவைகள் (Needs) அதிகப்படுகின்றன. அதைப் பூர்த்தி செய்யச் சிறு காசுகளைத் திருட ஆரம்பிக்கிறுன். இதைத் தடுக்கச் சிறந்த வழி அடித்துப் பயமுறுத்துவது அன்று. அவன் உடல் வளர்ச்சிக்குத் தகப் போதிய உணவும் மற்றச் சௌகரியங்களும் அளித்து, அவன் சிறந்த மனிதனுகவேண்டியதற் குரிய கொள்கைகளைப் பக்குவமாகப் போதிக்க வேண்டும். அவனை இனிக் குழந்தையாகப் பாவித்து அவனுக்கு எல்லாச் சௌகரியங்களையும் செய்வதைவிட்டு, அவனிடத்துத் தன்னம்பிக்கை ஏற்படும்வகையில் அவனுக்குப் பொறுப்பான வேலைகளை அளித்து அவனும் குடும்பத்தில், முக்கியமான ஒருவனுக விளங்கும்படியாகச் செய்தால் மேற்கூறிய குறைகள் ஒருவாறு ஒழியலாம்.

நான் ஒரு ஆரம்பப்பள்ளி ஆசிரியர். பல்வேறு குழந்தைகள் என் பொறுப்பிலிருக்கிருர்கள். பயந்த குணமுடைய குழந்தையை எவ்வாறு திருத்துவது?

குழந்தைகளிடத்துப் பயந்து நடக்கும் இயல்பு (Timidity) அளவற்று இருந்தால் அதை வெகு பக்குவமாகவும், ஜாக்கிரதையாகவும் ஆசிரியர்கள் போக்க முயலவேண்டும். இதுபோன்ற குழந்தைகளிடத்து முதன்முதலாகச் செய்யவேண்டியது யாதெனில், அவைகளின் குடும்பநிலையைக் கவனிக்க வேண்டும். பெற்றோர்கள் எங்ஙனம் அவர்களை நடத்துகிருர்கள், அவர்களிடத்து எப்படி நடந்துகொள்ளுகிருர்

கள் என்று நோக்கவேண்டும். முடிந்தால் பெற்றோர்களைக் கலந்து குழந்தைகளைப் பற்றி அவர்களது கருத்துக்களை அறிந்து அவர்கள் துணை கொண்டு அக்குழந்தைகள் பயத்தைப் போக்கத் திட்டம் வகுத்து அவர்களையும், அதைக் கடைப்பிடிக்குமாறு செய்தல்வேண்டும்

பயந்த தன்மை உடைய குழந்தைகளிடத்துப் பரிதாபப்பட்டு (Sympathy) அவைகளுக்கு அதிகம் உதவி செய்ய முயல்வது கூடாது. அங்ஙனம் செய்தால் அவர்களுடைய பயம் அதிகமடைவதோடுகூடத் தாழ்மை உணர்ச்சியும் (Inferiority feeling) ஏற்பட்டு, உதவியற்ற நிலையை அடையும். எனவே, சிறந்த முறையாவது அவைகளுக்கு உற்சாகமூட்டும் வகையில் அன்பான வார்த்தைகள் (Encouraging wards) பேசி அவர்கள் உள்ளத்தில் ஒருவிதத் தன்னம்பிக்கை (Self-confidence) ஏற்படுத்தவேண்டும். ஆசிரியர்கள் பயந்த இயல்புடையவர்களை, ஏளனம் செய்வதோ அல்லது அடிக்கடி மற்ற மாணவர்களுக்கு நடுவே கேள்விகளைக் கேட்பதோ, கோபமான வார்த்தைகள் பேசுவதோ குழந்தைகளுக்கு ஆபத்தை விளைவிக்கும். பயந்த சுபாவம் அசாதாரண நிலையில் (abnormal) இருந்தால் உளப்பாகுபாடு அறிஞர்களிடத்து அனுப்பி அதை நிவர்த்தி செய்வதே சிறந்தது.

காமத்தைப் பற்றி (Sex-education) சிறு பையன்களுக்கும், பெண்களுக்கும் பள்ளியில் போதிக்கவேண்டும் என்ற இயக்கம் இப்போது மேலை நாடுகளிலிருந்து வருகிறது. அது உண்மையானால் அது நமது நாட்டுக்குப் பொருந்துமா?

காமம் (Sex) ஒரு வலிவு பொருந்தியதும் மிகவும் முக்கியமானதுமான ஒரு இயல்பூக்கம் (instinct). ஒருவன் அதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சமூகம் அதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அந்த இயல்பூக்கம் ஒவ்வொருவனிடத்திலும் இருந்து, வளர்ந்து குமர முதிர்ச்சிப் பருவங்களில் முதிர்ச்சி பெற்றுப் பூர்த்தியடைய வழி தேடுகிறது.

பெரும்பாலான பிறழ்வான நடத்தைக்கு (Pathological behaviuor) அடிப்படையான காரணம் காம இயல்பூக்கமே என்று உளப் பாகுபாடு அறிஞர்கள் கண்டுபிடித்தது சரியானதே. இது உள்ளக் கோளாறுகளினால் அவதியுற்றுத் தங்களை நாடிவரும் மக்களிடத்து உள்ளப் பாகுபாட்டு அறிஞர்கள் அன்றாடம் காணும் உண்மையாகும். ஆகவே அதைப்பற்றிக் குழந்தைகளும், குமரர்களும் தாமாகவோ, அல்லது விரும்பத்தகாத மக்களிடத்திலிருந்தோ அறிவதைவிட, அந்தத் துறையில் சிறந்தவர்களிடமிருந்து அதைப் பக்குவமாக, அந்த அந்தப் பருவங்களுக்குத் தக அறிவது சிறந்ததே யாகும். சான்றாக, 6, 7 வயதில் குழந்தைகள் பால் வேறுபாடு (Sex differences) அறிந்து அதற்குக் காரணமறிய முயலுகின்றன. அவைகள் குழந்தைகள் எப்படிப் பிறக்கின்றன என்று ஆவலுடன் கேள்விகள் கேட்பதும் உண்டு. குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சியினால், காம உணர்ச்சி வேறு வகையில் வெளிப்பட ஆரம்பிக்கிறது. 'பெரியோர்'கள் வெறுத்து அதைப்பற்றிக் குறிப்பதே தவறு என்று நினைப்பதினால், சிறுவர் சிறுமியர் ஏதேதோ ஆபத்தை விளைவிக்கும் புத்தகங்களிலிருந்தும் மற்ற விரும்பத்தகாத தோழர்களிடமிருந்தும் அதைப் பற்றித் தவறான கருத்துக்களைகொண்டு ஆபத்து நிலையை அடைகிறார்கள்.

காமத்தைப் பற்றிப் பள்ளியில் போதிக்காவிட்டாலும், வீட்டிலே பெற்றோர்களோ அல்லது குடும்ப டாக்டரோ பக்குவமாக அதைப் பற்றிச் சிறுவர்களுக்கு விஞ்ஞான முறையில் போதித்தல் நமது நாட்டுக்கும் தகும்.

பேரா. குருசாமி

"வாழ்க்கை பலதிறப்பட்ட கூறுகள் உடையது. பலவாகிய அக்கூறுகளில் ஒன்றோ பலவோ ஆகிய வாழ்க்கைப் பகுதிகளை எடுத்து விளம்புவதே கலைஞனின் குறிக்கோளாக அமைகின்றது. எனவே, வாழ்க்கையை விளம்ப முனைகின்ற பொழுது தன்னிடத்து வாழ்க்கை எவ்வெண்ணத்தை எழுப்பியுள்ளது என்பதை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ, குறிப்பாகவோ தெரிவிக்காமல் தப்பமுடியாது. தான் எழுத நினைக்கும் கதையினைக் குறிப்பிட்ட சில கொள்கைகளையோ கருத்துக்களையோ வெளியிடுதற்கான சாதனமாக்குவதுபற்றிக் கனவுகூடக் காணாமல் இருக்கலாம்; எனினும், எந்தக் கதையிலும் சில கொள்கைகளும் கருத்துக்களும் இடம்பெற்றே தீரும். மிக எளிய கதைகூட இக் கருத்து வழிநின்று ஆராயப்படுமாயின், உறுப்பினர்களிடமும் நிகழ்ச்சிகளிலும் தெளிவாகக்கூடிய அறவுண்மைகள் இருப்பதைக் காட்டிவிடும். எனவே, இந்த அளவிலேனும், ஒவ்வொரு புனைகதையும்—எவ்வளவு நொய்ம்மையுடையதாயினும்—உலக வாழ்வுபற்றிய ஒரு தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டே எழுந்திருக்கும் எனலாம். பொதுப்படையாகவுள்ள பல கோட்பாடுகளையும், பருமையான நிலையிலுள்ள பொதுவான வாழ்க்கைத் தத்துவத்தையும் தருவதே புனைகதைகளின் அடிப்படையாக இருப்பதைக் காணலாம்......... மிகப் பெரிய புனைகதை ஆசிரியர்கள் யாவரும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையாளர்களாகவும், அவ்வாழ்வினை ஊன்றி நோக்குபவர்களாகவுமே இருந்திருக்கின்றனர். மக்களைப் பற்றிய பண்பாராய்ச்சியும் உலகை நிகழ்த்தும் எழுச்சி, உணர்வு, வெறிகளின் தெளிவும் நீடுநிலவுகிற உண்மைகள், அனுபவ முதிர்ச்சியில் கண்ட சிக்கல்கள் ஆகியவற்றைத் தெளிவுறக் காட்டும் பண்பும்—யாவும் ஒருங்கு இணைந்து ஆசிரியர்கள் உலகைப் பற்றிக் கருதிய கருத்துக்கு ஓர் அறவழிப்பட்ட நிலைக்களனை அளித்துவிடுகின்றன. அறிவு நெறி நிற்கும் எந்த வாசகனும் இந்த அறத்தின் அடிப்படையைப் புறக்கணித்துவிட முடியாது. புனைகதைகளிலே வாழ்க்கைத் தத்துவம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் எப்படி உணரலாம்? ஏதேனும் ஒரு சிறந்த புனைகதையைப் பற்றி ஆராய்ந்து அளவளாவத் தொடங்கினால், சிறிது நேரத்துக்கெல்லாம் வாழ்க்கையைப் பற்றியே அலசி ஆராய்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை அறிய நேரிடுவதிலிருந்து இப் பேருண்மையினை நாம் தெளிவாக அறியலாம். [ஷேக்ஸ்பியரின் நாடகத் திறனாய்வின் மிகப் பெரும் பகுதி மானிட வாழ்க்கைத் திறனாய்வாகவே அமைகிறது. ஏனெனில், ஷேக்ஸ்பியரின் நாடகப் படைப்புகள் வாழ்க்

கையின் பல்லாயிரக் கணக்கான பகுதிகளைத் தொட்டு உறவாடிச் செல்கின்றன என்று பேராசிரியர் மௌல்டன் குறிப்பிடுவது கருதத் தக்கது]"* :ஹட்சன்

மேலே விவரித்த கருத்துவழி நின்று சிலப்பதிகாரச் செய்யுளை ஊடுருவி நோக்கின், வாழ்க்கைபற்றி இளங்கோவடிகள் யாது கருதினார் என்பது தெளிவாகப் புலப்படும். இக் கட்டுரையின்கண் சமய வாழ்க்கை பற்றிய கருத்துக்களை மட்டிலும், சிலப்பதிகாரக் கதையில் உள்ளவாறு காணலாம். சங்க காலத்தை அடுத்து நிலவிய நிலைமையினை உருவாக்க நினைந்தார் அப்பெருந்தகை; தமிழினம் என்றென்றும் பெருமிதம் உறுதற் கேற்ற வண்ணம் சிலப்பின் வென்ற சேயிழையின் கதையைச் செப்பினார். தமிழக வாழ்வினை உருவாக்கும் வகையில் தமிழினத்தின் நல்வாழ்வுக்கு வழி கோல வேண்டும் என்பதே இளங்கோவடிகளின் எண்ணம்; 'தன் கோள் நிறுவுதல்' அவர் கருத்தன்று. தன் கோட்பாட்டைப் பிறர்மாட்டுத் திணிக்கும் முயற்சியினைச் சிலப்பதிகாரத்திலே காண இயலவில்லை என்பதனால், அவர் தமக்கென ஒரு தத்துவ நெறி அற்றவராயினார் என்று கொள்ளுதல் தவறு. ஹட்சன் குறிப்பிடுவது போல மறைமுகமாகத் தாம் நம்பிய சமய நெறியினைக் குறித்திருக்கிறார்.

கண்ணகி கோவலர்க்கு வழித்துணையாக அமைந்த கவுந்தியடிகள், இளங்கோ படைத்த பாத்திரம்; தாம் எண்ணிப் போற்றிய சைன சமயக் கருத்துக்களைப் பரப்புதற்குக் கவுந்தியடிகளைப் பயன்படுத்துகிறார். இது மறைமுகமான முயற்சி. ஆயினும், கவுந்தியடிகளைக் கதையினோடு இரண்டறக் கலந்துவிடுமாறு செய்துவிட்டமையால், ஆசிரியரின் பிரசாரப் போக்கு வலிமை அற்றுவிடுகிறது. சைன சமயக் கருத்துக்களை வலியுறுத்தும் நோக்கம் மட்டுமே ஆசிரியர்க்கு இருந்திருக்குமாயின், கவுந்தியடிகளை வழித்துணை என்ற அளவோடு நிறுத்தியிருக்க வேண்டும். ஆயின், கவுந்தியடிகள் கதைத் தலைவன் தலைவியரின் வாழ்க்கையோடு இணைந்ததோடு மட்டுமன்றி, அவர்தம் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிடுகின்ற தன்மையினைச் சிலப்பதிகாரத்தில் காணுகின்றோம். கோவலன் கொலையுண்ணவும், யாரும் படாத பெருந்துயரம் கண்ணகி படவும் ஆன அவல நிகழ்ச்சிகளை அறிந்த கவுந்தியடிகள் தாமும் உயிர்விடுக்கின்றார். பாண்டியன் செய்த பிழை கவுந்தி மூதாட்டிக்குச் சினம் விளைத்தது. ஆயின், வளைந்த கோலை நிமிர்த்த அவன் உயிர் விடுத்த செய்கை அப் பிராட்டியின் சினத்தை அவித்தது. ஆயினும், கண் கண்ட தெய்வம் எனத் தம்மால் போற்றப்பட்ட கண்ணகிக்கும் அவள் கண

---

*'........ the novelist's theme is life, in one or several of its innumerable aspects, it is impossible for him not to give, expressly or by implication, some suggestion atleast, if nothing more than a suggestion, of the impression which life makes upon him. Little as he may dream of using his narrative as the vehicle of any special theories or ideas, certain theories or ideas will none the less be found embodied in it, and even the slightest story will yield under analysis a more or less distinct underlying conception of the moral values of the characters and incidents of which it is composed. To this extent, therefore, if no further, every novel, no matter how trivial, may be said to rest upon a certain view of the world, to incorporate or connote various general principles, and thus to present a rough general philosophy of life..............the great novelists have been thinkers about life as well as observers of it; and their knowledge of character, their insight into motive and passion, their illuminative treatment of the enduring facts and problems of experience, to say nothing of the ripe wisdom which they often bring to bear upon their task, combine to give to their view of the world a moral significance which no thoughtful reader is likely to overlook. How important this philosophical element in their work is, is strickingly shown by the fact that in discussing any great novel we soon find ourselves involved in the discussion of life itself. [Thus Moulton properly notes that, of what passes current as commentary on Shakespeare, "the vast proportion is comment upon human life itself, touched as life is at myriad points by the creations to the Shakespearean Drama] – An Introducifon to Literary Criticism : pp. 163–4.

வனுக்கும் ஏற்பட்ட அவலம் கவுந்தியடிகளின் பற்றற்ற நெஞ்சையும் பற்றி வாட்டிற்று. எனவே, உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர் விடுத்தனர்.

தவந்தரு சிறப்பிற்
கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோல்
நீணில வேந்தன்
போகுயிர் தாங்கப்
பொறைசா லாட்டி
என்னோ டிவர்வினை
உருத்த தோவென
உண்ணா நோன்பொடு
உயிர்பதிப் பெயர்த்த

செய்தியினை இளங்கோவடிகள் இறுதியில் அறிவிக்கின்றார். இந் நிகழ்ச்சியால் கவுந்தியடிகள் சிலப்பதிகாரக் கதையூடு பின்னிப் பிணைந்து, இரண்டறக் கலந்துவிடுகின்றார். எனவே, சமயப் பிரசாரப் பாணி என்று அடையாளம் காண இயலா வண்ணம் கலைப் பண்பு எய்துகின்றது. மறைமுகமாகத் தம் சமய நெறியைப் புலப்படுத்திய இளங்கோவடிகள், கலையியலின் மேன்மை வெற்றுப் பிரசாரத்துக்காக இழிநிலை எய்துதல் கூடாது என்ற உண்மையினை இங்கே விவரித்ததைக் கண்டோம்.

சைன சமயமே தாம் போற்றிய சமயம் என்பதை மறைமுகமாகக் குறித்து, அதற்கு ஆக்கம் தேடும் ஓர் இடமும் சிலம்பின்கண் உள்ளது. நாடுகாண் காதையுள் வருகின்ற சாரணர், கதைக்கு எவ்வகையானும் தொடர்பு உடையா ரல்லர். அவர்களின் வருகை, அவர்தம் தலைவன் ஊழ்வினையின் ஆற்றல் பற்றியும் அருகதேவன் மாண்பு பற்றியும் விரித்துரைத்தல், அவ்வுரை கேட்ட கவுந்தியடிகள் அருகனைத் தவிரப் பிற தெய்வம் போற்றுவதில்லை என்று கூறுதல் முதலிய செய்திகளால் அருக சமயப் பிரசாரம் அன்றி வேறு எதுவும் விளங்குவது இல்லை. மேலும்,

அங்கம் பயந்தோன்
அருகன் அருள்முனி
பண்ணவன் எண்குணன்
பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத
முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத்து
ஒளியுறின் அல்லது
போதார் பிறவிப்
பொதியறை யோர்எனச்

சாரணர் கூறுமாற்றால், அருகதேவனைச் சார்ந்தாலன்றிப் பிறவி என்னும் பூட்டிய அறைச் சிறையில் சிக்கியோர் வெளிவந்து விடுதலையடையமாட்டார் என்ற கருத்தினை வலியுறுத்துவதை அறிகின்றோம். இதே கருத்தினைக் கதையோடு இணைந்து வருவோரும் இடையீடின்றிக் கலந்தோரும் ஆகிய பாத்திரங்கள் கூறியிருப்பின், கவலை இல்லை. அக் காலத்தின் ஒருசார் கருத்தினைக் கலைஞன் தருகின்றான் என்ற நிலையோடு அஃது அமையும். ஆயின், இளங்கோவடிகள் இக் கருத்தினைத் தெரிவிக்கும் முறை ஊன்றிநோக்கற்பாலது. சிலம்பின் வென்ற நங்கையின் சித்திரத்துக்கு எவ்வாற்றானும் முன்னும் பின்னும் தொடர்பற்றார் ஆகிய சாரணர் இடை நடுவே நுழைக்கப் பெறுகின்றனர். அருக சமய மேன்மையினை வலியுறுத்தியபின் வந்த சுவடுதானும் தெரியாமல் கரந்து கரைந்து போகின்றனர். எனவே, இப்படைப்பு இளங்கோவடிகளின் இதயத்தில் இருந்த எண்ணத்தினைப் புலப்படுத்துவதற்கே ஆகும் என்பது தெளிவு.

கவுந்தியடிகள், சாரணர் ஆகிய இருவராலும் இளங்கோவடிகள் தம் சமயத் தத்துவத்தினை விளக்க முயன்றமையினை இதுகாறும் கண்டோம். ஆயின், நாம் ஏற்கெனவே குறித்துள்ளபடி தம் கருத்தைப் பிறர்மாட்டுத் திணித்துத் 'தன்கோள் நிறுவும் மதம்' அவர்க்கு உடன்பாடன்று. ஆகையினால்தான், சிலப்பதிகார நூல் முழுமையிலும் சமய நெறிகள் யாவற்றையும் பெரிது சிறிது என்ற வேறுபாடின்றி ஒப்பப் புகழ்ந்துள்ளார். சமய நெறிகளின் ஒருமைப்பாட்டினை உடன்பட்டுப் போற்றுகின்ற இடங்களும் சிலம்பில் காணப்படுகின்றன. ஒரு சமயத்தார் பிற சமயத்தார்களை வெறுப்பின்றிப் போற்றிய காட்சியினை முன்னம்

கண்டோம். ஈண்டும் ஒன்றினைக் காண்போம்.

கோவலன் சைன சமயத்தவன். ஆனால், காடுகாண் காதையுள் அவன் கொற்றவை மந்திரத்தை ஓதி, மயக்கும் கானுறை தெய்வத்தினின்றும் தப்புவதைக் கேட்கின்றோம்.

மயக்கும் தெய்வம்இவ்
வன்காட் டுண்டென
வியந்தரு மறையோன்
விளம்பின னாதலின்
வஞ்சம் பெயர்க்கும்
மந்திரத் தால்இவ்
ஐஞ்சி லோதியை
அறிகுவன் யானெனக்

கோவலன் ஒரு மந்திரம் உச்சரித்தான். அம்மந்திரம்

பாய்கலைப் பாவை
மந்திரம் ஆகலின்

வேற்றுருக் கொண்டு மயக்கிய தெய்வம் தன் உண்மை நிலை கூறிச் செல்கிறது. பாய்கலைப் பாவையாவாள் கொற்றவை. கொற்றவை வழிபாடு சைனர்க்கு உடன்பாடோ? அன்று. எனவே, இந்நிகழ்ச்சி ஆராயத்தக்கது. ஆராயுமிடத்து யாது தோன்றுகின்றது? சமய ஒருமைப்பாட்டினை அன்றைய தமிழகம் கொண்டிருந்தது என்றே, இளங்கோவடிகள் சமய ஒற்றுமையினை விழைந்தார் என்றே முடிவு செய்தல் வேண்டியுள்ளது.

பல்வேறு சமயங்களும் தம்முட் பூசலின்றி நிலவிய பான்மை சற்று வியப்பூட்டுவதே யாகும். ஆயினும், வியப்பூட்டுவன வெல்லாம் நிகழத் தகாதனவோ இயலாதனவோ அல்ல, இன்றும் இலங்கையில் ஒரே குடும்பத்தில் உள்ளார் பல்வேறு சமய வழிபாடுகளைக் கையாள்வதனைக் காணுகின்றோம். இதே நிலைமை சங்க காலத்தை அடுத்துத் தமிழகத்தில் நிலவியிருத்தல் கூடுமன்றோ?

நிறுவன வடிவான சமய நிலையங்கள் சங்க காலத்திய தமிழகத்தில் நிலவியதில்லை என்று கொள்வதில் பிழை எதுவும் இல்லை. அத்தகைய தமிழகத்தில் பல்வேறு சமய அமைப்புகள் புகுந்தன; வேரூன்றி நிலைக்க முயன்றன. ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமான சமயக் கோட்பாட்டைப் பின்பற்றிய நிலைமை அப்போது ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஒரே குடும்பத்தில் பல்வேறு அரசியல் கொள்கையுடையார் ஒருங்கிருந்து வாழும் காட்சியினை நாம் காண்கின்றோமன்றோ? அரசியல் தெளிவு—முடிவு—ஏற்படாத நாட்டில் இத்தகு காட்சிகள் இயல்பே யாகும். இதுபோன்றே சமய அமைப்புகளைப்பற்றிய தெளிவு ஏற்படாத அப்பழங் காலத்தில் பலவும் கலந்துள்ள ஒருமைக் காட்சி நிலவியிருத்தல் கூடும். திரு. மு. இராகவ ஐயங்கார் இந்நிலையினைத் 'தந்தை மதம் மகனுக்கும் உற்றார் மதம் சுற்றத்தார்க்கும் என்ற நியதி இல்லை' எனக் குறித்துள்ளார். சமரசம் தொலைந்து, போட்டியும் பூசலும் மிகுந்த பின்னைய காலங்களிலே அந் 'நியதி' ஏற்பட்டது.

அன்றைய தமிழகத்தின்கண் நிலவிய சமயங்களின் ஒற்றுமைப் பான்மையில் திளைத்தனர் இளங்கோவடிகள் என்பதோடு, சமயமாகவே அவர் போற்றிய மற்றொரு கோட்பாடும் சிலப்பதிகாரக் கதையினை (ஹட்சன் சொன்னவாறு) ஆராய்கின்றபோது புலப்படுகின்றது.

உரைசால் பத்தினிக்கு
உயர்ந்தோர் ஏத்தலும்

என்ற பதிகப் பகுதியும்

காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி
நாப்புலர வாடித்
தன்துயர் காணாத்
தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க்கு
இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட
இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம்
யாம்கண் டிலமால்

என்ற கவுந்தியடிகளின் கூற்றும் ஒன்று மற்ற வெற்றுரைகள் என்று கொள்ளத் தக்கன அல்ல.

'பெண்ணிற் பெருந்தக்கது இல்' எனவும் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' எனவும் இயம்பிய வள்ளுவர் வழி வந்த இளங்கோவடிகள், கண்ணகி

யின் வாழ்வினை உருவாக்கும்போது பத்தினி வழிபாடு ஆகிய ஒரு புதுச் சமய நெறியினையும் வகுக்கின்றார். அப்பத்தினிக்குரிய தோத்திரமும் அவரே பாடினார்.

கொங்கச் செல்வி
குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை
செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய்
உலகிற் கோங்கிய
திருமா மணி'

என்பது பத்தினித் தெய்வத்திற்குச் சூட்டிய திருவாசகம்.

அமரிலே வீரத்தை நிலைநாட்டும் ஆடவர்க்குக் கல்லெடுப்பது பண்டைய இலக்கியங்களில் நாம் காண்பது ஒன்றாகும். தொல்காப்பியம் இந்நடுகல் விழாவின் சிறப்பினைப் பலபட விரித்துரைக்கக் காணுகிறோம். வீரரின் பீடும் பெயரும் எழுதி நாட்டும் நடுகல் தமிழகத்தின் வீரவழிபாட்டுக்குத் தக்க பெருமிதமூட்டும் சான்றாகும். 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்று பாடிய பழம்புலவன், அவ்வாடவரே மனையுறை மகளிர்க்கு உயிர் என்றும் பாடினன். ஆயின், ஆடவர்க்குக் கல் நாட்டிப் போற்றிய நாம், பெண்டிர்க்குச் சிறப்புத் தாராதுபோதல் இழுக்கன்றோ? இவ்வாறு கருதியே இளங்கோவடிகள் கண்கண்ட தெய்வமாகிய பத்தினிக்குக் கோயிலெடுக்கிறார். பத்தினிக் கல் இளங்கோவடிகளின் புதுப் படைப்பு; தான் போற்றிய ஒரு புதிய சமய நெறிக்கு அவர் தந்த காணிக்கை. தொல்காப்பியத்துள் நடுகல் விழாவில் காணப்படும் துறைப் பெயர்களையெல்லாம் காட்சிக் காதை முதலாகக் காதைகளின் பெயர்களாகவே அமைத்துச் சிறப்பிக்கின்றார். சிலம்பு காட்டும் புதிய சமயம் இது.

தொல்காப்பியத்தில் நடுகல் விழாப் பற்றிக் கூறும் சூத்திரப் பகுதி வருமாறு:

காட்சி கால்கோள்
நீர்ப்படை நடுதல்
சீர்த்தரு சிறப்பின்
பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று வகையிற்
கல்லொடு புணர.........

இதனுட் கூறப்பட்ட துறைப் பெயர்கள்: காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், வாழ்த்தல் என ஐந்தாகும். கண்ணகிக்குக் கோயிலெடுத்துச் சிறப்பிக்கும் வஞ்சிக் காண்டம் ஏழு பகுதிகளாலாயது. குன்றக் குரவை முதலது. வஞ்சிக் காண்டத்தின் முகப்பாக உள்ள இப் பகுதி மதுரைக் காண்டத்தோடு தொடர்புபடுத்திக் கதையோடு இணைக்கும் முன்னுரைப் பகுதியாய் அமைகின்றது. இறுதிக் காதை வரந்தரு காதை என்பதாகும். வீரர்க்கு நடுகல் எழுப்பிப் போற்றிய அளவோடு நிறுத்துவதுபோல் கண்ணகி கோயிலையும் நிறுத்த இளங்கோவடிகள் விரும்பவில்லை. கண்ணகியார் 'கடவுள் நல்லணி காட்டிய' பான்மை தோற்றி, அம்மங்கை நல்லாளின் தெய்வப் பெற்றி நிறுவ நினைக்கிறார். அத்தெய்வம் வரம் நல்கும் சிறப்போடு முடிப்பதே தம் பத்தினிச் சமய நெறிக்கு ஆக்கம் தருவதென அவர் எண்ணியிருப்பது இயற்கையேயன்றோ? எனவே, வரந்தரு காதை இறுதியில் நிற்கிறது. குன்றக் குரவையாகிய முன்னுரைக்கும் வரந்தரு காதையாகிய முடிவுரைக்கும் இடையேயுள்ள பகுதிகள்: காட்சிக் காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக் காதை என ஐந்தாம். தொல்காப்பிய இலக்கணத்தோடு பொருந்தி நிற்கும் இயல்பு காண்க.

இதுகாறும் கண்டவற்றால் இளங்கோவடிகளின் காப்பியத்தில் சமயத் தத்துவங்கள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்று தெளிந்தோம். சமய ஒற்றுமையில் திளைக்க விரும்பும் இளங்கோவடிகள் மறைமுகமாகவே சைன மேன்மையைக் குறிப்பிக்கிறார் என்பதும், பத்தினி வழிபாடு என்ற புதிய சமயத்தை நிறுவுகிறார் என்பதும் மனங்கொள்ளத் தக்கன.

காந்தி கற்பித்த கலை

திரு. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, M. A., B. L.

நான் சென்னைப் பல்கலைக் கழகத்திடம் எம். ஏ. பட்டம் பெற்றவன். எம். ஏ. என்பது மாஸ்டர் ஆப் ஆர்ட்ஸ் என்னும் ஆங்கிலச் சொற்றொடரின் சுருக்கம். அச் சொற்றொடரின் பொருள் கலைகளில் வல்லவன் என்பதாகும். இதை எழுதியதும் எத்தனை கலைகளில் நீர் வல்லவர் என்று கேட்டுவிட வேண்டாம். இன்ன கலைகள் என்று கூறாததால் எல்லாக் கலைகளிலும் வல்லவன் என்றுதான் அர்த்தமாகும்.

அப்படியானால் எனக்கும் என்னைப் போல் எம். ஏ. பட்டம் பெற்றவர்கட்கும் எல்லாக் கலைகளையும் கற்றுக் கொடுக்கிறார்களா என்றால் அதுதான் இல்லை. ஒருவருக்குச் சரித்திரம், ஒருவருக்குத் தத்துவம் என்று இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு கலை வீதம் தான் கற்றுக்கொடுக்கிறார்கள். அப்படியிருக்க என் கலைகளில் என்று பன்மைப் பதத்தை உபயோகிக்கிறார்கள் என்று கேட்கலாம். அது எனக்கும் விளங்காத விஷயம்தான்.

சரி, அதுதான் போகட்டும், ஒரு கலை கற்றுக்கொடுப்பதாகக் கூறுகிறார்களே, அதையேனும் சரியாகக் கற்றுக் கொடுக்கிறார்களா? அதுவுமில்லை. எந்தக் கலையைக் கற்றுக்கொடுப்பதாகக் கூறுகிறார்களோ அந்தக் "கலை"யைக் கற்றுக் கொடுப்பதில்லை. அந்தக் கலை சம்பந்தமான விஷயங்களை மட்டுமே தான் கற்றுக் கொடுக்கிறார்கள். அந்த விஷயங்கள் உண்மையானவைதானா, ஏற்றுக்கொள்ளத் தகுந்தனவா என்று ஆராய்ந்து உண்மை காணக்கூடிய அறிவு தருவதுமில்லை. அந்த அறிவை உண்டாக்கிக்கொள்வதற்கான திறமையைத் தருவது மில்லை. இது நம் நாட்டுப் பாடசாலைகளில் மட்டுமே என்று எண்ணவேண்டாம். சகல நாடுகளிலும் நடப்பது இதுவேதான். அதனால்தான் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர், "கல்வி அதிகாரிகளுடைய நோக்கமெல்லாம் பல விஷயங்களைக் கற்றுக்கொடுப்பதேயன்றி அறிவை வளர்ப்பதோ, அறிவதறிந்து சுயமாக உண்மை காண்பதற்கான வழிகளைக் காண்பிப்பதோ அன்று" என்று கூறுகிறார். "அரசாங்கத்தின் குறிக்கோள் மக்களிடம் தொழில் திறமை உண்டாக்குவதேயன்றி விரிந்த நோக்கு உண்டாக்குவதன்று" என்றும் அவர் கூறுகிறார்.

அதனால்தான் இலக்கியம் கற்பவரிடம் இலக்கியம் என்பது யாது, அதை எதற்காகக் கற்கவேண்டும், அது வாழ்வில் எந்த விதத்தில் பயன்படும் என்று கேட்டால் சரியான விடை கூறமாட்டார். அவர் இலக்கியம் கற்பதெல்லாம் பரீட்சையில் தேறுவதற்காக மட்டுமே. அதனாலேயே கல்வி கற்பவரில் பெரும்பாலோர் பட்டம் பெற்றபின் தாங்கள் கற்ற இலக்கியங்களைக் கண்ணெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை. கண்ணெடுத்துப் பார்ப்பவரும் இலக்கியம் என்பது எதற்காக ஏற்பட்டதோ அதற்காகப்

பயன்படுத்தாமல் வேறு காரியங்களுக்கே பயன்படுத்துவார். திருக்குறள், கம்பராமாயணம் போன்ற தலை சிறந்த இலக்கியங்களைக் கற்றாலும் அவற்றைப் பிரசங்கம் புரியவும் கட்டுரை எழுதவும் தர்க்கம் செய்யவுமே பயன்படுத்துகின்றோம். ஆனால் இலக்கியங்களை இவ்விதமாக மட்டுமே உபயோகிப்பவர்கள் இலக்கியத்தால் அடையவேண்டிய பயனை அடைந்தவராகார் என்று ஆர்னல்ட் பென்னட் என்னும் பெரு நாவலாசிரியர் தமது "இலக்கியச் சுவை" என்னும் எழில் மிகுந்த சிறு நூலில் கூறுகின்றார்.

இலக்கியத்தைப் பயனுறப் படித்தவன் என்பதற்கு இரண்டு அடையாளங்கள் கூறுகின்றார். ஒன்று அழுக்காறு கோபம் முதலியன எழா வண்ணம் மனத்தை அடக்குவது. ஆம், அதை எண்ணியேதான் நம்முடைய தாயுமானவரும், "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றுமறிவில்லாத என் கர்மத்தை என் சொல்கேன், மதியை என் சொல்லுகேன், வெல்லாமல் எவரையும் மருட்டிவிடவகை வந்த என் முத்தி தருமோ," என்று வருந்துகிறார்.

ஆர்னல்ட் பென்னட் கூறும் இரண்டாவது அடையாளம் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்கள் உடனுக்குடன் அவைகளைத் தெளிவுபடுத்தக் கூடிய இலக்கியப் பகுதிகள் நினைவுக்கு வருவிப்பதாகும். ஏதேனும் சொத்து சம்பந்தமாக என் தம்பி என்னுடன் சண்டையிடுவானானால் அப்பொழுது, ராமனைக் காட்டுக்குப் போகும்படி தசரதர் சொன்னதாகக் கைகேயி ராமனிடம் சொன்னபொழுது அவன், "மன்னவன் பணியன்றாகில், நும்பணி மறுப்பேனோ, என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ," என்று அவளிடம் சொன்ன மொழிகள் என் நினைவுக்கு வந்து எனக்கு அறிவு புகட்டாதிருப்பின் நான் கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்தவன் என்று புகழ் பெற்றிருப்பினும் யாது பயன்?

அதுபோல என்னைவிடச் சகல அம்சங்களிலும் தாழ்ந்தவர் யாரேனும் என்னை இகழ்ந்தால் அப்பொழுது நான் உள்ளங்கவர்ந்தெழுந் தோங்கும் சினத்துக்கு ஆளாகாமல், "சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்" என்னும் அருமைத் திருக்குறள் என் நினைவிற்கு வந்து எனக்கு அமைதி தராதிருப்பின் என் குறள் ஞானம் எதற்கு ஆகும்?

விஞ்ஞானம் கற்ற எம். ஏ. யின் விஷயமும் இதுபோன்றதே. விஞ்ஞான விஷயங்கள் 'வேணத்தனை' கற்றிருப்பார். அவற்றைப் பயன்படுத்தி விதவிதமான சௌகரியங்கள் உண்டாக்குவதற்கான அறிவையும் படைத்திருப்பர். ஆயினும் அவரிடம் விஞ்ஞான உணர்ச்சி உண்டாயிருக்குமோ என்றால் அதுதான் சூன்யம். விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியரிடம் விஞ்ஞான உணர்ச்சி உண்டாயிருப்பின், சூரிய கிரகணத்தன்று தர்ப்பைப் புல்லை எடுத்துக்கொண்டு கடற்கரைக்குப் புறப்படுவாரா? யாரேனும் ஒருவர் இறந்த நாளில் ஒரு வால்-நட்சத்திரம் தோன்றுமாயின், அவர் மரணத்தைக் குறிப்பதற்காகவே அது தோன்றிற்று என்று எண்ணுவாரா?

தத்துவ நூல் கற்கும் கலா வல்லவரும் இதுபோலவே நடந்து கொள்கிறார். "அவர் கற்றதெல்லாம் தத்துவ சாத்திரப் பிரச்னைகளைப் பற்றிச் சர்ச்சை செய்வதொன்றே" என்றும் "ஆனால் உள்ளத்தை அடக்கியவரே உண்மையான தத்துவ சாஸ்திர வல்லவர்" என்றும் ஆல்டுஸ் ஹக்ஸிலி என்னும் உலகப் பிரசித்திபெற்ற ஆங்கில அறிஞர் தமது "குறிக்கோளும் வழியும்" என்னும் நூலில் கூறுகின்றார்.

காண்ட், நீட்சே, ஹெகல் என்ற ஜெர்மன் தத்துவ அறிஞர்கள் அதிக

மான கீர்த்தி பெற்றவர்கள்தான்; அற்புதமான அறிவு படைத்தவர்கள் தான்; ஆனால் அவர்கள் தத்துவ உணர்ச்சி உடையவர்களாயிருந்தார்களோ? இல்லை. நீட்சே உணவை அளவுக்கு மிஞ்சி உண்டுவிட்டு நோயாய் வருந்துவார். காண்ட் நண்பர்கள் இறக்கும் தறுவாயிலுங்கூட அவர்களைப்போய்ப் பார்க்கமாட்டார். ஹெகல் தம்முடைய தத்துவ நூலே தலைசிறந்தது என்று சாதிப்பார்.

ஆகவே, பல்கலைக் கழகங்கள் பகட்டான பட்டங்கள் பல பலவாக வழங்கினும், கற்பதெல்லாம் நிற்பதற்கே என்னும் தனிப் பெரும் விஷயத்தை மட்டும் கற்றுக் கொடுக்கிறார்களில்லை. இக் காலத்தில் அதிகமான கலை வல்லார் காணப்படும் நாடு அமெரிக்கா தான். அந்த நாட்டில் பிரின்ஸ்டன் என்னும் மிகச் சிறந்த பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக இருக்கிறார் விஞ்ஞான சிரோமணியான ஐன்ஸ்டீன் என்பவர். அவர் தமது நண்பர் ஒருவர்க்கு எழுதிய கடிதமொன்றில், "ஆம் கல்வியா? கல்வியை அளவுக்கு அதிகமாகத்தான் கற்றுக்கொடுக்கிறார்கள், அமெரிக்கப் பாடசாலைகளில். ஆனால் கல்வி கற்பதற்குரிய ஒரே அறிவான முறை, தம்மைப் பார்த்து மாணவர்கள் நடந்துகொள்ளுமாறு ஆசிரியர் தமது வாழ்க்கையை நடத்துவதே" என்று கூறுகிறார்.

எங்கும் நூற்கல்வி அதிகம்தான்; எங்கும் கலை என்பதே பேச்சு. ஆனால் எல்லாக் கலைகளுக்கும் அடிநிலையான கலையைத்தான் காணோம். 'எந்தக் கலை மனிதனை மனிதன் ஆக்குமோ அந்தக் கலையைக் கற்பிக்கும் பல்கலைக் கழகத்தைக் காணோம்' என்று மகாத்மா காந்தி அடிக்கடி கூறிவந்தார்.

ஒரு சமயம் காந்தியடிகள் திரு. ஜி. ராமச்சந்திரனுடன் கலைகள் சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, "அப்பா, எனக்கு வயதாயிற்று. நான் கூறுவது இதுதான்: தூய வாழ்வே உண்மையானதும் உன்னதமானதுமான கலையாகும்" என்று கூறியிருக்கிறார். இந்தக் கலையைத்தான் அவர் இரவு பகலாக இந்திய மக்களுக்குக் கற்பித்து வந்தார்.

காந்தியடிகள் என்னைப்போல் எம். ஏ. பட்டம் பெற்ற கலை வல்லுநர் அல்லர். சாதாரண மெட்ரிகுலேஷன் பரீட்சை மட்டுமே தேறியவர். ஆயினும் அவரே உண்மையான கலா வல்லவர்.

அவரே கூறுகிறார், "நான் சாத்திரங்களைப் படியாதவன், ஆயினும் சாத்திரங்களின் உட்கருத்தை அறிந்தவன் என்று தைரியமாகக் கூறுவேன். நான் கலைகளைக் கற்காதவன். ஆயினும் என் வாழ்வு உண்மையிலேயே போதுமான கலை நிரம்பியது என்று தைரியமாகக் கூறுவேன்" என்று.

மனிதன் மனிதனாக வாழவேண்டிய முறையில் வாழ்வதே கலைகளின் உயிர் நாடி. அதுவே அறிவின் சிகரம். அது யாதெனில் தன்னைத் தான் அறப் பெறுவதே யாகும். அது எளிதான காரியமன்று. ஆனால் அதைக்கொண்டு அது சாத்தியமானதன்று என்று எண்ணவேண்டியதில்லை. மக்களில் ஒருவர்க்குச் சாத்தியமானது எல்லோருக்கும் சாத்தியமானதே.

சுயநலம் விட்டுப் பொதுநலம் கருதும் மனிதன் ஆவதற்கு காந்தியடிகள் கூறும் முறை எளிய வாழ்க்கையை மேற்கொள்வதாகும். எளிய வாழ்க்கை என்பது பிறர் உழைப்பை உபயோகியாமல் வாழ்வதே யாகும். தாம் முதன் முதலில் எழுதிய தமது "இந்திய சுயராஜ்யம்" என்னும் நூலில் எளிய வாழ்க்கையை வாழ்ந்து அதை விளக்கும் "எளிய வாழ்க்கை" என்னும் நூலை எழுதியுள்ள எட்வர்ட் கார்ப்பெண்டரைக் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உண்மையை எண்ணியேதான் காந்தியடிகள் பிறந்த சகாப்தத்தில் நானும் பிறக்கக் கொடுத்துவைத்தேன் என்று மகிழும் ஐன்ஸ்டீன், "நான் தினந்தோறும் நூறு முறை மறவாமல் நினைவுகூர்ந்து கொள்வது யாதெனில் பிறர் உழைப்பே என் உயிர்நிலை என்பதும், பிறர்க்கு உழைப்பதே என் கடன் என்பதுமாகும்" என்று கூறுகிறார்.

அவரைப்போல் அனுதினமும் ஞாபகமாக வாழ்ந்துவந்தால் காந்தியடிகள் கூறும் அடிநிலைக் கலை வாழ்வு கைகூடுவதாகும். அங்ஙனம் எளிய வாழ்க்கை வாழ்பவரே உண்மையில் வாழ்பவர் ஆவர். அவர்கள் மக்கள் மட்டுமல்லர். தேவர்களுமே யாவார்.

"வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்". இவ்வாறு வாழ்வது சிரமமே யாயினும் இவ்வாறு வாழ வேண்டுமென்ற எண்ணம் இடைவிடாமல் நம் மனத்தில் இருந்துகொண்டிருந்தால் போதும். அந்த எண்ணம் உடையவரே பண்பாடு உடையவர் என்று டேவிஸ் என்னும் சிறந்த ஆசிரியர் தமது 'பண்பாடு' என்னும் நூலில் கூறுகிறார்.

இந்த எண்ணம்—எளிய வாழ்க்கை வாழவேண்டும்—பிறர் உழைப்பை உபயோகிப்பதைக் குறைக்கவேண்டும்—பிறரிடம் அனுதாபம் உடையவராக நடந்துகொள்ளவேண்டும்—சுய நலத்தைச் சுருக்கவேண்டும் என்ற—இந்த எண்ணம் உடையவர் சில சமயங்களில் தவறினாலும் பாதகமில்லை. "வீழாமையன்று பெருமை, விழுந்தொறும் தாழாதெழுதலே" என்று ஆங்கிலக் கவிஞர் கோல்ட்ஸ்மித் கூறுவது அவர்க்கு ஊக்கமளிக்கும்.

அந்த எண்ணம் சிறிதுமில்லாதவர் எந்தப் பட்டங்கள் பெற்றிருப்பினும் அவர்கள் "அணிகள் வேய் பிணத்தோடொப்பார், அன்னவர் வாழ்க்கை பாழாம்" என்று பாரதியார் கூறுகின்றார்.

ஆதலால் இந்திய மக்களாகிய நாம் அனைவரும் காந்தியடிகள் கற்பித்த இந்தக் கலையைக் கைக்கொள்வோமாக.

குழந்தைகளுக்கு திரைப் படங்கள்

அமெரிக்காவி லிருக்கும் பெரும்பாலான திரைப்படக் கொட்டகைகள் வாரந்தோறும் குழந்தைகளுக்காக விசேஷ 'சினிமாப்' படங்களைக் காட்டுகின்றன. படங்களை, அமெரிக்கத் திரைப்படக் கழகம் குழந்தைகளின் சினிமா நிலையம் என்ற ஸ்தாபனத்தின்மூலம் இலவசமாகக் கொடுத்து உதவுகிறது.

— (யூஸிஸ்)

பனியை அளப்பது

ஒவ்வொரு மாரிக் காலத்திலும் 1000-க்கும் அதிகமானவர்கள் அமெரிக்காவில் பெய்யும் பனியிலிருக்கும் நீரின் அளவைக் கணக்கெடுக்கிறார்கள். இப் புள்ளி விவரங்கள் விவசாயிகளுக்கும், மின்சார நீர் நிலையங்களுக்கும் அடுத்துவரும் கோடையில் எவ்வளவு நீர் கிடைக்கும் என்று தெரிந்துகொள்ள உபயோகமாக விருக்கிறது.

— (யூஸிஸ்)

மாமிசம் தின்னிச் செடிகள்

திரு S. சிவசுப்பிரமணியன், B. Sc.

மிருகங்களில் சாக பட்சணிகளையும் மாமிச பட்சணிகளையும் எல்லோருக்கும் நன்ருய்த் தெரியும். ஆனல் செடிகளில் மாமிச பட்சணி அல்லது மாமிசந்தின்னி என்ருல் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஏனென்ருல் செடிகளுக்கு ஆகாரப் பொருள்கள் பூமியிலுள்ள நீரும், காற்றிலுள்ள கரியமிலவாயுவும் என்றே நாம் சாதாரணமாக நினைக்கிருேம். ஆனல் தாவர உலகில் மாமிச உணவையுந் தின்னும் சில விசித்திரச் செடிகள் இருக்கின்றன. ஓடியாடி வேட்டையாட முடியாதபடி ஒரே இடத்தில் நிலையாக நிற்கும் இச் செடிகளால் மாமிச உணவை எப்படி அடைய முடியும் என்று நினைக்கலாம். ஆனல் இவ் விசித்திரச் செடிகள் முளைத்த இடத்தில் இருந்து கொண்டே பூச்சிகளைப் பிடித்துக் கொன்று தின்னுகின்றன. அவைகள் பூச்சிகளைப் பிடிக்கும் விதம் தாவர சிருஷ்டியில் காணப்படும் விந்தைகளில் ஒன்றென்று சொல்லவேண்டும். உணவுப் பூச்சிகளைப் பிடிப்பதற்கென்றே இச் செடிகளுக்குப் பொறிகள் வலைகள் போன்ற உறுப்புக்கள் இருக்கின்றன. இவ் வகைச் செடிகளில் இலைகள்தான் பூச்சி பிடிக்கும் உறுப்புக்களாக மாறி அமைந்திருக்கின்றன.

மாமிசந்தின்னிச்செடிகளில் பல வகைகள் உண்டு. அவைகளுள் வீனஸ் பொறிச் செடி (Venus Fly-Trap) ஒன்று (படம் 1). இது ஒரு சிறு செடி. இலைகள் வட்டவடுக்காக அமைந்துள்ளன. இலைகள் ஈ போன்ற சிறு பூச்சி



படம் 1. சடேரென்று இலையை மூடிப்பூச்சியைப்பிடித்துத் தின்னும் "வீனஸ்பொறிச்செடி" (VENUS FLY-TRAP

களைப் பிடிப்பதன்பொருட்டு எலிப் பொறிபோன்ற ஒரு சாதனமாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு இலைக்கும் இரண்டு பிளவுகள் இருக்கின்றன. இலையின் நடு நரம்பு இரண்டு பிளவுகளுக்கும் கீலாக அமைந்து இணைக்கின்றது. இலையின் மேற் புறத்தில் ஒவ்வொரு பிளவிலும் மூன்று உணர்வு ரோமங்கள் (Sensitive Hair) நீட்டிக்கொண்டிருக்கும். சிறு பூச்சிகள் இலையின் மீது உட்காரும்போது இந்த உணர்வு ரோமங்களைத் தொட நேரிடுகிறது. பூச்சியின் உடல் இந்த உணர்வு ரோமங்களின்மேல் பட்டதோ இல்லையோ உடனே இலையின் இரண்டு பிளவுகளும் சடேரென்று பூச்சியை நடுவில் வைத்துக் கெட்டியாக மூடிக் கொள்ளும். எலிப் பொறியில் எலி வந்து தீனித் தட்டைத் தொட்டவுடன் பற்களையுடைய இரு பாதிகளும் எலியை நடுவில் வைத்துத் திடீரென்று கௌவிக் கொள்ளுகின்றன அல்லவா, கிட்டத்தட்ட அதுமாதிரி தான். பூச்சி மாட்டிக் கொண்டதும் பொறியில் ஜீரண நீர் உண்டாகிப் பூச்சியை ஜீரணம் செய்கிறது. ஜீரணமான சத்தை இலை உறிஞ்சிக் கொள்ளும். பிறகு இலையின் இரண்டு பிளவுகளும் முன்போலப் பிரிந்து நின்று கொள்ளும்.

வெண்ணெய்ப் பொறிச் செடி (Butterwort) என்பது இன்னொரு மாமிசந் தின்னிச் செடி. இதுவும் வட்ட வடுக்காக அமைந்துள்ள இலைகளையுடைய ஒரு சிறு செடி (படம் 2). இதன் இலைகள் ஒவ்வொன்றின் மேற்பரப்பிலும் வெண்ணெயைப் போன்ற பிசுபிசுப்பான மஞ்சள் நிறமுள்ள ஒரு பொருள் இருக்கிறது. சிறு பூச்சிகளில் ஏதாவதொன்று இந்தப் பிசுபிசுப்பான இலையில் உட்கார்ந்தால் அதில் ஒட்டிக் கொள்ளும்; பிறகு அதை விட்டுப்போக முடியாது. பூச்சி மாட்டிக் கொண்டதும் இலையின் ஓரங்கள் மேல் பக்கமாகச் சுருண்டுவந்து பூச்சியை மூடிக் கொள்ளும். இலையிலிருக்கும் ஜீரண நீர்ச் சுரப்பிகள் (Degestive Glands) ஜீரண நீரைச் சுரந்து பூச்சி ஜீரணிக்கப்படும். ஜீரணிக்கப்பட்ட சத்தை இலை உறிஞ்சிக் கொள்ளும். பிறகு இலை முன்போலப் பிரிந்து நின்றுகொள்ளும்.

யுட்ரிகுலேரியா (Utricularia) என்பது மாமிசந் தின்னிச் செடிகளில் மற்றொன்று. இதைப் பைச் செடி (Bladderwort) என்று குறிக்கலாம். இது தண்ணீரில் அமுங்கி வாழும் ஒரு செடி (படம் 3.) இது பூச்சிகளைப் பிடிக்கும் முறை வேறொரு மாதிரியானது. நீரில் வாழும் சிறு பூச்சிகளையும் மற்றும் சில சிறு பிராணிகளையும் பிடித்துத் தின்பதற்காகச் சிறு பைகள் போன்ற உறுப்புக்கள் இதன்

படம் 2 BUTTERWORT அல்லது "வெண்ணெய்ப்பொறிச்செடி"



படம் 3

நீரில் வாழும் UTRICULARIA அல்லது 'பைச்செடி. வலது புறத்தில் பூச்சியைப்பிடிக்கும் பையின் அமைப்பு பெரிதாக்கி வரையப்பட்டிருக்கிறது

இலைகளில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பையினுடைய வாயினுள் ஒரு திட்டிக் கதவு (Valve) இருக்கிறது. இத் திட்டிக் கதவு உட்பக்கம் திறக்குமே தவிர வெளிப் பக்கம் திறவாது. நீரில் வாழும் சில சிறு பிராணிகள் நீந்திச் சென்றுகொண்டிருக்கும் பொழுது தவறி இவ் வலைப் பைக்குள் புகுந்துவிடும். புகுந்தவுடன் கதவு மூடிக்கொள்ளும். உட்சென்ற பிராணிகள் வெளிவர முடியாமல் அங்கேயே இறந்துவிடும். பையினுள் உள்ள சுரப்பிகள் ஜீரண நீரைச் சுரக்கவே, அவை ஜீரணிக்கப்படும். ஜீரணித்த சத்து செடியினால் உறிஞ்சப்படும்.

ஜாடிச் செடி (Pitcher Plant) என்பது மாமிசந் தின்னிச் செடிகளில் இன்னொரு வகை. இதுவும் வட்ட அடுக்கு இலைகளுள்ள ஒரு சிறு செடி (படம் 4). இதன் பூச்சிகளைப் பிடிக்கும் இலைகள் காம்பின் நுனியில் ஜாடி போன்ற உருவத்தையுடையனவாய் மாறுபட்டிருக்கின்றன. ஜாடி போன்ற அமைப்பின் உட்பக்கச் சுவரில் ஜீரண நீர் உண்டாக்கும் சுரப்பிகள் (Glands) உண்டு ஜாடியில் ஜீர்ண நீர் நிரம்பியிருக்கும். ஜாடியின் வாய்க்குமேல் மூடி போன்ற ஒரு சிறு உறுப்பு முழுவதும் மூடாமல் நிற்கிறது. வாய் ஓரம் வழவழப்பானது. வாயின் உட்புறத்தில் தேன் சுரக்கும் சுரப்பிகள் இருக்கின்றன. சிறு பூச்சிகள் தேன் உண்பதற்காக ஜாடியின் வாய் விளிம்பில் உட்கார்ந்து வாயின் உட்பக்கம் இருக்கும் தேனையடைய முயற்சிக்கும் போது விளிம்பு வழவழப்பாக இருப்பதால் வழுக்கி ஜாடியினுள் விழுந்து அங்குள்ள திரவத்தில் மூழ்கி இறக்கிறது. பிறகு ஜீரண நீரினால் செரிக்

கப்பட்டு, செரித்த சத்து செடியினால் உறிஞ்சப்படுகிறது.

ஆங்கிலத்தில் Sundew என்று சொல்லப்படும் பனித்துளிச் செடி மற்றொருவகை. (படம் 5). இதன் இலை ஒவ்வொன்றிலும் மயிர்போன்ற உறுப்புக்கள் நீட்டிக்கொண்டிருக்கும். மயிரின் நுனியில் ஒரு சிறு பளிங்கு போன்ற பாகம் இருக்கிறது. இது ஒருவித திரவத்தை யுண்டாக்கும் சுரப்பி. இங்கே சுரக்கப்படும் திரவத்துளிகள் மயிர் நுனிகளில் நிற்பது வெயிலில் பனித்துளிகள் போல் பளபள வென்று காணப்படும். அதனால் தான் இச் செடிக்கு இப்பெயர் வந்தது. ஏதாவதொரு சிறு பூச்சி இதன் இலையில் உட்கார்ந்தால் அது பிசுபிசுப்பான நுனிகளுள்ள இந்த மயிர்களிடையே மாட்டிக் கொள்ளும். பூச்சி உட்கார்ந்ததும் எல்லா மயிர்களும் பூச்சியை நோக்கி வளைந்து அதை இறுகக் கட்டிக் கொள்ளும். பிறகு மயிர் நுனிகளில் ஜீரண நீர் சுரந்து பூச்சி செரிக்கப்பட்டு சத்து உறிஞ்சப்படுகிறது. கடைசியாக எல்லா மயிர்களும் முன்பு இருந்த நிலையை யடைகின்றன. பூச்சியின் ஜீர்ணிக்கப்படாத பாகங்கள் ஏதாவ திருந்தால் காற்றில் அடித்துக் கொண்டு போகப்பட்டுவிடும். சாதாரணமாக பூச்சி ஜீரணமாகிச் சத்து உறிஞ்சப்படுவதற்குச் சில தினங்கள் ஆகும்.

மேலே சொல்லப்பட்டவைகளைப் போல இன்னும் பலவகை மாமிசபட்சணிச் செடிகள் உண்டு.

இச் செடிகளெல்லாம் பூச்சிகளை மட்டும் தின்று உயிர் வாழ்கின்றன என்று நினைத்துவிடக் கூடாது. சாதாரணச் செடிகளைப்போலவே இவைகளும் தண்ணீரையும் காற்றையும் உட்கொண்டு தங்கள் ஆகாரத்தைச்



படம் 4 PITCHER PLANT அல்லது ஜாடிச் செடி. வலது புறத்தில் பூச்சியைப் பிடிக்கும் 'ஜாடி' ஒன்று பெரிதாக்கிக்காட்டப்பட்டிருக்கிறது



படம் 5 SUNDEW என்னும் "பனித்துளிச்செடி" மேலே பூச்சியைப் பிடித்துத்தின்று கொண்டிருக்கும் ஓர் இலை பெரிதாக வரையப்பட்டிருக்கிறது

செய்துகொள்கின்றன. இவைகள் பூச்சிகளையும் பிடித்துத் தின்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இவைகள் வளரும் இடங்களில் ஆகாரத்திற்கு வேண்டிய நைட்ரஜன் உப்புகள் (Nitrates) கிடைப்பதில்லை. அதனால் நைட்ரஜன் பற்றாக்குறை (Nitrogen deficiency) ஏற்படுகிறது. இந்தப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து கொள்வதற்காகத்தான் இச்செடிகள் பூச்சிகளைப் பிடித்துத் தின்னுகின்றன — பூச்சிகளின் உடலில் உயிரகச் சத்து அதிகமாக இருக்கிறது. 'சைவ' உணவு சாப்பிடும் நம்மில் சிலர் உடல் ஊட்டத்துக்காக முட்டை சாப்பிடுகிறார்களல்லவா அதுமாதிரி என்று வைத்துக் கொள்ளலாம்!

'கலைக்கதிர்'

ஆண்டுச் சந்தா ரூ. 6

கலையின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்

தொடக்க நிலை

திரு. தி. கோயில் பிள்ளை, M. A., M. ED.

"கற்றது கையளவு கல்லாதது உலகளவு" என்பது முதுமொழி. கல்வியும் அறிவும் வளராத பண்டைக் காலத்திலேயே நம் முன்னோர் கற்றதையும் கல்லாததையும் அளப்பதற்குக் கையையும் உலகையும் அளவுகோலாக ஆண்டுள்ளார்கள். ஆகவே தமிழ்ப் பண்பாட்டிற்கும் கல்வியை அளப்பதற்கும் முரண்பாடு ஏற்படுவதற்கு வழி யில்லை.

ஏறு தழுவதலால் ஆண்மையை அளவிடும் பண்பு நம் நாட்டதே. மேலும் சீதாபிராட்டியாரைக் கைப்பிடித்த இராமபிரான் தனுவை ஏந்தித் தம் ஆற்றலை அறிமுகப் படுத்தினார். திரௌபதியை மனைவியாகக் கொள்ள அர்ச்சுனன் மச்ச யந்திரத்தை வீழ்த்தினான். மேலும் சிங்கத்தின் உடலும் பெண்ணின் தலையுங் கொண்ட சிவிங்க்ஸ் (Sphinx) இட்ட கடினமான கேள்விகளையும் விடுகதைகளையும் விடுத்த பேர் பெற்ற ஈடிப்பஸ் (Oedipus) பழங்காலத்தில் கிரேக்க அறிவின் அளவுகோலால் பெருமையுற அளவிடப்பட்டவனாவான். இவ்வாறே விவிலிய நூலிலும் சிம்சோன் சிங்கத்தினிடமிருந்து தேன் எடுத்து அதைக் கொண்டு ஒரு விடுகதை யமைத்து, ஏழு நாட்களாகப் பெலிஸ்தரின் குமாரரைத் திகைக்க வைத்த கதை காணப்படுகிறது. அது அக்காலத்து ஆற்றலின் அளவுகோலின் பெருமைக்குச் சான்றாகும்.

ஆனால் இவை உண்மையில் ஆற்றலுடைய யாரோ ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் கருவிகளாகத் திகழ்ந்தனவே யொழிய, சோதனையிலீடுபடும் அனைவரின் ஆற்றலையும் அளப்பதற்கு ஏதுவாக அமையவில்லை. தனுவைத் தூக்கமுடியாதோரின் ஆற்றல்தான் என்ன என்பதையாவது மச்ச யந்திரத்தை அம்பினால் துண்டிக்காதவருக்கு எத்துணை அளவுதான் வில்வித்தை தெரியும் என்பதையாவது அறிவதற்கில்லை. இந்த நிலையில் அவற்றை ஏற்ற அளவுகோல்களாகக் கருதுவதற்கில்லை. இவற்றில் ஒன்று வெற்றி; அல்லது தோல்வி: அனைவரையும் அளந்து கூறுதற்கு இவை உதவற்பாலன அல்ல. அறிவை இவற்றால் அறிவது ஆவதன்று.

அறிவிற்கு ஓர் அளவுகோல் காண முடியுமா? கல்லை அளக்கலாம்; காலத்தை அளக்கலாம். நிறுத்தலளவை ஏற்படுத்தலாம்; நீட்டலளவை அமைக்கலாம், ஆனால் கருத்தின் அளவைக் காண்பது எங்ஙனமாகும்? அதை அளப்பதற்கு ஓர் கருவிதான் ஏற்படுத்த முடியுமா என்று சிலர் ஐயுறுகின்றனர். அதற்கும் தக்க காரணம் இல்லாமலில்லை. கல் நாம் கண்ணாரக் காண்பது; அதைக் கையில் ஏந்தி நிறையிலிட்டு அளக்க எளிதாக முடிகிறது. கால்நடையில் சென்ற மக்கள், வழியின் அளவைக்

குறிப்பதற்குக் 'கூப்பிடு தூரம்' என்று அளவிட்டு, அதன்பின் காலம் செல்லச் செல்ல நுண்ணிய அளவு (Units) ஆக அதை வகுத்து ஒரு அங்குலம், ஒரு அடி, கஜம் என்று இவ்வாருக நுட்பமான அளவுகளை (Precise Units of Measurement) அமைத்திருக்கின்றனர். அவ்வாறே முற்காலத்தில் காலத்தை அளக்கும் அவசியத்தை உணர்ந்த நம் முன்னோர் சூரியன் உச்சம் அடைந்தபின், அல்லது அந்தி சாயும்வரை என்று குறிக்க ஆரம்பித்தனர். தற்காலத்தில் நாம் விநாடியளவையும், அதன் நுண்ணிய பாகத்தின் அளவையும் (Fraction of Seconds) அறிய அளவுகள் ஏற்பட்டு விட்டன. ஆகவே தூரத்தை அளவிடுவதற்கும் காலத்தை வரையறுப்பதற்கும், கனத்தை மதிப்பிடுதற்கும் வேண்டிய அவசியத்தை உணர்ந்த நாம், நாளாவட்டத்தில் வெகு நுட்பமாக அனைவரும் ஒத்துக்கொள்ளும் வகையில் அவற்றின் அளவு கோல்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனல், அறிவை இவ் வகையில் அளப்பதற்கு முற்பட்டால், ஏதோ நம் மனப் போக்குக்கு அது ஒவ்வவில்லை. அதைப் பற்றி ஓர் ஐயம் ஏற்படுகிறது. இது சாத்தியமா? இதில் ஈடுபட்டால் ஒருவேளை தவருன அளவு கோல்களை ஏற்படுத்திக் கயிற்றைக் கொண்டு கல்லை அளந்து, விநாடிகளைக் கொண்டு நாணயங்களை அளக்கும் ஓர் விநோத நிலை ஏற்பட்டு, அளக்க முற்பட்டதை அளக்காமலும், அளப்பதற்காக உன்னிய அறிவை அளக்காது வேறு ஏதோ ஒன்றை அளந்தும் தவருன முடிவையடைந்தால் என்ன செய்யலாம்? அந்த முடிவினுல் நன்மை ஏற்படுவதற்குப் பதிலாக ஒரு வேளை தீமைதான் விளையுமோ என்றும் ஓர் ஐயம் ஒரு சாரார் மனத்தில் எப்போதும் உறவாடிக்கொண்டிருக்கிறது. கிணற்றை அளக்கலாம்; ஆனல் அறிவுக் கிணற்றை அளப்பது முடியுமா? அல்லது முறையோ? — என்றெல்லாம் இவர்கள் மனம் புழுங்குகின்றனர். கிணறு வெட்டப் பூதமல்லவோ கிளம்பும்போலிருக்கிறது என்று அச்சமுறுகின்றனர்.

ஆனல் மற்ருெரு சாரார் நீட்டலளவையும் நிறுத்தலளவையும் முதலில் ஏற்படுத்துங்கால அது விநோதமாகத் தோன்றி இறுதியில் நுட்பமாக இப்போது அமையவில்லையா? கடுகின் கனத்தையும் காற்றின் வேகத்தையும் நாம் கடிதில் கணக்கிட வில்லையா?—என்றெல்லாம் பேசி, அறிவிற் சிறந்த தார்ன்டைக் (Thorndike) என்பார் சாற்றிய கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர். அதன் தத்துவம் யாதெனில் "இருக்கும் எப்பொருளும் ஒரு அளவில்தான் இருக்கிறது. அவ்வாறு ஒரு அளவில் அது இருந்தால் அதை நிச்சயமாக அளவிடலாம்'' என்பதாகும். சுருங்கக் கூறின் இதுதான் அறிவையோ, அல்லது கல்வியையோ அளக்க முற்படுபவரின் வேதமாகும். இதுதான் அவர்தம் துணிச்சலுக்குக் காரணம். இதனுல்தான் எங்ஙனமெனினும், மனத்தின் நுட்பப் பண்பாடுகளையும், உணர்ச்சி நிலைகளையும் நிர்மாணிக்கலாம் என்பது அவரது பிரமாணமாக அமைகிறது. இது செய்வது கடினம் என்று உணருகிருர்கள்; ஆனல் இறுதியில் செய்வது சாத்தியம் என்று நம்புகின்றனர். கிணற்றில் குதிக்காமல் நீந்தப் பழகுவது எப்படி என்பதுதான் அவர்கள் விடும் சவால். அவ்வாறு குதித்தால், ஆழ்ந்து மடிவோம் என்று பயந்தால் நீந்தப் பழகுவது முடியுமா? அதைக் கொண்டு தண்ணீரில் நீந்துவதே தவறு என்று கூறுவதுதான் பொருந்துமா?

இவ்வண்ணமே, குழவி பிறந்ததும் தவழுமா? தவழ்தற்கு முன் நடக்குமா? நடக்குமுன் ஓடுமா? தவழ முற்படும் குழவிகள் பிறழ்வதில்லையா? ஓடுவதற்கு முன் தவறி விழுவதில்லையா? இக் காரணங்களால் நடக்க

முற்படுவதே தவறென்றால் ஒவ்வுமா? ஆகவே இன்றியமையாதது என்று நாம் உணர்வதைப் பக்குவமாக அமைத்து அதனைச் சாதிப்பதுதான் சீரிய ஒழுங்கே ஒழிய, அவற்றின்கண் ஏற்படும் இன்றியமையாத தவறின் காரணமாக அவற்றைச் செய்யாது ஒழிப்பது முறையாகாது.

ஆகவே, உலகின்கண் காணப்படும் பல்வகைப் பொருள்களை ஆராய்ந்து அளவிட்ட நம் முன்னோர் அகத்தின் பொருளை அளவிட எண்ணி, குழந்தை பிறந்தபின் தவழ்ந்து, தள்ளாடி நடந்து மனிதனாக நடப்பதுபோல் பலவகைப்பட்ட அளவுகோல்களை அறிவுக்கு ஏற்படுத்தி யிருந்தனர்.

சீனர்கள் 4000 ஆண்டுகளுக்கு முன்பே அறிவுத்திறமையைப் பரிசோதிப்பதற்குச் சோதனைகளை ஏற்படுத்தியிருந்தனர். பள்ளிகளி விடும் சோதனைகள் பள்ளிகள் ஏற்பட்ட காலம் முதற்கொண்டு இருந்து வருகின்றன. உண்மையில் மனத்தின் சக்தியை அளவிட ஆரம்பித்தது பிற்காலங்களிலே யாகும். மின்சாரத்தை அளப்பது எவ்வாறு நேரடியாகச் சாத்தியப்படாதோ, அவ்வாறே அறிவின் நுட்பத்தையும் மனோ வல்லமையையும் அளப்பதற்கு நேரடியான மார்க்கங்களில்லை. அதற்கெனவே மறைமுகமான (Iudirect) பக்குவங்களை கையாளுதல் அவசியமாயிற்று.

அறிவிற்கு உறைவிடம் தலையென்பது பெரும்பான்மையோரின் கருத்தாதலால் ஆதியில் அதனையே அளவிட ஆரம்பித்தனர். இதனை முதலில் ஏற்படுத்தியவர் கால் (Gall) எனும் பெரியார் ஆவர். மூளையின் அளவு மண்டையில் தெரியும் என்பதும், மன வன்மையின் அளவு மூளையினால் அறியலாம் என்பதும் அவருடைய கொள்கைகள். மண்டை பெரிதாக இருந்தால் மன வன்மை அதிகமாக இருக்கும் என்பதன்று அவர் கூற்று. ஆனால் மண்டையோட்டையும் அதன் பரப்பின் அமைப்பையும் நுட்பமாக அளந்து ஆராய்ந்தால் மனோ சக்தியை அளவிடலாம் என்று ஆன்றோர் கருதினர். 18-வது நூற்றாண்டின் இறுதியில் இவரும், இவரது சீடரான ஸ்பர்ஸீம் (Spurzheim) என்பவரும் இதைப்பற்றி வெகு மும்முரமாகக் கற்பித்து வந்தனர். இதனால் 19-வது நூற்றாண்டின் துவக்கத்தில் இத் தலையளக்கும் தத்துவம் (Phrenology) தலை தூக்கித் தாண்டவமாடிற்று. ஒரு சமயம் ஒரு விருந்தில் பங்கெடுத்துக்கொண் டிருக்கும்போது, விருந்தினர் ஒருவர் தம் அறிவின் ஆற்றலைக் காண்பிக்க எண்ணி 'மில்டன் பேர் பெற்ற கவியல்லவா' என்று ஏதோ ஆழ்ந்த கருத்தைப் புதிதாக வெளிப்படுத்துவர்போல் கூறினாராம். அவண் அமர்ந்திருந்த சார்லஸ் லாம்ப் (Charles Lamb) எனும் அறிஞர் உடனே அவ்விருந்தினரின் "தலையைத் தடவ"த் தாம் விரும்புவதாகக் கூறினாராம்! மண்டை யோட்டை அளந்து மதிப்பிடுவதில் பயனில்லை என்று சிறிது காலத்தில் தெளிவாயிற்று.

இக் கொள்கையைக் கால் (Gall) வெளிப்படுத்துதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு லவட்டர் (Lavater) என்பவர் 1772-ம் ஆண்டில் முகத்தின் அமைப்புகளால் மனிதனை எப்படி அளவிடுவது என்று ஓர் சிறந்த கட்டுரை வெளியிட்டார். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றும் வெகு சிறப்பாகவும், முன் ஜாக்கிரதையோடும் ஏற்பட்ட நம் நாட்டு முதுமொழியை "அகத்தின் அளவை முகத்திலிடு" என்று மாற்றியமைத்தார் போலும் அப்பெரியார். மனிதனின் போர் வீரம் அவன் மூக்கின் வடிவத்தாலும் அமைப்பாலும் அறியலாம் என்றும், அது அடியில் உயர்ந்திருந்தால் சண்டைச் சேவல் என்றும், நடுவில் உயர்ந்திருந்தால் பிறர்க்கெனப் போர் புரியும் வீரன் என்றும், நுனியில் உயர்ந்திருந்தால் தன்னையே நன்

றாகக் காத்துக்கொள்வான் என்றும் பலவாறு கூறியிருக்கிறார். இவரது ஆராய்ச்சி முகத்தின் எலும்புகளைச் சார்ந்ததாக நின்றதே யொழிய, அவ் வெலும்புகளைப் போர்த்திருந்த சதைதயைக் குறிக்கவில்லை. இவர் காலத்திற்குப் பின்பு பெல் (Bell), டார்வின் (Darwin) என்பவர்கள், உடலளவின் மூலம் மனத்தை யளக்கலாம் எனும் இவரது முக்கியத் தத்துவத்தைக் (Physiognomy) கைக்கொண்டாரெனினும், அவர்களின் சிந்தை எலும்பினிடத்துச் செல்லாது அதனை மூடும் தசை அல்லது சதையினிடத்துச் சென்றது. ஆனால் இவ்விதமாக மனோ சக்தியை அளப்பது விஞ்ஞான முறையாகாது என்பதை விரைவில் இவர்கள் உணர்வாராயினர்.

உடல் ஆராய்ச்சி கொண்டு பண்பாராய்ச்சியி லீடுபட்ட அடுத்த பெரியார் லம்பிரோசோ (Lombroso) ஆவர். இவர் குற்றவாளிகளினிடையில் ஆராய்ச்சி நடத்தினவர். இதன் மூலம் இவர் உடலின் ஒருமைப்பாட்டினின்று (Symmetry) மாறுபட்டுப் பிறழும் ஒவ்வொரு குறைவும் (Stigmate) மனப்பான்மையில் காணபபடும் இழுக்கு ஒன்றுக்கு அறிகுறி என்று கண்டார். இக் கொள்கையும் விஞ்ஞானத்திற்கு ஒவ்வவில்லை. ஏனெனில் ஒழுங்கற்ற நடத்தையின் மூல காரணம் மனமே யன்றி உடலன்று என்பது ஆராய்ச்சியின் மூலம் ஏற்பட்ட வெள்ளிடை மலையாயிற்று. உடலின் அமைப்பை ஆராய்ந்து மனோ சக்திக்கு அளவுகோல் அமைப்பது அர்த்தமற்றது என்று ஆராய்ச்சியின் வாயிலாக அறைந்து கூறிய பெருமை கார்ல் பியர்ஸன் (Karl Pearson) என்பார்க்கே உரியதாகும். அவர் வெகுகாலமாகப் புத்திக் கூர்மைக்கும் தலையின் அளவு அமைப்பு இவற்றிற்கும் உண்மையில் பொருத்தம் ஏதேனும் இருக்கிறதா என்று ஆராய்ந்து புள்ளிவிவர ஆராய்ச்சிகளின் (Statistical investigation) மூலம் அவையிரண்டிற்கும் தொடர்பு (Corelation) ஒன்றுமில்லை என்று 1906-ம் ஆண்டில் நிரூபித்தார். அத்துடன் உடலின் அமைப்பையும் அளவையும் கொண்டு அறிவு முதலான மனத்தின் பண்புகளை அளவிடுவது நின்றது.

காய்ச்சலான வயலுக்கு அமோனிய சல்பேட்

கட்டாக்கிலுள்ள மத்திய அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்ட உர பரிசோதனைகளி லிருந்து அமோனிய சல்பேட் உரங்களைக் காய்ச்சலான வயல்களில் போடுவது நல்லது என்பது தெரிகிறது. சேற்று நிலத்தில் போடுவதைவிட அதிக பலன் அதன் மூலம் கிடைக்கிறது. இந்தியாவின் பெரும் பகுதியான நிலங்களில் இந்த முறையைக் கையாளுவதும் எளிது. அடுத்த உழவுப் பருவத்தில் குடியானவர்களின் வயல்களில் பெருவாரியாக இந்த முறை கையாண்டு பார்க்கப்படும்.

— பிப்

வானொலியும் வானுலகும்

தி. அ. கறுப்பண்ணன், B.Sc. (Hons.)

காலை முதல், இரவு வெகு நேரம் வரை அண்டை அயலார் வீடுகளிலிருந்து அலறும் ரேடியோக்களின் ஒலிகளால் ஏற்படும் தொல்லைகளைச் சொல்லி மாளாது. மாலை நேரங்களில் சிறிது பசியாறச் சிற்றுண்டியருந்த உணவு விடுதிகளில் நுழைந்தாலோ, அன்றிக் களைப்பாறச் சிங்காரப் பூங்காக்களில் நுழைந்தாலோ இந்தச் சகல வல்லமைகளும் பொருந்திய-மனிதரின் உயிரை வாங்குவதற்கென்றே தோன்றியவை போன்று விளங்குகின்ற—ரேடியோக்களின் அலறல்கள் அங்கும் நம்மைப் பின்தொடர்கின்றன. இவற்றையெல்லாம் நோக்குங்கால் தற்போது நாகரிகம் என்பது எவ்வளவுக் கெவ்வளவு சப்தம் போடுகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு உயர்த்தப்படுகின்றது என்று முடிவுகட்டவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இப்படியிருக்கையில் இவற்றைத் தவிர ரேடியோ சப்தங்கள் வான வெளிகளிலிருந்தும் வருகின்றன என்ற செய்தியானது நம்மைத் திக்குமுக்காடச் செய்கின்றது. எனினும் இந்த வான வெளிகளிலிருந்து வரும் ரேடியோ சப்தங்களைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

இவ்வறட்டுக் கத்தல்களைத் தவிரச் சில சமயங்களில் நமக்குப் பிடித்தவைகளும், உபயோகமுள்ளவைகளுமான நிகழ்ச்சிகளைக் கேட்கத் திருகியைத் திருகிவிட்டு நாம் அனுபவித்துக் கொண்டிருக்கையில், திடீரென்று சீறும் சப்தங்களோ, அல்லது மங்கிய ஒலிகளோ கேட்கின்றன. அதாவது நமது சிறிதளவு ஆறுதலுக்கும் பங்கம் ஏற்பட்டு விடுகின்றது. உடனே நம் கோபமானது வானொலி அலுவலகத்தாரின்மீது திரும்புகின்றது. உண்மையில் அவர்கள் இதற்குக் காரணமல்லர். ஏனெனில் இம்மாதிரி ரேடியோ சப்தமும், அல்லது சப்தம் மங்கிப் (Fading) போவதும் சூரியனின்மீது தோன்றும் புள்ளிகளினாலேயே என்பது பின் கண்ட விஷயங்களால் அறியலாம்.

முதலாவதாக, சூரியனிடமிருந்து வரக்கூடிய சப்தங்களையும், சூரியனால் இந் நிகழ்ச்சிகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதுபற்றியும் கவனிப்போம்:

ஒரு வருஷத்தில் பெரும்பாலும் பலமுறை சூரியனின் மேல் புள்ளிகள் (Sun Spots) காணப்படுகின்றன. அப்படி அந்தப் புள்ளிகள் தோன்றும் போது, அவைகள் மிகவும் பலம் வாய்ந்த குறுகிய அலைகளைக் கொண்ட வானொலி நிலையங்களாக மாறுகின்றன. ஆனால் அவைகள் அஞ்சல் செய்யக் கூடிய நிகழ்ச்சிகள் நாம் ரேடியோக்களில் கேட்கக் கூடிய வெறும் இரைச்சல்களே. ஆனால் இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் இந்த இரைச்சல்களின் வலிமையே.

சூரியன் மிகத் தொலைவில் இருப்பதால் சூரியனின் புள்ளிகளிலிருந்து வரும் ஐந்து மீட்டர்கள் நீளமுள்ள வானொலி அலைகள் பூமிக்கு வந்து சேர எட்டு நிமிடங்கள் ஆனபோதிலும், அந்த ஒலியானது மிகவும் அதிக

வல்லமை யுள்ளதாக இருக்கின்றது. கணக்கிட்டுப் பார்த்ததில் இந்தச் சூரியனின் புள்ளிகளான ரேடியோ நிலையங்களின் சக்தி (Power) இப்போது நம் பூமியின் மேல் உள்ள எல்லா நிலையங்களையும் விட மிகவும் அதிகமானது என்று தோன்றுகிறது.

புதிய சாதனங்களும், மனிதனின் அறிவும் மிகமிக விரைவில் முன்னேறிக் கொண்டுவரும் இக்காலத்தில், சூரியனின் புள்ளிகளிலிருந்து வரும் ஒலிகள் வெகு அண்மைக் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டன என்பது மிகவும் வியப்பை விளைவிக்கக் கூடியதாகும்.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு வானொலி நிலையத்தார்கள் தங்களுடைய வானொலிக் கருவிகளில், சூரியனின் மேற்பரப்பில் புள்ளிகள் தோன்றும்போது, ஒரு வித இரைச்சலைக் கேட்டதாகக் கூறினர். ஆனால் இந்தச் சப்தம் எதனால் உண்டாகின்றது என்பது புரியாத புதிராக இதுவரை இருந்திருக்கின்றது. முதன் முதலில் சூரியனிடமிருந்து வெளிவரும் துகள்களால் (Particles) வானவெளியில் எற்படும் மாறுதல்களினால்தான் இச்சப்தங்கள் உண்டாகின்றன என்று எண்ணினார்கள். ஆனால் தற்சமயம் இந்த ஒலிகள் சூரியனின்மேல் தோன்றும் புள்ளிகளே வானொலி நிலையங்களாக இருந்து கொண்டு ஒலி பரப்புவதால்தான் உண்டாகின்றன என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் எல்லா விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும் விளைந்த அதிர்ஷ்டமானது இந்த ரேடியோசப்த ஆராய்ச்சியிலும் உதவியுள்ளது. உலகப் பெரும் போர்க்குச் சற்றுமுன்பும், போர் நடந்த காலத்திலும், ரேடார் (Radar) என்ற அரிய சாதனமானது, விரோதிகளின் குண்டெறியும் விமானங்களை மிகத் தொலைவிலேயே அறிவதற்கும், அவைகளை அழிப்பதற்கும் மிகவும் உதவியாக இருந்து வந்தது. இதே சாதனமானது பின்பு, சூரியனிடமிருந்து வந்த ஒலிகளைப் பற்றி அறிந்து ஆராய்ச்சி செய்ய மிகவும் உதவியாயிருந்து வந்தது. இச்சாதனத்தின் அலைகளினுடைய நீளமும் ஐந்து மீட்டர்களாகவே இருந்ததால் இந்த ஆராய்ச்சியை மிக எளிதாகச் செய்ய முடிந்தது.

மேலும் இச்சாதனத்திற்குத் திசையை அறிவிக்கும் சக்தியும் இருந்ததால், ரேடியோ சப்தங்கள் சூரியனிடமிருந்துதான் வருகின்றன என்று தெளிவாகக் காணமுடிந்தது. எங்ஙனம் எனில் ரேடாரைச் சூரியனிருக்கும் திசையை நோக்கிப் பிடித்தால் நாம் கேட்கக் கூடிய சப்தமானது மிகவும் அதிகமாக (Maximum) இருந்தது. இதைத்தவிர வேறொரு முக்கியமான தொன்றும் இச்சாதனத்தின் உதவியால் கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது சூரியன் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு வருங்காலையில் சூரியனின் மேற்பரப்பில் தோன்றும் புள்ளிகள் ரேடாருக்கு நேராக வருகையில் சப்தம் மிகுந்தும், அப் புள்ளிகள் நம் பார்வைக்கு அப்பால்—சூரியனின் மறுபகுதியில்—சென்று மறையும் போது சப்தமே இல்லாமலும் இருப்பதால் அந்த ஒலிகள் பொதுவாக சூரியனை கோளத்தினின்றும் கிளம்பாமல் முக்கியமாக அதன்மேல் தோன்றும் புள்ளிகளி லிருந்து மாத்திரம் வருகின்றன என்று தெளிவாகின்றது.

இம்முக்கியமான உண்மையினின்று வேறு சில உண்மைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. உதாரணமாக இப் புள்ளிகள் சில ஆண்டுகளில் மிகத் தீவிரமாகக் காணப்படுகின்றன. அவைகள் சூரியனின் வட்டத் தகட்டின்மேல் (Disc) நகரும்போது அவைகளின் தொழிற்பாடு (Activity) ஒரு சில சமயங்களில் அரைமணி நேரம்கூடக்

காணப்படுகின்றது. அச்சமயங்களில் தான் பல அதிசயங்கள் ஏற்படுகின்றன.

ஒன்று சூரியச் சுடரின் (Solar flare) தோற்றம். இது சூரியனின் மேல் தோன்றும் புள்ளிகளைச் சுற்றிலும் ஒரு சிறு பரப்பளவிற்குத் தோன்றும், ஒரு சுடர். மற்றொன்று, இந்தச் சுடர் தோன்றும் அதே சமயத்தில் ஏற்படும் குறுகிய-அலைகளைக் கொண்டே நிகழ்ச்சிகளின் மங்கிப் போகும் (Fading) தன்மையே. இவைகளிரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை. அதாவது இவையிரண்டும் ஒரே இடத்திலிருந்து தோன்றுகின்றன. இந்த வானொலி மங்கலானது சிறிய அலைகளைக் கொண்டு, மிகத் தொலைவிற்குச் செல்லக்கூடிய ஒலி பரப்புகளில்தான் பெரிதும் ஏற்படுகின்றது. உதாரணமாக இப்படிப்பட்ட சமயங்களில் வெகு தொலைவிற்கு ஒலி பரப்பும் சிறிய அலைகளைக் கொண்ட பி. பி. சி. (B. B. C.) நிலையமானது பாதிக்கப்படுகின்றது. ஆனால் உள்நாட்டிற்கு மாத்திரம், ஒலி பரப்பும் நிலையங்கள் பாதிக்கப்படுவதில்லை. இதன் காரணத்தைச் சற்று விவரமாகக் கவனிப்போம்.

வானொலி அலைகள் வானொலி நிலையங்களி லிருந்து ஒலி பரப்பப்பட்டவுடனே, அவைகள் வானை நோக்கி மேல் எழும்பிச் சென்று, அங்கு வான வெளியின் மேல்மட்டத்தி லுள்ள அயனக் கோளத்தில் (Ionosphere தகள்வளி மண்டலம்) உள்ள மின்னேற்றப்பட்ட அணுக்களினால் உண்டான ஏட்டினால் மறுபடியும் பூமியை நோக்கியே திருப்பியனுப்பப்படுகின்றன. ஆனால் சூரியனின்மீது புள்ளிகள் தோன்றும்போது, இந்த அயனக் கோளமானது வானொலி அலைகளைப் பூமியை நோக்கித் திருப்பியனுப்புவதில்லை. ஏனெனில் இச்சமயங்களில் தன்னுள்ளே யடக்கிக் கொள்ளும் (Absorbing) ஒரு எடானது (Layer), அயனக் கோளத்தின் பிரதிபலிக்கும் (Reflecting) எட்டிற்குக்கீழ் உண்டாவதால் வானொலி அலைகள் அந்த ஏட்டைத் துளைத்துக் கொண்டு செல்லமுடிவது மில்லை, திருப்பிப் பூமியை நோக்கி அனுப்பப்படுவது மில்லை. அதனால்தான் இச்சமயங்களில் சப்தமானது மங்கிப் போய் விடுகின்றது. ஆனால் சூரியச் சுடரானது மறைந்தவுடனே அடக்கிக் கொள்ளும் ஏடு மறைந்துவிடுவதால், எப்போதும் போல் வானொலிக் கருவிகள் சரியாக வேலை செய்கின்றன.

சூரியச் சுடர் தோன்றுகின்ற அதே சமயத்தில் ஒலி மங்கலும் ஏற்படுவதால், இந்த ஒலி மங்கலுக்குக் காரணமான வீச்சுகள் (Radiations) சூரியனிடமிருந்து பூமிக்கு ஒளி அலைகளின் வேகத்திலேயே (விநாடிக்கு 1,8600 மைல்கள்) வருகின்றன என்பது தெள்ளத் தெளிவாகின்றது. இந்த வீச்சானது கீழ் ஊதாக் கதிர்களைக் (Ultra-violet) கொண்டதே.

1946-ம் வருஷம் பிப்ரவரி மாதம் சூரியன்மேல் தோன்றிய புள்ளிகளால் ஏற்பட்ட சப்தங்கள் நன்ருக ஆராயப்பட்டன. அவைகள் பகல் நேரத்தில் தான் தோன்றின. மேகங்கள் இருந்த போதிலும் 5 மீட்டர்கள் நீளம் கொண்ட இந்த வானொலி அலைகள் அவைகளினூடே சுலபமாகப் புகுந்து வெளிவருகின்றன. அனேக தடவைகள் ஒலி மங்கல் ஏற்படும்போது, கூடவே ரேடியோச் சப்தங்களும் கேட்கப்பட்டன. கூர்ந்து கவனித்ததில் இந்தச் சப்தமும், ஒலி மங்கலும் ஒரே சமயத்தில்தான் புறப்பட்டன என்று காணப்பட்டது. ஒரு சமயம் கிரீன்விச் (Greenwich) நிலையத்தில் சூரியச் சுடரைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது சூரியச் சுடர், ஒலி மங்கல், ரேடியோ சப்தம் ஆகிய இம் மூன்றும் ஒரே சமயத்தில் தோன்றுவதைக் கண்

டறிந்தனர். இதனுலும் ரேடியோ சப்தமானது ஒளி அலைகளின் வேகத்துடன் பூமியை நோக்கி சூரியனிடமிருந்து வருகின்றது என்று கூறமுடிகிறது. துருவ ஜோதி (Aurora Polaris) யானது மேற்கூறிய மூன்றிஞுடனும் சம்பந்தப்பட்டதே. ஆயினும் இது அவைகளுக்குப்பின் ஒரு நாள் கழித்தே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் மிகவும் ருசிகரமான ஒரு விஷயமாகும். சூரியனின் மீதுள்ள புள்ளிகளி லிருந்து ஒளிக் கதிர்களும், ரேடியோச் சப்தங்களும் வெளிக்கிளம்புகின்ற அதே சமயத்தில் கணக்கிடமுடியாத அணுக்கள் பீரிட்டுக்கொண்டு, எப்படி ஒரு குழாயிலிருந்து தண்ணீரானது திறந்தவுடன் பீரிட்டுக்கொண்டு வருகிறதோ அதேபோல், வெளிவருகின்றன. இந்த அணுக்கள் வேகமாகப் பிரயாணம் செய்தபோதிலும், ஒளி அலைகள் போலவும், ரேடியோ அலைகள் போலவும் அவ்வளவு வேகமாகப் பிரயாணம் செய்யமுடிவதில்லை. ஆகையால்தான் அவைகளைக் காட்டிலும் ஒருநாள் பின்தங்கிப் பூமியை அடைகின்றன. அவைகள் அவ்வாறு பூமியை நெருங்கும்போது, வான வெளியில் மேற்பரப்பில் உள்ள வாயு மண்டலத்தை அல்லற் படச்செய்து பச்சை, சிவப்பு நிறங்களுடைய ஜோதிகளைத் துருவங்களில் உண்டாக்குகின்றன.

இம்மாதிரி சூரியனிடமிருந்து வரும் ரேடியோ சப்தத்தைப்போல் அதே குணங்களைக்கொண்ட, மற்ருெரு சப்தமானது ஒளிப்பாதை (Milky-way) யிலிருந்து வருவதைச் சற்றுக் கவனிப்போம். இதைச்சுமார் இருபது வருடங்களுக்கு முன்பே ஒரு அமெரிக்க வானெலி நிபுணர் கண்டறிந்தபோதிலும், இப்போதுதான் இங்கிலாந்து தேச நிபுணர்கள் இதைப் பற்றி நன்கு ஆராய்கின்ருர்கள். ஐந்து மீட்டர்கள் நீளமுள்ள அலைகளைக் கவரும் கருவியை (Receiver) வானை நோக்கிப்பிடித்தால், ஒரு மிக மெதுவான சப்தமானது கேட்கின்றது. இதே கருவியை ஒளிப்பாதையிருக்கும் திசையை நோக்கிப் பிடித்தால் இச் சப்தமானது அதிகமாகக் கேட்கின்றது. 'ஹே' (Hey) என்பவரும் அவருக்கு உதவி செய்தவர்களும் முக்கியமாக (Sagittauus) 'சகிட்டானஸ்' என்ற ஒளிப்பாதையி லிருந்தும் (Cygnus) 'சிக்னஸ்' என்ற ஒளிப்பாதையி லிருந்தும் வரும் சப்தங்களை நன்கறிந்தனர். ஆகையால் இச் சப்தமானது, வானவெளியில் அனேக நட்சத்திரங்களைக் கொண்டுள்ள ஓரிடத்தி லிருந்து வருகின்றது என்று முடிவாகக் கூறலாம். இம்மாதிரி ஒளிப்பாதையி லிருந்து கேட்கக்கூடிய சப்தங்களை உண்டாக்கிய வானெலி அலைகள், ஒளிப்பாதையி லிருந்து இற்றைக்குச் சுமார் 30,000 வருடங்களுக்கு முன்பே புறப்பட் டிருக்க வேண்டும்!

இவ்வாறு நட்சத்திரங்களினின்றும் வருகின்ற ரேடியோ சப்தங்களின் உற்பத்தியைப் (Origin) பற்றி இரண்டு விதக் கோட்பாடுகள் (Theories) இருந்து வருகின்றன. ஒன்று: எப்படிச் சூரியன்மேல் தோன்றும் புள்ளிகளினுல், சூரியனிடமிருந்து ரேடியோச் சப்தங்கள் கிளம்புகின்றனவோ அதேபோல் நட்சத்திரங்களின் பேரிலும் புள்ளிகள் தோன்றுவதால் அவைகளினின்றும் சப்தம் வருகின்றது என்பது. மற்ருென்று: இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அதாவது ரேடியோச் சப்தமானது நட்சத்திரங்களினின்றும் வருகின்றனவே யல்ல, அவைகள் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றின் இடையே யுள்ள அணுக்களினுலும், மின்னணுக்களினுலும் (Elect-rons) ஏற்படுகின்றன என்பதேயாகும். இந்த இரண்டு கோட்பாடுகளைப்பற்றி இதுவரை மிகுந்த வேறுபட்ட கருத்துக்கள் இருந்து வருகின்றன.

ஒரு சிலர் இவ்வாறு சூரியனின் மீது தோன்றும் புள்ளிகளுக்கும், பூமியில் உண்டாகும் நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கூறுகின்றனர். அப்புள்ளிகள் தொடர்ச்சியாகத் தோன்றுமாயின் மரங்களின் வளர்ச்சியையும், ஆப்ரிக்காவிலுள்ள ஏரிகளின் ஆழத்தையும், புயற் காற்றுகளையும், பருவங்களையும் பாதிக்கின்றது என்பன போன்றவைகளே அவர்கள் கூற்று. எதிர்பார்த்த விதமாகவே இந்தப் புள்ளிகளுக்கும் ஆப்ரிக்காவின் ஏரிகளின் ஆழத்திற்கும் உள்ள தொடர்பானது 1922-ம் வருடம் வரை தொடர்ந்து காணப்பட்டது. ஆனால் அதற்குப் பின் இந்தச் சம்பந்தம் மறைந்து விட்டது. சூரியனின்மீது தோன்றும் புள்ளிகளுக்கும் பருவ நிலைகளுக்கும் சம்பந்தம் இருக்குமேயாயின் அது அவ்வளவு எளிதாகக் காணக் கூடியதன்று. உதாரணமாக, 1893, 1911-ம் வருடங்களில் மிகவும் கடுமையான கோடைக் காலம் இங்கிலாந்திலே ஏற்பட்டது. ஆயினும் 1893-ம் வருடத்தில் சூரியனின்மீது தோன்றிய புள்ளிகள் மிக அதிகமாகவும் (Maximum) 1911-ம் வருடத்தில் மிகக் குறைவாகவும் (Minimum) இருந்திருக்கின்றன. ஆகையால் இவைகளைப்பற்றி நாம் ஒன்றும் திட்டமாகக் கூறமுடியாது.

உன்னதமான தயாரிப்பு!

- யந்திரத்தின் உட்புறம் தெரியாதபடி எல்லாப் பாகங்களும் ஒருங்கே நன்கு மூடப்பட்டது.
- பல்வேறு அளவுகளில் கிடைக்கும்.
- நீடித்த, ஆயுட்கால உழைப்பு.
- முக்கிய பாகங்கள் இரண்டாகப் பொருத்தப்பட்டுள்ளன.
- அசையும் பாகங்கள் உராயாதபடி (எண்ணெயிட்டு) நன்கு மூடப்பட்டவை.
- சீதோஷ்ண நிலை மாறுதல்களால் பாதிக்கப்படாதது.
- திடதிரவ வடிவமான எரிபொருள்களை உபயோகித்துக் கொள்ளும்.
- அதிகப்படியாக உண்டாகும் வெப்பம் திரவங்களால் தணிக்கப்பட்டு யந்திரத்தின் உள் வெப்பநிலை ஒரே சீராக வைக்கப்படுகிறது.
- ஒளியாலும் ஒலியாலும் தரப்படும் குறிப்புகளை வைத்துக் கொண்டு வேலை செய்கிறது.
- நிலத்திலும் நீரிலும் பயன்படும்.
- யந்திரங்களின் எண்ணிக்கை தானே அதிகரித்துக் கொள்ளும்.
- மூளைத்திறனும் இருக்கிறது — இதனால்தான் பிரமன் படைத்த இந்த யந்திரம் மற்ற எல்லா யந்திரங்களிலும் மேலானது.

(சை. ட. — தழுவியது.)

சிதைந்த மலர்

வெற்றி

காலை ஆறுமணி. தூங்கி விழுந்து கொண்டிருந்தவர்களில் பலர் கண் திறந்து இவ்வுலகைப் பார்த்தனர். ஆடி அசைந்து வந்த ரயில் திருச்சி சந்திப்பில் 'கூ.........' என்ற குரல் கொடுத்து ஓய்வெடுத்துக் கொண்டது. பேராபத்து ஒன்றிலிருந்து தப்பியோடுவதுபோல் ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டு இறங்கினர். இறங்குகின்ற திருக்கூட்டத்துக்கு இளைத்த கூட்டமாக இல்லாமல் ஏறுகின்ற திருக்கூட்டமும் எதிர்த்து முன்னேறிக்கொண்டிருந்தது. நாங்கள் இறங்க வேண்டிய இடமும் அதுதான். அவர்களுக்குள்ள அந்தத் திறமை எனக்கில்லாமையால் நான் பொறுமைக் களஞ்சியமாக இருந்துவிட்டேன். கூட்டத்தின் கூச்சலினாலோ, ஆடியசைந்து இதுவரை தாலாட்டி வந்த ரயில் திடீரென்று ஒப்புதல் இன்றி ஓய்வெடுத்துக் கொண்ட கோபத்தினாலோ என்னவோ, இதுவரை சிரித்து விளையாடிய எங்கள் 'எழில்' தனக்கும் அழத்தெரியும் என்று காட்டிக்கொண்டிருந்தான். என் எதிரில் வந்து உட்கார்ந்த ஒருவர் "இச்–இச்' என்று சொல்லி அவன் அழுகையை அடக்கப்பார்த்தார். "சின்னஞ்சிறு குழவியின் கன்னல் வாயிலிருந்து வெளிவருவது அழுகையாக இருந்தாலும்சரி — அழகிய சிரிப்பாக இருந்தாலும் சரி — இந்த இரண்டும் அளவற்ற மதிப்பைப் பெற்றுவிடுகின்றன; அவற்றால் அப்பா அம்மாவை மட்டுமல்ல அக்கம் பக்கத்தாரையும் ஆளாக்கிக் கொள்கின்றன."—இப்படி எண்ணிக்கொண்டே 'கிசு கிசு' மூட்டி அவனைச் சிரிக்கவைக்க முயன்றேன். முயற்சி செயலளவுக்குப் போக முடியவில்லை.

'இந்தா.........என் கண்ணல்ல! அப்பா பார்.........யாரடி கண்ணு, யாரு?......அப்பாவா?......ஊம்.... குழந்தையை இப்படியா அடிப்பது?' — என்று கூறி அவனை வாரியெடுத்துத் தன் கன்னத்தோடு அவனுடைய தளிர்க் கன்னத்தைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள் உமா. அந்த அணைப்பும் அவனுடைய அழுகையை நிறுத்த முடியவில்லை.

அத்தை அடிச்சாரோ?
அடிச்சாரைச் சொல்லியழு
மாமன் அடிச்சாரோ?
மற்றவரைச் சொல்லியழு

என்று நீலாம்புரி ராகத்தில் மெல்லப் பாடித் தாலாட்டினாள் உமா. அழுகை நின்று அமைதி நிலவிற்று. அந்த வெற்றியில் தன்னை மறந்து, என்னையும் மறந்து எழில் உலகில் இருந்தாள்.

"என்ன உமா! அடித்தவரை அவன் சொல்லுகின்ற வரையில் ரயில் காத்துக்கொண்டு இருக்குமா? இறங்கவேண்டிய இடந்தான் வந்துவிட்டதே, இறங்க வேண்டாமா? இறங்கவேண்டாமென்றால் இருந்துவிடுகிறேன்."

"என்ஞல் ஒன்றுமில்லை. நீங்கள் இறங்கவேண்டியதுதான். நான் எழுந்துவிட்டேன்."

"நான் எழுந்தாயிற்று. எல்லாப் பொருள்களையும் எடுத்துக் கொண்டாயல்லவா? இறங்கு"

"நான் எப்படி எடுத்துக் கொள்ள இயலும்? என் கையில் தான் எழில் இருக்கிருனே."

'சரி...நான் என்ன உன் வேலைக்காரஞ?'

'எனக்கல்ல, என் எழிலுக்கு நாம் இருவருமே வேலைக்காரர்கள் தானே."

அவன் தன் இளநகையொன்ருல் அதை ஆமோதித்துவிட்டு உமாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு துள்ளினுன். ரப்பர் விரிப்பு, பால் புட்டி, கிலுகிலுப்பை, சிறு தோல் பெட்டி, இரண்டொரு புத்தகங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு டிக்கெட்டுகள் இருக்கின்றனவா என்று என் சட்டைப் பையைத் தடவிப்பார்த்துக் கொண்டு நடந்தேன். போர்ட்டர்களின் தொண தொணப்புக்குத் தப்பி, படிகளில் கிடந்த வாழைப் பழத் தோலுக்கும் தப்பிப் பிளாட்பாரத்துக்கு வெளியே வந்து சேர்ந்தோம். புகை வண்டி நிலையம் வந்து அழைத்துச் செல்வதாகக் கடிதம் எழுதிய என் நண்பர் திரு. சஞ்சீவியை அங்கும் காணேம். அதனல் அவருக்காக அங்கே காத்து நின்ருேம்.

* * *

"ஐயா! ஒரு அரையணு கொடுங்கள் ஐயா! குழந்தை பட்டினியாக இருக்கிறது ஐயா!" — இந்தப் பல்லவியோடு வருவோர் போவோரை எல்லாம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தாள் ஒருத்தி. அவள் இடுப்பில் கிடந்த எலும்புக் கூடு தன் கைகளை நீட்டி வருங்கால வாழ்க்கைக்கு வழிகோலிக்கொண் டிருந்தது. அவள் வாய் அந்தப் பல்லவியைத் திடீரென்று நிறுத்திவிட்டது. பிச்சைக்காரியாக அல்ல — ரயிலுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் யாரோ ஒருத்திபோல அவள் நடந்துகொண்டாள். அவளுடைய அந்தச் செயல் என் முகத்தை ஒரே வியப்புக்குறியாக மாற்றிவிட்டது. 'என்ன உமா! அவள் வாய் ஏன் அடங்கிவிட்டது.? பிச்சைத் தொழிலுக்கு விடுதலையளித்துவிடப் போகிருளா என்ன? அப்படியாஞல் அவளுடைய வாழ்வுச் சக்கரம் எப்படிச் சுழலும்" என்றேன்.

"விடுதலையாவது மண்ணுவது, அதெல்லாம் ஒன்றுமில்லை. பிச்சையெடுப்பது குற்றம் என்பது இந்த ஊர்ச் சட்டம். பிச்சையெடுப்பவர்களைப் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். அதனுல்தான் போலீஸ்காரரைக் கண்டதும் அவள் வாய் அடங்கிவிட்டது. இல்லையென்ருல் சும்மா இருக்குமா?" என்ருர் என் பக்கத்தில் இருந்த யாரோ ஒருவர்.

"பிச்சையிடுவது குற்றம் இல்லையே"

"அதெப்படி ஐயா குற்றமாகும்? பிச்சையிடுவது குற்றமல்ல."

"பிச்சை யெடுப்பது குற்றம்; இடுவது குற்றமல்ல; எடுப்போன் ஒருவன் இருப்பது குற்றம்; எடுக்கும் நிலை ஏற்படச் செய்யும் ஒருவன் இருப்பது குற்றமல்ல; பிச்சையெடுக்கும் காரியத்தை எண்ணிக் கவலைப்படும் உலகம் அதன் காரணத்தை எண்ணிக் கவலைப்படாமல் இருப்பது குற்றமல்ல; வாழும் வழி அடைபட்டு வயிற்று வேதனையைத் தீர்க்கமுடியாதபோது மானம் இழந்து மரி

யாதை இழந்து பிச்சை யெடுக்கின்ருன்; அது குற்றம்; அவனுடைய வயிற்றுக் கவலையைத் தீர்க்காது வாயை மட்டும் அடக்கிவிடப் பார்ப்பது குற்றமல்ல. வயிற்றுக்கின்றி வாடுபவர்களில் நல்லவர்கள் தான் பிச்சை யெடுக்கின்ருர்கள்; வல்லவர்கள் கையேந்துவதை விடக்கன்னம் வைப்பதுதான் சிறந்தது என்றெண்ணிச் செயலில் இறங்கிவிடுகின்றனர். உயரவேண்டியது சிறைச் சாலையின் மதில்களல்ல. சீரழிந்தவர்களின் வாழ்வுதான்.' —இப்படியாக ஓடிக்கொண்டிருந்த என் சிந்தனைச் சக்கரம் நிற்கவேண்டிய தாயிற்று.

அடங்கிக் கிடந்த அவளுடைய குரல் மீண்டும் கேட்டது.

அந்தப் பிச்சைக் கைகளுக்குமுன் இரக்கக் கைகளாகச் சில கைகள் நீண்டன. மற்றவர்க ளெல்லாம் ஏதாவது ஒன்றை வழங்கியாக வேண்டுமே என்று வாய்க்கு வந்ததை வழங்கிக்கொண் டிருந்தனர். அதனுல் அவள் வாய் ஒடுங்கிவிடவில்லை. "இந்தத் தொழிலுக்கு இவள் புதியவளல்ல; பழையவள்" என்று நான் முடிவு செய்தேன். அவள் இடுப்பில் கிடந்த எலும்புருவத்தை எண்ணி, எங்கள் எழில் உருவத்தையும் எண்ணினேன். ஏதோ ஒரு உணர்வு அலை யெழுந்து என் நெஞ்சைக் கலக்கிற்று. அது எத்தகைய உணர்வு எனக் கூற இயலவில்லை. ஒரு ரூபாயை எடுத்து அவள் கையில் போட்டேன்.

"அரையணு அல்ல; ஒரு ரூபாய்; தெரியாமல் கொடுத்து விட்டீர்கள்."

"இல்லை. தெரிந்துதான் கொடுத்தேன். வைத்துக்கொள். குழந்தைக்கு ஏதாவது வாங்கிக் கொடு".

அவள் அங்கிருந்து நகரவில்லை; என்னையே பார்த்துக்கொண் டிருந்தாள். அந்தப் பார்வை, இழந்துவிட்ட இன்றியமையாத ஒரு பொருளைத் தேடுவதுபோல் இருந்தது. என்ன பார்க்கிருள்? தெரியவில்லை. நானும் அவள் முகத்தைப் பார்த்தேன். அதில் அமைதி இல்லை; வியப்பில்லை; ஒரு ரூபாய் பெற்ற நன்றியறிதலும் இல்லை. ஏதோ ஒரு வேதனையின் நிழல் இருந்தது. மங்கி மறையும் நிலவொளியில் எங்கோ எப்போதோ பார்த்த முகம்போல் அது இருந்தது. எங்கே?— அதுதான் தெரியவில்லை. அவள் கைகள் நடுங்கின. ஒரு ரூபாயும், சில்லறைக் காசுகளும் கீழே விழுந்தன. எதையோ சொல்ல அவள் வாயிதழ்கள் துடித்தன.

'நீங்களா?'—என்ருள்.

'நீயா'?-என்றேன். அதற்குமேல் அவள் அங்கு நிற்கவில்லை. எலும்புக் குழந்தையை இறுகப் பிடித்துக்கொண்டு நடந்தாள்.

'கோதை—......கோதை—......நீயா பிச்சைக்காரி—' இந்த என் சொல்லலைகளுக்கு முன்னே அவள் ஓடினுள். ஓடுகின்ற வண்டிகளும் கார்களும் அவள் ஓடி மறைய உதவின. அந்த அலைகளுக்குப் பின்னே என் உள்ளம் ஓடியது.

* * *

கோதை வேலைக்கார இனத்தைச் சேர்ந்தவள். நான் வேலை வாங்கும் இனத்தைச் சேர்ந்தவன். அவள் மண் குடிசையில் பிறந்தாள். நான் மாடி வீட்டில் பிறந்தேன். வேளைக்கு ஒரு உடை உடுத்தப்பட்டு நான் வளர்ந்தேன். வேற்றுடை யின்றி ஒரே பாவாடை சட்டையை நாட் கணக்காக அணிந்து அவள் வளர்ந்தாள். இந்தச் செல்வத்தின் நிழலும் ஏழ்

மையின் சாயலும் எங்கள்முன் நிற்கவில்லை. இந்த இரண்டும் குழந்தை உலகில் எப்படி இடம் பெற முடியும்? நாங்கள் இருவரும் ஒருவர் ஒருவரின் உருவமாக இருந்தோம்; ஒருவர் ஒருவரின் நிழலாக வளர்ந்தோம். வீடு, பள்ளி, விளையாடுமிடம் — எங்கும் ஒன்றாக இருந்து, பயின்று விளையாடினோம். எங்கள் சிற்றூரின் அழகுக்கு அழகளித்து விளங்குபவை ஊருக்குப் பக்கத்திலுள்ள பெரிய மாந்தோப்பும், கடற்கரையும். அந்த மாந்தோப்பும், கடற்கரையும் எங்களுக்கு எத்தனையோ இன்பக் கதைகள் சொல்லி இருக்கின்றன. சின்னஞ் சிறு வயதில் எத்தனையோ மாலைக் காலங்களை நாங்கள் அந்தக் கடற்கரையில் கழித்திருக்கிறோம். சிவப்பும், வெண்மையும் கலந்த சோழிகளில்தான் அவளுக்கு விருப்பம் அதிகம். கடற்கரையில் அவற்றை நிறையப் பொறுக்குவாள். பாவாடை மடி நிரம்பிவிடும். அப்போதும் அவள் உள்ளம் நிரம்பாது; கைகள் இரண்டிலும் நிரம்பிவிடும். இரண்டொரு சோழிகள் கைகளினின்றும் கீழே விழுந்துவிடும். 'அழகன்! இந்தச் சோழிகளை எடுத்து என் கையில் போடடா'.

''கையும் மடியுந்தான் நிறைந்து விட்டனவே. இன்னும் எதற்கு? வேண்டாம் போ.''

''ஊ......ம். அதுவும் வேண்டும். எடுத்துப் போடு.''

''முடியாது. நீ எடுத்துக் கொள். நான் எடுத்துப் போட மாட்டேன்.''

''போடுவாயா? மாட்டாயா?''— இப்போது அவளுடைய கண் சிவந்துவிடும். அந்த முகம் அப்போது ஒரு தனியழகைப் பெற்றுவிடும். அதற்குமேல் என்னால் ஒன்றும் பேசமுடிவதில்லை; சோழிகளை எடுத்து அவள் கைகளில் போடுவேன். கூம்பிய முகம் மீண்டும் மலர்ந்துவிடும். அந்த மலர்ச்சியில் என் மனம் மலரும். இப்படி ஒரு நாள் இரு நாளல்ல— நாள்தோறும் கடல் அன்னை அலைக் கரங்கள் நீட்டி எங்களை அழைப்பாள் நாங்கள் அவள் மடியில் மகிழ்ந்து துள்ளுவோம். சோழி பொறுக்குவாள்; கையும் மடியும் நிறைந்துவிடும்; இரண்டொன்று கீழே விழுந்துவிடும்; அவையும் வேண்டுமென்பாள்; நான் வேண்டாம் என்பேன். அவளே வெற்றி பெறுவாள். அந்த வெற்றியில் நான் மகிழ்ந்து துள்ளுவேன். ஒரு நாள்மட்டும் வழக்கத்திற்கு மாறாகக் கடலை நோக்கிக் கைகொட்டிச் சிரித்துக்கொண்டிருந்தாள் அவள். கடலலைகள் அவள் கால்களை வருடிச் சென்றன. பேரலையொன்று மட்டும் அவள் கால்களைத் தொட்டுப் பாவாடையையும் நனைத்துவிட்டுச் சென்றது. ''போ. நீ நல்ல கடலல்ல. நீதான் என்னை நனைத்துவிட்டாயே'' என்றாள். அவள் துன்ப நிலை எனக்கு இன்பமாக இருந்தது. நான் கைகொட்டிக் கலகல வென்று சிரித்தேன். ''போடா. நீ கூட நல்லவனல்ல. உன் பேச்சுக்கு இனிமேல் நான் வரவே மாட்டேன். உன் பேச்சுக்கு 'டு' என்றாள். நான் பேச்சற்று நின்றேன். என் பேச்சற்ற நிலை அவளைப் பேசச் செய்துவிட்டது.

'இனிமேல் நீ இப்படிச் சிரிப்பாயா அழகன்'?

'இல்லை. இனிமேல் சிரிக்கமாட்டேன்.'

'சரி. ஓடி விளையாடலாம். வருகிறாயா? நான் ஓடுகிறேன். நீ பிடி.' —அவள் ஓடினாள். என் கால்கள் தொடர்ந்து ஓடின.

அவள் பாடினுள். எப்படிப் பாடினுள் என்று எண்ணிப் பார்க்கும் அளவு அறிவு அன்று எனக்கில்லை. இன்று இருக்கிறது. எப்படிப் பாடினுள்?—விளங்கவில்லை.

கடற்கரையில் வெண்மணலில்
ஓடிவந்தேன்
கைகோத்து விளையாட அழகா—
நீ வா
கடலலையில் விளையாட அழகா—
நீ வா

* * *

என் உள்ளத்தில் காலையாக இருந்தது எதுவோ அதுவே அவள் உள்ளத்தில் இருள் நுழையும் மாலையாகவும் இருந்தது. சென்னை செல்லும் மகிழ்ச்சியோடு அவளிடம் விடை பெறச் சென்றேன். 'அழகன்! நீமட்டுமா சென்னை செல்கின்ருய்? —என்ருள். 'இல்லை. அக்காவும், அத்தானும் வந்திருக்கிருர்கள். அவர்களோடு செல்கின்றேன்'—என்றேன். 'நீ மட்டுந்தானு? நான் இல்லையா?'—இந்த வினு அந்த வினுவுக்குள் அடங்கிக் கிடந்ததை நான் அறியவில்லை. அவள் பேசாமல் இருந்தாள். நான் போய்விட்டேன். படிப்பு முடிந்தது. ரயில் ஊர் நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. ஊர் நெருங்க நெருங்க என் உள்ளத்தில் ஏதோ ஒரு இன்ப உணர்வு உண்டாயிற்று. சென்னைக் கடற்காற்றில் இல்லாத ஒரு தனி இன்பம் என்னூர்க் காற்றில் இருப்பதாக உணர்ந்தேன். நான் இறங்கிய அதே வண்டியில் மணி வந்து ஏறினுன். வெளியூரொன்றில் சொற்பொழிவாற்றச் செல்வதாக அவன் சொன்னுன். நான் மூன்ரும்படி படிக்கும்போது அவன் நான்காம் படியில் இருந்தான். அவன் முதல் மாணவனல்ல என்ருலும் கடைசி மாணவனுக எப்போதும் இருந்ததில்லை. பின்னுல் பெரியவனுவதற்குரிய அரட்டையடித்தல் முதலிய எந்த இலக்கணமும் அவனிடத்தில் அந்தக் காலத்தில் இல்லை. சாதாரண மணி பெரிய சொற்பொழிவாளனுக ஆகிவிட்டிருந்தான். உறங்கிக் கிடந்த என்னூர்க் 'கலைக்கழகம்' உறக்கம் நீங்கி எழப் பள்ளியெழுச்சி பாடிய முழுப் பெருமையும் அவனைத்தான் சாரும்.

* * *

உடை மாற்றிக்கொண்டு கோதையைக் காணச் சென்றேன். எதிர்பாராத என் வரவு கொஞ்ச நேரம் அவளைப் பேசாமல் இருக்கும்படி செய்துவிட்டது. "நீங்களா! எப்போது வந்தீர்கள்? வாங்க" என்ருள். அவளிடத்தில் சின்னஞ்சிறு வயதில் காணப்பட்ட துள்ளு நடையில்லை; துடுக்குப் பேச்சில் "நீ நீ" என்றழைக்கும் ஒருமை உரையும் இல்லை. அவளுடைய கூரிய விழிகளில் ஒரு புது ஒளி பரவி இருந்தது. நெற்றிப் பிறையில் உறவாடும் சுருண்ட கூந்தலில் புதுப் பொலிவொன்று இருந்தது. பேச்சிலும் நடையிலும் ஒரு மென்மை காணப்பட்டது. இறந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் இடையே இந்த இனிய மாறுதலை இயற்கை இழைத்துவிட்டிருந்தது. மாறுதலினுல்தான் உலகம் இனிக்கின்றதா? அப்படித்தான் இருக்கவேண்டும். பூவாய்ப் பிஞ்சாய்க் காயாய்க் கனியாய்க் காணுது ஒன்றை ஒரே நிலையில் கண்டு கண்டு உவந்துவிட இந்த உலகத்தால் எப்படி இயலும்? இதை யறிந்துதான் இயற்கையும் ஒத்துழைக்கின்றது அவளிடத்தில் புதுப் பொலிவு ஒன்று இருந்தாலும் உடல் சற்று இளைத்திருந்தது.

"கோதை! ஏன் இளைத்து விட்டாய்?"

"இல்லையே. எனக்கென்ன வந்துவிட்டது? அப்படியேதான்

இருக்கிறேன். கனமானவர் யாரையாவது பார்த்துவிட்டு வந்திருப்பீர்கள். கண்ணின் குற்றத்துக்குக் காணப்படும் பொருள் என்ன செய்யும்?''

''என் கண்ணில் குற்றமா? சரி. அப்படித்தான் இருக்கட்டுமே''

''குற்றம் மட்டுமல்ல. மறதிகூட இருக்கிறது. இல்லையென்றால்...'' மூலையில் இருந்துவந்த இருமல் ஒலி அதை முடிக்க முடியாமல் செய்துவிட்டது. முடிக்க முடிந்திருந்தால் அவள் அதை எப்படி முடித்திருப்பாள்!?

''அப்பா! என்......னப்......பா! தண்ணீர் கொண்டு வரட்டுமா?''

''ஊ.......ம். இல்லை. வேண்.... டாம்......மா!—'' நான் பேசாமல் இருந்தேன்.

''அம்மா இறந்து ஒரு மாதம் ஆயிற்று. அந்தப் பிரிவு அப்பாவைப் படுக்கையில் கிடத்திவிட்டது. நீங்களாவது இருந்தீர்களா? நீங்களும் இல்லை'' இந்த 'உம்' என்ன பொருளைத் தாங்கிக்கொண்டிருந்தது என்பதை அறிய என் பி. ஏ. படிப்புப் போதவில்லை.

மேலிடத்துக்கு அடங்கிக் கீழிடத்தை அடக்கியாளும் உத்தியோகக் கலைக்கும் எனக்கும் நெடுந்தூரம் இருந்தது. இதை என் அப்பாவும் உணர்ந்துகொண்டார். முன்னேற்பாடாகத் தென்னந் தோப்பை யொட்டிச் சின்ன பங்களாவையும், நெல் அரைக்கும் 'மில்' ஒன்றையும் அமைத்து நிலத்தைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பையும் அளித்தார். என் பங்களாவைத் தாண்டித்தான் மதுரைக் குளத்துக்குச் செல்ல வேண்டும். மதுரைக் குளத்து நீருக்கு என்ன பெருமையோ தெரியவில்லை. அதன் நீரில்லாமல் என்னாரார் யாருக்கும் சோறே இறங்குவதில்லை. கோதை தண்ணீர்க் குடத்தை இடுப்பில் அணைத்தபடியே என் பங்களாவுக்கு ஒவ்வொரு நாளும் வருவாள். நாங்கள் பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் பேசாமல் இருந்ததும் இல்லை. எதையாவது பேசிக்கொண்டே இருப்போம். ''சேர்ந்து வாழ்வோம். இல்லையென்றால் பிரிந்து சாவோம். சேர்ந்து வாழ்வதும் பிரிந்து சாவதும்தான் காதலர் இயல்பு,'' என்று நான் ஒருநாளும் சொல்லியதில்லை, அவளாவது சொன்னாளா? . அதுவும் இல்லை. ஆனால் எங்களுக்கில்லாத ஒரு கவலை ஊராருக்கு மட்டும் இருந்தது. எங்கள் பெயரை இணைத்து வைத்து அவர்கள் மகிழ்ந்தனர். ''கோதை – அழகன்'' : இப்படி இணைந்துவிட்டன எங்கள் பெயர்கள். அந்த வெறும் இணைப்பு ஒரு பெண்ணின் வாழ்வை தீய்க்கும் நெருப்பாகிவிடலாம் என அவர்கள் எண்ணவே இல்லை என்றால் எங்கே கவலைப்படப் போகிறார்கள். பொன் வண்டின் கழுத்தில் சுருக்கிடும் குழந்தை, வண்டின் வருத்தத்தைப் பற்றி நினைக்கிறதா? அவர்களும் வளர்ந்த குழந்தைகளாகவே இருந்தார்கள்.

* * *

கலைக்கழகத்தின் ஆண்டுவிழா இறுதி இரண்டு நாட்களிலும் மணி பேசினான். 'வள்ளுவரும், பண்பாடும்,' 'உலகமும் உள்ளமும்' என்ற தலைப்புகளில் அவன் பேச்சுக்கள் அமைந்தன. கருத்தில்லாத சொற்பொழிவுகள், கைதட்டலுக்காகவே அமைந்த சொற்பொழிவுகளைச் சென்னையில் பலமுறை கேட்டிருக்கின்றேன். மணி பேசியது போன்ற சொற்பொழிவைக் கேட்டதில்லை. மணியின் சொல்லில் எளிமை இருந்தது. சிந்தனை

விருந்தும் இருந்தது; காவிரிப் பெருக்கின் இனிய விரைந்த ஓட்டமும் இருந்தது. வள்ளுவரைக் கூறி—அவர் வாழ்வில் கண்ட பண்பாட்டையும் கூறி — இன்றுள்ள குறையுலகையும் காட்டி — அது நிறையுலகமாக எத்தகைய உள்ளம் வேண்டும் என்றும் விளக்கினான். 'இதுவல்லவா பேச்சு' என நான் வியந்தேன். பேச்சு முடிந்தது. "மணி! எத்தனை எத்தனை உள்ளங்கள் பேச்சில் இணைந்து இன்புற்று உன்னைப் பாராட்டுகின்றன பார். இந்தப் பாராட்டின்பம் எல்லோருக்கும் கிடைக்கமுடியாதது" என்றேன்.

"பேசுகிறேன். அவர்களுக்கு இன்பமாக இருக்கிறது. பாராட்டுகின்றார்கள். அவ்வளவுதான். அதற்குப் பெயர் இன்பமா? இன்பம் எங்கே இருக்கிறது? இளநகையில்தான். உனக்குத்தான் தெரியுமே, கோதையின் இளநகையில் அல்லவா இன்பம் இருக்கிறது!"

என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை. கிளியின் அழகைப் பாராட்டி மெல்லத் தடவப் போய் அது தன் கூரிய அலகால் குத்திக் கிழித்தால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருந்தது என் நிலையும். தாழ்ந்த நிலத்தில்தான் நெருஞ்சில் முள் வளரும் என்று இதுவரை நினைத்திருந்தேன். உயர்ந்த நிலத்திலும்கூடச் செழித்து வளர்ந்து விட்டதே! நெருஞ்சில் முள் கூராக இருந்தது. அது என் நெஞ்சையே தாக்கிவிட்டது. வேதனை பொறுக்க முடியவில்லை. மணியா இப்படிப் பேசுகிறான் — என்னால் நம்பவே முடியவில்லை. 'தலைவலி'— என்று பொய்சொல்லி விடை பெற்றேன்.

* * *

கோதை வந்தாள். குழந்தைச் சிரிப்பொன்று அவள் முகத்தில் அரும்பி நின்றது. அந்தச் சிரிப்பைக்கண்டு இரங்கினேன். மனிதன் இரக்கத்தினால்கூடக் கொலை செய்துவிட முடியும்போல் இருக்கிறது. என் இரக்கம் அதைத்தான் செய்தது.

'கோதை நீ இனிமேல் இங்கு வரக்கூடாது.'

'வந்தால்............'

'இல்லை. விளையாட்டல்ல. உண்மையாகவே நீ இங்கு வரவே கூடாது. நீயும், நானும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் ஊர் வாய் என்னென்ன சொல்லும்?!'

"சொல்லட்டுமே. சொல்வதற்கு என்ன இருக்கிறது?"

"ஒன்றுமில்லைதான். அவர் பொய்ச் சொல் ஒன்றுமில்லாததாகிவிடாது. வெறும் சொற்கள் வாழ்வைத் தீய்க்கும் நெருப்பாகிவிடும். அந்தத் தீயில் நீ உயிரோடு வேவதைத் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது. போ.........போய்விடு கோதை"— இதைச் சொல்லிவிட்டு என் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். கொஞ்ச நேரம் அவள் பேசாமல் கல்லாய் நின்றாள். பின் "ஊராரும், நீங்களும் ஒன்றுதான் என்றால் எந்த உறவும் எனக்கு வேண்டாம்." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்; அப்புறம் அவள் அந்தப் பக்கம் திரும்பவே இல்லை. அவளைப் பார்த்து நிலைமையை விளக்கவேண்டும் என்று நினைத்தேன். வேண்டாத மானம் ஒன்று அதன் பிடியிலிருந்து என்னை விட மறுத்து விட்டது.

* * *

"அவன் மண்டையைப் பிளந்து விட்டு மறுவேலை பார்க்கிறேன்; என்ன நினைத்துக் கொண்டான்? கூட்டத்தில் அலறிவிட்டால் ஆகி விட்டதா? அறிவு இருக்கவேண்டாமா"? — என்று கோதையின் அண்ணன் இரைந்துகொண் டிருந்தான் "இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கிறேன். என்னுயிர் போவதற்குமுன் அவன் குரல்வளையைக் கடித்து ரத்தம் குடித்து விட்டுச் சாகிறேன். இல்லையென்றால் நான் கோதையின்...............

அதற்குமேல் பேசமுடியாமல் இருமினான் கோதையின் தந்தை. கோதை யாருக்கும் வேலைவைக்கவில்லை. ஊரைவிட்டே போய்விட்டாள்.

இனி அவளைக் காணவே முடியாது என்று நினைத்தேன். இன்று கண்டேன்.

எத்தனையோ விரல்கள் அவளை எப்படி எப்படியோ சுட்டி இருக்கும். எத்தனையோ நச்சுக்கண்கள் அவளை எப்படியெல்லாமோ பார்த்திருக்கும். எத்தனையோ வாய்கள் இரக்கத்தைத் துடைத்து விட்டு வைதிருக்கும் — அந்த நிலையில் பிச்சைக்காரியாகவா நான் அவளைப் பார்க்கவேண்டும். கோதை— அந்தமலர் இப்படியா ஆகவேண்டும்?

* * *

அந்த மலருக்கு ஒளி அளித்திருக்க வேண்டியவன் நான்தானா? அவள் அப்படித்தான் நினைத்திருக்கிறாள். வாழ்வுப் பாதையின் வழித்துணையாக என்னையே எண்ணி இருந்திருக்கிறாள். அப்படி இல்லாத என்னைப் பார்ப்பதும் தவறு என்று இன்று நினைத்துவிட்டாள். இல்லையென்றால் ஏன் மறைகிறாள்? நல்லவர்களால் தவறு செய்ய முடிவதில்லை. தவறு நடந்த பிறகு தலை நிமிர்ந்து வாழவும் முடிவதில்லை. கோதையின் தலை நிமிரவில்லை. அவள் இன்னும் நல்லவளாகவே இருக்கிறாள்.

* * *

ஒரு காடு; காட்டை யொட்டி ஒரு சிறு குளம்; குளத்தில் பச்சைப் பசே லென்று படர்ந்து கிடந்தன தாமரை இலைகள்; அந்த இலைகளுக்கு இடையே ஓங்கி உயர்ந்து ஒரு கொடி மெல்லிய மொட்டொன்றைத் தாங்கி நின்றது; மொட்டு மலர்ந்தது; புதுப் பொலிவு பெற்றது; புதுமணம் கமழ்ந்தது; எங்கிருந்தோ வந்தது ஒரு யானை; நீரைக் கலக்கிற்று. நீர் நிறம் மாறியது. கொடி ஆதரவற்று அலைந்துகொண் டிருந்தது. ஆதரவற்ற கொடி யானையின் கையில் சிக்கியது. வெறிகொண்ட யானை பச்சைப்பசுங் கொடியை வேரோடு பிடுங்கி வீசி எறிந்து விட்டது. யானையின் கால் மெல்லிய மலரின்மேல் இருந்தது; கால் மலரைத் தேய்த்துக்கொண் டிருந்தது. மலரின் மென்மை அழிந்தது; பொலிவழிந்தது; புதுமணம் அழிந்தது. அழிந்து ஒழிந்து சிதைந்து கிடந்தது அந்தப் புது மலர். ஆனால் அந்த யானை............?

இன்பமே வா!

[ஆங்கிலக் கவியரசன் மில்டனைத் தழுவியது]

●

காரிருளிற் பாழ்குகையாம்
நரகந் தன்னில்
கடும்பாவந் தனிலுதித்த
துன்ப மேநீ
வேறிடத்துக் கேகிடுக!
என்னை விட்டு
விலகிப்போ! இருட்கிடங்கை
நாடிச் செல்க!

சகிக்கவொணாப் பேயினங்கள்
கதறி விம்மிச்
சஞ்சலத்தால் நெட்டுயிர்க்கும்
இடமங் கேதான்
தகிக்கின்ற பொறாமைவெறி
சிறக டிக்கும்
தனிக்குகைசெல்! இல்லையெனிற்
"பாலை" சேர்வாய்!

இன்பவெறி நல்குசுதந்
திரநற் றேவி!
எழிலேநல் லுணர்வூட்டும்
களிப்பே வாவா!
மன்பதைக்கு நெஞ்சில்மகிழ்
வதனைத் தந்த
மகளேநீ வா! வா!! வா!!!
அருளே வாவா!

21174

குளிர்தென்றல் காதல்தரு
மின்பம் ஒன்றாய்க்

கூடுகையில் நீபிறந்தாய்!
இளைய நங்காய்!
“ஒளி”யென்பார் “மலர்ச்சி”யென்பார்
இருவர் உன்றன்
உடன்பிறந்த பாக்கியத்தாற்
பெருமை யுற்றூர்!

மேற்கிருந்து வரும்காற்றும்
விடியற் காலை
விளங்குகின்ற அருணோத
யத்தின் மாண்பும்
கூட்டுறவிற் சித்திரையில்
ஊதா வண்ணக்
குளிர்ப்படுக்கை தனிலுன்னை —
எழிலை — ஈன்றூர்!

ஓடிவா! குறும்பாகப்
பேசிக் கொண்டே
ஒய்யார இளமைநடை
போட்டு வாவா!
கூடவே குதித்தாடிக்
கேலி பேசிக்
குளிர்முகத்தில் களைசொட்ட
விரைந்து வாவா!

மலர்மகளின் ரோஜாப்பூக்
குழிக்கன் னங்கள்
வழங்குதல்போல் இன்பமதைக்
கவலை போக்கி
விலாவலிக்க எழுகின்ற
சிரிப்போ டிங்கு
மெதுவாக அன்னநடை
போட்டு வாவா!

தமிழாக்கம் :— “ சக்திக்கனல் ”



கலைமகள் — அரசாங்கம்

[பளிங்குக் கல்லில் செய்யப்பட்டது; 12 அல்லது 13-ம் நூற்றுண்டைச் சேர்ந்தது; பிக்கனிர் சமஸ்தானத்தில் உள்ளது.]



திரு. எஸ். பாலசுந்தரம்

நுங்கின் சுவைநீரும்............



திரு. எஸ். பாலசுந்தரம்

…………தெங்கின் இளநீரும்



யூஸிஸ்

நெடுந்தொலைவு மிக விரைவாகப் பறந்துசெல்லும் ஜெட் விமானங்களின் விமானிகள் உட்கார்ந்த நிலையிலேயே மணிக் கணக்காக இருப்பது உடலுக்குத் தொல்லை தருமல்லவா? அதற்காகப் படத்தில் கண்டுள்ளபடி விமானியின் இருக்கை அமைந்தால் நல்லது என்று எண்ணி, அமெரிக்க விமானப் படையினர் பரிசோதித்திருக்கிறார்கள். எந்த வகையான இடைஞ்சலும் இன்றி எட்டு மணி நேரம் தொடர்ந்து இதே நிலையில் இருக்கமுடியுமாம்.

பூமியின் உள்ளகம்

திரு. வீ. இராசமாணிக்கம், B. A. (Hons.)

இதுவரைப் பூமியை நான்கு மைல்கள் ஆழத்திற்கே துளைத்துச் சென்றிருப்பதாக அறியப்படுகிறது. இவ் வாழம், பூமியின் நடுப் புள்ளியி லிருந்து ஆயிரத்தில் ஒரு பங்கு தூரமாகிறது. எனவே, பூமிக்குள்ளே இருப்பனவற்றைக் குறித்து நாம் கொண்டுள்ள எண்ணத்திற்கு மாறுபாடு இருக்கலாம். எனினும், எரிமலையால் வெளியாக்கப்படும் பொருள்களி லிருந்தும், கற்பாறைகளின் மேற் பாகம் வெடித்துக் காணப்படுவதினின்றும், சில கருத்துக்களை யறியலாம். ஆனல் அவற்றைக் கொண்டே முழுவதையும் கூறமுடியாது.

இதைப் பற்றிய ஆராய்ச்சி சிறிது சிறிதாக உயர்வடைந்தது. நியூடன் (Newton) என்பவர், "நீரைப்போல நிலம் $5\frac{1}{2}$ மடங்கு அடர்த்தி (Density) யுடையதெனக் கருதலாம்," என அறிவித்தார். நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், ஹென்றி கேவன்டிஷ் (Henry Cavandish) என்பவர், அக்கூற்றை உண்மையென மெய்ப்பித்தார். மற்றும், நில மட்டத்திலிருக்கும் பாறைகளைப் போன்று இரு மடங்கு அடர்த்தியுள்ளதெனவும் கண்டார். இவ்வுயர் அடர்த்திக்குக் காரணம், பூமிக்குள்ளே மிகுதியான ஆழத்தி லிருக்கும் பொருளானது, எல்லாத் திசைகளி லிருந்தும் நசுக்கப்படுவதேயாம். கேவன்டிஷ் என்பாரது ஆராய்ச்சிக்குப் பின்னர் நூறு ஆண்டுகள் வரை பூமிக்குள் ளிருப்பனவற்றைக் குறித்து விளக்கமாக ஒன்றுமறிய முடியவில்லை. பூமியது மேற்பரப்பின் அமைப்பும், கதிரோன் நடுக்கோட்டைக் (Equator) கடக்கும்பொழுது அச்சின் (Axis) உறுதியற்ற அசைவும், பூமியின் உட்செல்லச் செல்ல, அடர்த்தியின் மிகுதியை உறுதிப்படுத்தியது.

கடைசியாக, இந் நூற்றுண்டில், நில நடுக்க (Earthquake) ஆராய்ச்சியின் வளர்ச்சி, முழுவதும் புதியதொரு செய்தியைக் கொடுத்திருக்கிறது. நில நடுக்கம் உண்டாகுங்கால், அழிவைத் தரவல்ல எல்லா இடங்களுக்கும் அவ் வதிர்ச்சி எட்டுகிறது. தகுதிவாய்ந்த கருவிகளைக் கொண்டு, உலகின் எல்லா விடங்களிலும் உண்டாகும் நடுக்கங்களின் வேகத்தைக் கண்டறியலாம். இந் நில நடுக்க அலைகள், நேரே பூமிக்குள் செல்லுகிறது. உலகின் பல்வேறிடங்களில் ஏற்படும் நில நடுக்க அலைகளையொன்று சேர்த்துப் பார்ப்போமாயின், சிறந்த அட்டவணையொன்றைத் தயாரிக்கலாம். இதைக் கொண்டே, எல்லா ஆழங்களிலும், அவ் வலைகளின் வேகத்தைக் கண்டறியலாம். அவ் வலைகள் பல்வேறுபட்ட வழிகளில் செல்லக் கூடியதால், அவற்றின் அலைக் குறிப்புக்கள் சிக்கல்

நிறைந்து காணப்படுகின்றன. சில அலைகள், பூமியின் வழியே நேரே வரலாம். சில அலைகள், நடுக்கம் ஏற்பட்ட இடத்தினின்று, அதை யறியும் கருவிகளுக்குச் செல்லும் வழியாகிய பூமியின் வெளிப் பரப்பிலே பிரதிபலிக்கப்படலாம். மற்றும் சில, பூமியின் உட் பாகத்தை நோக்கிச் செல்லலாம். ஆனல், பூமியின் நடுப் புள்ளியை யடைவதன் முன்னர், உட் பாகத்தின் தொடர்ச்சியற்ற நிலையால் சென்ற திசையிலேயே பிரதிபலிக்கப்படலாம். சில அலைகளின் வேகமானது, அவை செல்லும் வழியில் ஒரு அதிர்ச்சியாகவும் இருக்கும் பிறவற்றில், அலை பரப்பப்படும் திசையின் வழியிலே, இழுப்பதும் தள்ளுவதுமான ஆட்டத்தையும் தரலாம். இதன் விளக்க மெல்லாம் காலிஃபோர்னியாவில் ஹாரால்ட் ஜெஃப்ரேஸ் (Harold Jeffreys) என்பவராலும், அவரது கூட்டுத் தோழராலும் அரிதின் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

ஆப்பிள், பேரிக்காய் போன்ற பழ வகையின் நடுவே, வித்துக்கள் அமைந்திருக்கும் பாகத்தைப் போன்ற 'உள்ளகம்' (Central core) பூமிக்குள்ளேயும் அமைந்திருப்பது, நம் கவனத்தை இழுக்கக் கூடியதொன்றும். அவ் வுள்ளகத்தின் (Core) ஆரம் (Radius), பூமியின் ஆரத்தில் அரையளவுள்ளதாகவும், மேற் பாகம் கூர்மையுள்ளதாகவும் இருக்கிறது. இவ் வுள்ளகம், பக்கவாட்டில் ஏற்படும் அதிர்ச்சியின்றி, நேர்முகமாக, இழுத்தும் தள்ளியும் உண்டாக்கும் அலைகளையே பரப்புகிறது. இது, கடினப் பொருளின் பண்பின்றித் திரவப் பொருளின் தன்மையைக் கொண்டிருக்கிறது. இதைக் கொண்டே, உள்ளகத்தின் நடுப் பாகம் திரவப் பொருளாலாக்கப்பட்டதென முடிவு செய்யலாம். மற்றும், நில நடுக்கத்தினல் ஏற்படும் விசை (Force) சிறிது நேரமே நிலைத்திருப்பதால் அதன் மேற்பரப்பு கடினப் பொருளாலான தெனவு மறியலாம். இதனுல் எவ்வளவு ஆழத்தில் நடுக்கம் ஏற்படுகிறது என்றறிய சிறிது வழியுண்டாகிறது. சில ஆண்டுகளாக ஏற்படும் அமுக்கத்தினல், கற்பாறைகள் திடீரென பிளந்துவிடுகின்றன. அதனுல் நில நடுக்கம் ஏற்படுகிறது. பெரும்பான்மையான நில நடுக்கங்கள், பூமியின் மேற்பரப்பி லிருந்து சில மைல்கள் ஆழத்திற்குள்ளாகவே உண்டாகின்றன. ஆனுல், சில நடுக்கங்கள் 400 மைல் ஆழத்திலும் உண்டாகின்றன. இவ்வளவு ஆழத்தில் நடுக்கமானது திடீரென நின்றுவிடும்பொழுது, நில நடுக்கத்திற்கு வேண்டிய சக்தியைச் சேமித்து வைக்கும் வன்மையை அப்பொருள்கள் சிறிதளவே பெறுகின்றன.

இங்ஙனம், திரவப் பகுதியாகிய உள்ளகத்தைக் கடினப் பொருளால் சூழப்பட்ட ஒரு அறைபோல் இவ் வுலகமானது காணப்படுகிறது. உள்ளகத்தைச் சூழ்ந்திருப்பது கற்பாறையென, நில நடுக்க அலைகளைக் கொண்டு அறியப்படுகிறது. இதன் அடர்த்தியானது, உள்ளகத்தை நோக்கிச் செல்லச் செல்ல இரு மடங்கு அதிகரிக்கிறது. இதன் சேர்க்கைப் பொருள்களைக் குறித்துப் பலவாருக எண்ணப்படுகிறது. உருகிய நிலையிலுள்ள உலோகக் குழம்பே, பூமியின் மிக ஆழத்தில் ஏற்படும் மிகுதியான அமுக்கத்திலும் உயர்ந்த அடர்த்தியையுடைத்தாயிருக்கிறது. மற்றும் உள்ளகமும் இவ்வித உலோகக் குழம்பால் ஆக்கப்பட் டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை பெரும்பாலானவர், அவ்வுலோகம்

இரும்பென்றே நம்பி வந்தனர். அது எவ்வுலோகமாயிருந்தாலும், இரசாயன முறைக்கு மிகுதியும் மாறுபடாததொன்ருகவே இருக்க வேண்டும் இரும்பே மேற்கூறிய வற்றிற்கு ஒத்தும், சரியான அடர்த்தி யுள்ளதாகவும் இருக்கிறது. மேலும், இரும்புக் கட்டிகள் வெண்ணிரக் கதிர்களுடன் வான வெளியினின்றும் பூமியின் மேற்பரப்பை யடைகின்றன. இக்கட்டிகள், பூமியானது வந்ததைப் போன்றே, கோள் (Planets) களினின்றும் சிதறுண்டு வருகின்றன. இவைகள் இரும்பாலான உள்ளகத்தை யுடையனவாயிருக்கின்றன. எனவே, பூமியின் உள்ளகமும் இரும்பாலாக்கப்பட்டதெனக் கொள்ளலாம் எனினும் மேற்கூறிய காரணங்கள் திருப்தியளிக்கக் கூடியனவாயில்லை. வேறு விதமான ஆராய்ச்சி யொன்று, மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில், W. H. ராம்ஸே (W. H. Ramsey) என்பவரால், உறுதியுடனும், துரிதமாகவும், அண்மையில் நடத்தப்பட்டது. அவர், “எப்பொருளும் நாற்புறமும் மிகுதியாக நசுக்கப்பட்டபோது, உலோகமாக மாறுகிறது எனவே, திரவத்தன்மையிலிருக்கும் உள்ளகமும், மேற்பரப்பில் உள்ளதைப்போன்றே கற்பாறையாகும். இது நாற்புறமும் ஏற்படும் அழுக்கத்தால் ஒரு வகையுலோகமாக மாறியிருக்கிறது” எனக்குறிப்பிடுகிருர்.

பூமியின் மேற்பரப்பைக் காட்டிலும், சுரங்கங்களிலும் துளைகளிலும் (Mines and Bores) சூடு மிகுதியென்பது வெளிப்படை. சூட்டின் அதிகரிப்பு வீதம், பூமிக்குள்ளேயிருக்கும் பாறைகளையும், சூழ்நிலையையும் பொருந்திருக்கிறது. ஆனுல் நீரின் கொதிநிலை 1000 அடிகளிலிருந்து 10,000 அடிகளுக்குள்ளே கிடைக்கிறது இதற்கும் கீழே செல்லச் செல்ல, சூடு அதிகரித்துக்கொண்டே யிருக்கிறது. ஏனெனில், எரிமலைக்குழம்பு பூமிக்குள்ளிருந்து 1000 டிகிரி சென்டிகிரேடிற்கும் மிகுதியான சூட்டுடன் வெளிவருகின்றது. பூமியின் மேற்பரப்பினின்று 1800 மைல்கள் ஆழம்வரை பாறைகள் கடினப் பொருள்களாகவே அமைந்திருப்பதால், எரிமலைக் குழம்பு யாங்ஙனம் உண்டாகிறதென்பது புரியாதப் புதிராகவே யிருக்கிறது. இவ்விதம், உருகிய எரிமலைக்குழம்பின் தேக்கங்கள் ஒருசில இடங்களிலேதான் உள்ளன. சில காரணங்களைக்கொண்டு பூமிக்குள்ளே ஏற்படும் சூடானது, சில சாதகமான வேளைகளில் அக் கற் பாறைகளை உருக்கப் போதுமானதாகிறது. இதைப்போன்றதோர் விளக்கம், அச்சூடு உண்டாகுங்கால் எரியும் மலையாகவும், சூடில்லாதபோது எரியாமலையாகவு மிருக்கும், அநேக எரிமலைகளைப் பொறுத்தவரை சரியாயிருக்கலாம். ஆனுல் அதுவே அவற்றின் முழு வரலாருகாது. ஏனெனில், முற்காலத்தில் தென்னிந்தியாவிலும், கிழக்கு ஆஃப்ரிகாவிலும் வெளியாக்கப்பட்ட எரிமலைக்குழம்பிற்கும், இப்பொழுது எரியா மலையாக நிற்கும் ஸ்காட்லாண்டு எரிமலைக்கும் விளக்கந் தரமுடியாது.

பூமியின் காந்த மண்டலத்தில் (Magnetic Field) ஏற்பட்ட சிறிது மாற்றத்தால் திசைகாட்டியின் (Compass) முள் 20 அல்லது 30 டிகிரி ஏற்றத்தாழ்வைக் காட்டுகிறது. இதற்குக் காரணம் உள்ளகத்தில் ஏற்பட்ட மாற்றமேயாம். காந்தமுள்ளின் இவ்வேற்றத் தாழ்விற்கு, பூமியின் வெளிப்புறமுள்ள கடினப் பொருள்களில் ஏற்பட்ட மாற்றமே காரணம் என்பதைக்

கணக்கிட்டுக் காட்ட முடியும். உள்ளகம் திரவ நிலையிலிருப்பதால் மிக்க வேகத்துடன் இங்குமங்கும் அலையக்கூடும். மேலும், உலோகக் குழம்பானதாலும், நல்ல மின் கடத்தியானதாலும் (Good Conductor of Electricity), மின்னோட்டத்தை (Current) யெடுத்துச் செல்லக் கூடும். உள்ளகத்தின், திரவப்பொருள் அசைவுடனும், மின்னோட்டத்தைப் பாய்ச்சிக் கொண்டுமிருக்குமாயின், பூமியின் மேற்பரப்பில், மாறுபடுகிற காந்த மண்டலத்தை யுண்டாக்கும். எனவே, உள்ளகத்தினுள்ளே யுண்டாகும் அசைவையும், அது கடத்திநிற்கும் மின்னோட்டத்தையும், விளக்க முடியுமாயின், பூமியின் காந்த மண்டலத்தையும், அதிலேற்படும் மாற்றத்தையும் குறித்து விளக்கம் தரலாம். பூமியைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. அவற்றில் சிறந்தனவாகக் கருதப்படும் பிரிவில் இதுவுமொன்று.

பூமியானது ஓர் உள்ளகத்தையுடையதென்பதும், அவ்வுள்ளகத் திரவப்பொருளின் மிகுதியான அசைவினால், பூமியின் காந்த மண்டலம் மாறுபடுகிறதென்பதும் புதிதன்று. இக்கருத்து, Edmund Halley என்பவரால் Royal Society யின் துணைகொண்டு, கி. பி. 1692-ல் ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்டது. உயர்ந்த ஆராய்ச்சியின் கட்டுரைகளடங்கிய அத்தாளில் அண்மையில் கண்டு பிடித்த ஆராய்ச்சியின் குறிப்புக்களெல்லாம் காணக்கிடக்கின்றன. அவ்வாறான உயர் கருத்துக்கள் பொதிந்திருந்த அத்தாள், 350 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டதற்குக் காரணமில்லாமலில்லை. அதில் காணப்பட்ட வேடிக்கையான சில ஒவ்வாக் கருத்துக்களேயாம்.

மின்னணுத் திறன்

எவ்வகைத் தொழிலும், மனிதனால் செய்யவொண்ணா சில சிக்கல்கள் நிறைந்த வேலைகள் ஏற்படுகின்றன. ஆனால், அவற்றை மின்னணுக்கள் மிக்க விரைவிலும், பிழையின்றியும் தன்னியக்கமாகவே செய்யவல்லன. எடுத்துக்காட்டாக, தகரப் பெட்டிகள், செய்யப்படும் எஃகுத் தகடுகள், ஒரு நிமிடத்திற்கு 1000 அடிகள் நீளம் செய்யப்பட்டு உருளையாகச் சுற்றப்படுகின்றன. இவ்வளவு விரைவாக அத்தகடுகள் விரைந்து செல்வதால், அத்தகடுகளி லிருக்கும் ஊசிமுனைத் துவாரங்களை மக்கள் கண்கள் காணமுடிவதில்லை. ஆனால், அவ்விரைவிலும், ஒரு அங்குலத்தின் நூறில் ஒரு பாகம் அளவுள்ள நுண் துவாரங்களையும், ஒன்று விடாமல், "மின்னணுக்கண்" (Electronic Eye) குறிப்பிட்டுக் காட்டிவிடுகிறது.

"New Scientific Achievements"

இங்கே: சொந்தம், இரவல் எல்லாம் உண்டு. ஒன்றும் மற்றவரை வருத்துவதற்காக இல்லை; திருத்துவதற்காகவும் இல்லை.

பல சரக்கு

"சுரும்பு"

"கொஞ்ச காலமா நம்ப பாஷை அபரிமிதமா அபிவிர்த்தி அடைஞ்சிடுத்து, சார்!"

"அப்படியா? எதனலே அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"என்ன அப்பிடிக் கேக்கறேளே! முன்னெல்லாம் வெத்திலே பாக்குக் கடை இருந்ததைப் போல, இப்போ எங்கே பார்த்தாலும் புத்தகக் கடையான்னு இருக்கு!"

"ஆமாமா, வெற்றிலே பாக்குக் கடைகளிலேகூடத் தமிழைத் தூக்குப் போட்டிருக்கிருர்கள்......"

"ஆ......என்ன ஸ்வாமின்.........தமிழைத் தூக்குப் போட்டிருக்கான்னு சொல்றேள்......!?"

"இல்லே இல்லே. வெற்றிலே பாக்குக் கடையிலெல்லாம்கூடத் தமிழ்ப் பத்திரிகைகளும் புத்தகங்களும் தொங்குகின்றன என்று சொன்னேன்........."

"புத்தகக் கடைகளால் மட்டுமே சமாளிக்க முடியாத அளவுக்குன்னு பொது ஜனங்கள் தமிழைப் படிக்க ஆரம்பிச்சுட்டா!............இல்லாப் போனு வெத்திலே பாக்குக் கடையிலெல்லாம் புஸ்தகங்கள் விற்பாளோ!... பாரதியார் செய்த சேவை சார், இது......"

"எது பாரதியாரின் சேவை என்கிறீர்கள்?"

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்று அந்த மகாகவி பாடிய முகூர்த்தம் ரொம்ப பேஷான நேரம் சார்......இப்போ பாருங்களேன்.........எங்கே திரும்பினுலும், எங்கே பார்த்தாலும் ஒரே தமிழ் மயந்தான் ஸ்வாமி! பாரதியார் இப்போ கடைத் தெருவுக்கு வந்து ஒரு தடவை கொட்டம் விட்டாரானல், என்ன செய்வார் என்று நினைக்கிறீர்கள்?"

"செய்வதென்ன? ஒரு முழக் கயிறு கிடைக்குமா என்று பக்கத்துக் கடையிலே கேட்பார்......"

"என்ன சார், இந்த மாதிரி சொல்றேள்! ஒண்ணும் புரியலையே!"

"அது எப்படிப் புரியும்? பாரதியார் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்று மட்டும் சொல்லவில்லை ஐயா! நல்ல தமிழ் வழிப்பட்ட நூல்கள் ஆக்கித் தரவேண்டும் என்பது அவர் ஆசை. மேலைத் திசையின் விஞ்ஞானம் தமிழில் ஆக்கப்பட வேண்டும் என்பது அவர் இட்ட கட்டளை. இன்றைய கடைத் தெருவில் விற்பனையாகும் புத்தகங்களில் தமிழ் மணம் கமழும் நூல்கள் எத்தனை, விஞ்ஞான நூல்கள் எத்தனை என்று கணக்கிட்டுப் பார்த்தீர்களா!"

"சார், நீங்க சொல்ற வ்யூ பாயின்டே புதுசுதான் சார்! ......"

"கேளுங்கள் ஐயா, இன்னும் கேளுங்கள். நான் சொல்லுவது ஒன்றும் புதிதில்லை.........பாரதியார் சொன்னதேதான். அவருடைய வசனங்களைப் படித்திருக்கிறீர்களா?"

"சுவாமி, கோவிச்சுக்காதேள்...... பாரதியாரின் வசனங்களை நான் பார்த்தது கூடக் கிடையாது......அப்படியும் இப்படியுமா ஒண்ணு ரெண்டு கவிதைகள் தெரியும்......ஏதோ......"

"இதிலே கோபித்துக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லையே! நீங்கள் உள்ள

தைச் சொல்லிவிட்டீர்கள். பாரதி யாரின் எழுத்தை ஒன்றும் படிக்காமலே அவர் கருத்தை நறுக்குகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்......அது போகட்டும். அவருடைய வசனத்திலே ஒரு இடத்தில், அறிவுடையவர்கள் கெட்டதனால்தான் நாடு கெட்டுப் போயிற்று என்ற கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்......."

"தமிழ் பாஷை அபிவிர்த்தி அடைஞ்சுடுத்துன்னுட்டு நான் சொல்லிண்டிருக்கேன்......நீங்க என்னவோ, அறிவு......அது இதுன்னு பேசிண்டிருக்கேளே, ஸ்வாமி......"

"அவசரப்படவேண்டாம். நான் சொல்வதைச் சிறிது கேளுங்கள். எழுத்தாளர்களெல்லாம் அறிவுடையவர்கள்தானே?......"

"எழுத்து வாசனையே இல்லாத நம்ப தேசத்திலே எழுத்தாளர்கள் அறிவாளிகளாகத்தான் இருக்கணும்......"

"மிகவும் சரி. நாடு பாமர நாடு; அறிவுடைய எழுத்தாளர் சிலர். எனவே, அவர்களுடைய பொறுப்பு மிகுதியானது அல்லவா?"

"அதற்கென்ன சந்தேகம்! அவா ரெஸ்பான்சிபிலிடி தெரிஞ்சுதான் நடந்துக்கணும்.......ஆமா.......இதுக்கும் நம்ப பேசிண்டிருக்க தமிழபிவிர்த்திக்கும் என்ன சம்பந்தம் ஸ்வாமிகளே!"

"இன்னுமா தெரியவில்லை......"

"தெரியலையே"

"சரி, நானே சொல்லுகிறேன். கோபித்துக்கொள்ள வேண்டாம். எத்தனையோ பெரிய பெரிய மனிதர்களெல்லாம் மேடையிலே ஏறித் 'தமிழ் வளர்ந்துவிட்டது' என்று பேசுகிறார்கள். அந்தப் பேச்சுக்களை யெல்லாம் கேட்கிற சிலர் கடைத் தெருவில் எத்தனையோ தமிழ்ப் புத்தகங்களையும் பார்க்கிறார்கள். 'ஆமாம் தமிழ் வளர்ந்துவிட்டது' என்று எண்ணிக் கொண்டு, அப்படியே சொல்லித் திரிகிறார்கள். அந்தத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் நீங்களும். என்ன புத்தகம் வெளிவருகிறது, எது விலை போகிறது என்பது உங்களுக்குத் தெரியவே தெரியாது......"

"என்ன இந்த மாதிரி அபாண்டமாச் சொல்லிப்புட்டேளே! பாரதி சகாப்தத்திலே தமிழ் நன்னா வளர்றதுன்னுட்டுச் சொல்றதே தப்புன்னு ஒரே யடியா அடிக்கிறேளே!......"

"பாரதி சகாப்தமா!......அது செத்துச் சுண்ணும்பாகி எவ்வளவோ காலம் கடந்து விட்டது ஐயா! இப்போது என்ன சகாப்தம் நடக்கிறது தெரியுமா!......"

"ஆனாலும் இந்தத் துணிச்சல் உமக்கு ஆகாது ஸ்வாமி! பாரதி சகாப்தமே இப்போது இல்லை எங்கிறேளே!......"

"உள்ளதைச் சொல்லுகிறேன். பாரதியாரின் கண்ணியம் தமிழ் எழுத்துலகிலே இல்லை யென்றால், அவர் 'சகாப்தம்' மட்டும் 'சப்பளம் கூட்டி' உட்கார்ந்திருக்குமோ!"

"கண்ணியமே இல்லையா!......"

"ஆமாம். அதனால்தான் சொன்னேன் பாரதி சகாப்தம் போய்விட்டது என்று. இப்போது நடப்பது 'எட்டணா சகாப்தம்!'"

"எட்டணா சகாப்தம்.......!ம்....... என்ன பேர் இது?"

"நானே விளக்குகிறேன் கேளும். கலை என்று தமிழிலே ஒரு சொல் இருக்கிறது. ஆடை என்றும் அதற்கு ஒரு பொருள் உண்டு. இந்த எட்டணா சகாப்தத்தை விளக்க இன்னொரு பெயர் வேண்டுமானால், கலை இல்லாத 'கலை'யைப் பரப்பும் காலம் என்று சொல்லலாம். அதாவது, நேரடி நிர்வாண யுகம். அட்டைப் படத்திலே ஒரு பெண்ணின் படம். அந்தப் பெண் எப்படித் தோற்றம் அளிக்க வேண்டும் தெரியுமா! மனிதன் தன்னுடைய அக்கா, தங்கை, அன்னை, மனைவி போன்ற பெண்கள் பிறர்முன் எப்படிக் காட்சி அளிக்கக் கூடாது என்று நினைக்கிறானே, அந்த

அலங்கோலத்தில் அட்டைப் பெண்ணின் படம் இருக்க வேண்டும்!...... நான் சொல்லுகிற மாதிரியான புத்தகங்களைப் பார்த்திருக்கிறீர்களா, இல்லையா?''

"ஆமா, சார். நீங்க சொல்றது வாஸ்தவந்தான். அநேகமா அப்பிடித்தான் இருக்கு............"

"அதுமட்டுமா? இன்னும் எட்டணு மகத்துவம் கேளுங்கள். புத்தகத்துக்குப் பேர் வைக்கிறது அட்டைப் படத்தைவிடப் பெரிய 'கலை'. கூளப்ப நாயக்கன் காதல், விறலிவிடு தூது போன்ற புத்தகங்களை எழுதிய சுப்பிரதீபக் கவிராய தாசர்களாக இன்றைய எழுத்தாளர்கள் ஆகவேண்டும். வாடகைக் கண்ணுட்டி, வழக்கமான விபசாரம், காமத்தின் இமயம், சாக்கடைக் காதல், உல்லாசி, தளுக்குக்காரி, மினுக்கு மேனி......பத்தாம் காதலி, பதினெட்டாவது கணவன்.........இப்படியாகப் பெயர் வைக்கவேண்டும்..."

"சார், இதையெல்லாம் கேட்டாலே ரொம்பக் கேவலமா இருக்கு சார்....."

"கேட்டால்தானு! எழுதுகிற புண்ணியவான்களுக்கு அக்கா — தங்கை என்ற உணர்ச்சி இருக்குமா என்று கேளுங்களேன். இந்தச் சுப்பிரதீப தாசர்கள் அட்டைப் படத்தோடும் அதன் பெயரோடுமட்டும் நிற்பதில்லை......உள்ளே எழுதுகிற எழுத்திலும் அவர்களின் இதய நாற்றம் நம் குடலைப் பிடுங்கும். — கேட்டால் சமுதாயத்திலே புரையோடிப் போயிருக்கிற புற்றுநோய்க்குப் புரட்சிகரமான 'ஆபரேஷன்' சேவையிலே ஈடுபட்டிருப்பதாக எதுகை மோனைகளோடு திருவாய் மலர்ந்திடுவார்கள்......"

"சார், பேனு பிடிக்கிற தொழில் ரொம்பவும் கண்யமானது என்று சொல்கிருர்களே......இதை யெல்லாம் பார்த்தா......"

"பேனு பிடித்தவன் கை செங்கோல் பிடிக்கும் கையை ஆட்டிவைக்கும் என்பது உண்மைதான். ஆனுல், இந்தச் சுப்ரதீபங்களின் கை செங்கோலை மட்டுமா ஆட்டும்! நாட்டின் செம்மையையே ஆட்டிப் படைக்கும்.........தப்பித் தவறி அரசாங்கம் தலையிட்டாலோ வந்தது மோசம்.........'ஐயோ எழுத்துரிமை பறிபோயிற்று, சர்வாதிகாரம் அடியோடு தொலைக' என்று ஏகக் கூச்சல் போடும் இந்தத் தெருக் கூட்டம்......"

"எழுத்துரிமையே தவறு என்கிறீர்களா!"

"நான் அப்படிச் சொல்லவில்லையே! நல்ல கருத்துக்களை நேர்மையான முறையிலே—நாட்டுக்கு உகந்த முறையிலே யார் வேண்டுமானுலும் தெரிவிக்கும் உரிமை எப்போதும் எங்கும் இருக்கத்தான் வேண்டும், ஆனுல், இந்த 'நிர்வாண நிபுணர்'கள் கேட்பது எழுத்துரிமை என்ற பெயரில் அடங்குவது அல்லவே!"

"சார், நீங்க சொல்றதெல்லாம் சரிதான். ஒரே ஒரு சந்தேகம்......... அவா எழுதறதெல்லாம் நாட்டிலே நடக்கிற சமாசாரமா இல்லையா!"

"பதிலுக்கு ஒரே கேள்விதான்: எல்லாருக்கும் தெரிந்ததுதான்; மனிதனுக்குமட்டும் வீடு எதற்கு? நாய்கள் மாதிரி தெருவிலே அலையக் கூடாதோ?......எதற்கும் ஒரு நாகரிக முறை ஒன்று உண்டு அல்லவா?"

"அது சரிதான். இதை ஏன் எட்டணு மனப்பான்மை என்று சொன்னேள்?......"

"அவர்கள் மாதிரி பெயர் சொல்ல மாட்டாமல்தான். மேலும், சின்னஞ் சிறு புத்தகங்களாக எட்டு எட்டு அணுவுக்கு வெளியிடுகிற வியாதி இருப்பதால் சொன்னேன்............சில பேர் பன்னிரண்டணுவுக்குப் போவார்கள்; வேறு சிலர் சிறிது இறங்குவதும் உண்டு.........மனப்பான்மை ஒன்றுதான்......தயவு செய்து இது பாரதி சகாப்தம் என்று சொல்லித் தமிழின் மானத்தைக் குலைக்காதீர்கள். அமெரிக்க ஆங்கில அரை நிர்வாண நாகரிகம் தமிழ் எழுத்துலகிலே மொழிபெயர்க்

கப்பட்டு உலவுகிறது. அறிவுப் பொறுப்புடைய எழுத்தாளர்கள் சமுதாயத்தைச் சீர்குலைத்தே தீர்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டு கிளம்பியிருக்கிருர்கள்.....எத்தனையோ எதிர்ப்புக்களைச் சமாளித்த தமிழ் மொழிக்கு, இந்த எட்டணு அட்டைப் பட சகாப்தம் மீண்டும் ஒரு சோதனைக் கட்டம்.''

●

அமெரிக்காவில் உள்ள ஒரு ஏரி தான் உலகத்திலேயே மிக நீளமான பெயர் உடையது. ஆழத்திலோ அகலத்திலோ பெரியதாக இல்லாவிட்டாலும் பெயரின் நீளத்திலாவது பெரியதாக இருக்கிறதல்லவா? அதை எப்படி உச்சரிப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படியே ஆங்கிலத்தை எழுதிவிடுகிறேன். CHARGOGGAGOGGMANCHAUGG-AGOGGCHAUBUNAGUNGA-MAUGG — 45 எழுத்துக்கள் தான். இந்தப் பெயர் செவ்விந்தியர்கள் வைத்ததாம். இந்தப் பெயருக்கே ஒரு பொருள் இருக்கிறதாம். "உன் பக்கத்துக் கரையில் நீ மீன் பிடி; என் பக்கத்துக் கரையில் நான் மீன் பிடிக்கிறேன்; நடுவில் யாரும் மீன் பிடிக்கக் கூடாது'' என்று பொருள் சொல்லுகிறது ஒரு கதை.

●

சேலத்திலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. 'கடவுள் இல்லை என்கிறவன் மடையன்; உண்டு என்கிறவன் பொய்யன்' என்ற வாக்கியங்களிடையே உள்ள வேற்றுமையை 'ஆராய்கிறது' அந்தக் கடிதக் கட்டுரை. மதவாதிகளைத் தாக்கு தாக்கு என்று தாக்குகிருர் எழுதிய நண்பர். அவ்வளவு தான். 'உண்டு என்கிறவன் பொய்யன்' என்று முடிவுக்கு வர அவர் கடிதம் ஓரளவு துணையாகலாம்; முதல் வாக்கியத்தின் தராதரம் தெளிவாகவில்லை. பின்னது சரி என்பதனுல் முன்னது தவருகிவிடாது. சி. இ. எம். ஜோட் எழுதிய கடவுளும் தீமையும் (God and Evil) ஷா எழுதிய மெதுசலா நாடகம் முதலியவற்றைத் தெளிவுபெறும்படி பன்முறை படித்த பிறகுதான் ஷெ இரண்டு வாக்கியங்களையும் எடைபோட முடியும்.

●

'பெரிதே உலகம் பேணுநர் பலரே'

●

உலர்ந்த ஆரஞ்சுத் தோலைத் தேயிலையோடு வைத்திருந்தால், தேயிலையின் புதுமை மாறுவதில்லை.

●

ஒப்பியம் முதலான லாகிரிப் பொருள்கள் உலகில் பல நாடுகளில் உற்பத்தியாகின்றன. அவை மருந்துகளுக்குப் பயன்படக் கூடியவை. ஆனுல், போதைப் பொருளாகப் பயன்படுத்துவதால் ஏற்பட்டுள்ள தீங்கு இன்று உலகப் பிரச்சினையாகிவிட்டது. இதைத் தீர்ப்பதற்கான வழிதுறைகளைக் காணவேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் அவை (யூ ஞே) முடிவு செய்திருக்கிறது.

●

திருமதி ஹெலன் கேஸினீலி என்பவர் சான்பிரான்ஸிஸ்கோவில் ஒரு திருடனிடம் சிக்கிஞர். அவன் 140 டாலர் பணத்தைப் பறித்துக்கொண்டான். அதன்பிறகு திருடனின் பையை அம்மையார் தடவிஞர். அங்கே துப்பாக்கி இல்லை. உடனே திருடன் பணத்தைப் பறிகொடுக்க வேண்டியதாயிற்று.

●

ஏர்னெஸ்ட் லாரன்ஸ் என்ற அமெரிக்க விஞ்ஞானி நோபல் பரிசு பெற்றவர். அவர் இப்போது ஒரு புதிய வர்ண டெலிவிஷன் கருவி கண்டு பிடித்திருக்கிருர். அந்தக் கருவியில் கறுப்பு – வெள்ளை ஒளி பரப்பும் காணலாம்; வர்ண அஞ்சலையும் பார்க்கலாம். இரண்டுக்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ள இந்தக் கருவியைக் குறைந்த செலவில் செய்துவிடலாமாம். எலக்ட்ரான் திருவிளையாடலே வர்ணக் காட்சிக்குத் துணைபுரிகிறது.

பெண்ணின் கண்ணீர்

அறிவடிவன்

●

ஒன்பதாவது காட்சி

காலம்: காலை

இடம்: வீதி

உறுப்பினர்கள்: தங்கவேலு, கங்கன், வரதன்.

(கங்கனும் வரதனும் பேசிக்கொண்டு வருகிறார்கள்).

கங்கன்: காலமே கெட்டுப்போய் விட்டது. அநியாயம்! அநியாயம்!!

வரதன்: என்ன அண்ணே, காலத்தை வெறுத்துப் பேசுகிறீர்கள்! என்ன செய்தி?

கங்கன்: ஊரெல்லாம் பேசிக் கொள்கிறதே, உனக்குத் தெரியாதா?

வரதன்: ஊரெல்லாம் பேசிக் கொள்கிறதா? என்ன அண்ணே?

கங்கன்: ஜமீன்தார் மகன் கருணாகரன் அந்தப் பறைப் பெண் வீட்டிலேயே கிடக்கிறானாம். தூ. *(வெறுப்போடு காறி உமிழ்கிறான்).*

வரதன்: எந்தப் பறைப் பெண் வீட்டில் அண்ணே?

கங்கன்: அந்தப் பறைக் குட்டி வள்ளி வீட்டிலேதான்.

வரதன்: நம் ஜமீன்தார் மகனுக்கு அந்தப் பறைக் குட்டிமேலே என்ன அண்ணே அவ்வளவு ஆசை வந்து விட்டது?

கங்கன்: இதுதான் கலிகாலத்தின் கோலம். இந்தக் கலிகாலத்திலே இது தானா நடக்கும்; இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ! அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். அட ஆண்டவா, ஆண்டவா!

(கையிலும் முகத்திலும் கட்டுகளோடு தங்கவேலு வருகிறான்).

வரதன்: தங்கவேலு அண்ணே வா, வா. என்ன அண்ணே கை, முகம் இங்கெல்லாம் ஒரே கட்டாக இருக்கிறது! எங்கேயாவது சண்டை போட்டாயா?

தங்கவேலு: சண்டையுமில்லை, ஒன்றுமில்லை. நல்ல வேலை செய்தாய் அண்ணே! என்னைத் தனியாக விட்டு விட்டு வந்துவிட்டாயே அண்ணே!

வரதன்: தனியாக விட்டு விட்டு வந்து விட்டேனா! என்ன அண்ணே சொல்கிறாய்!

(யோசிக்கிறான்).

ஓகோ! அன்று கவி பாடிக்கொண்டு ஜமீன்தார் வீட்டுக்குப் போனாயே, அதைச் சொல்கிறாயா?

தங்கவேலு: ஆமாம் அண்ணே.

வரதன்: பிறகு என்ன அண்ணே நடந்தது? ஜமீன்தார் நிறையக் கொடுத்தாரா அண்ணே?

தங்கவேலு: நிறையக் கொடுத்தார் அண்ணே.

வரதன்: தங்கமாகக் கொடுத்தாரா, வெள்ளியாகக் கொடுத்தாரா அண்ணே?

தங்கவேலு: என்னைப் பார்த்தால் தெரியவில்லையா அண்ணே, என்ன கொடுத்திருப்பார் என்று. உதை தான் கொடுத்தார்.

வரதன்: (ஆச்சரியத்துடன்) அவ்வளவு பெரிய கவிக்கு உதையா கொடுத்தார்! விவரமாகச் சொல் அண்ணே.

தங்கவேலு: அன்று உன்னை வெளியில் நிற்கும்படிச் சொல்லிவிட்டு ஜமீன்தார் வீட்டுக்குள் நான் நுழைந்ததும் வேலையாள் ஒருவன் வந்து 'யார்' என்று என்னைக் கேட்டான். ஜமீன்தாரிடம் போய்க் கவிவாணர் வந்திருக்கிறார் என்று சொல் என்று அவனிடம் சொல்லி அனுப்பினேன். வேலையாள் உடனே திரும்பி வந்து 'ஐயா உங்களை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்' என்று சொன்னான். நான் போனதும் ஜமீன்தார் மிகவும் மரியாதையாக என்னை வரவேற்று நாற்காலியில் அமரும்படி சொன்னார். பிறகு 'உங்கள் கவியைப் பாடுங்கள் என்றார்.' நான் கவியைப் பாட ஆரம்பித்தேன். அவர் கவியை உற்றுக் கேட்டுக் கொண்டே இருந்தார். நான் பாடி முடித்ததும் தம் பக்கத்தி லிருந்த இரண்டு ஆட்களைக் கூப்பிட்டு முதலில் அவர்கள் காதிலே இரகசியமாக ஏதோ சொன்னார். பிறகு 'இந்தக் கவி வாணருக்கு நல்ல சன்மானம் கொடுத்து அனுப்புங்கள்' என்று அவர்களிடம் உரத்துச் சொன்னார். நான் மிகவும் சந்தோஷமாக அவர்களோடு போனேன். அவர்கள் ஓர் அறைக்குள் என்னை அழைத்துக்கொண்டு போய் என் கன்னங்களில் ஓங்கி அறைந்தார்கள். பிறகு அவர்கள் முழு பலங்கொண்டு என்னை அடித்தார்கள்; உதைத்தார்கள். நான் மயங்கி விழுந்து விட்டேன். நான் மயக்கந் தெளிந்து என் கண்ணைத் திறந்ததும் நான் ஒரு சாக்கடையில் விழுந்து கிடப்பதைக் கண்டேன் பிறகு மெல்ல எழுந்து வீடு வந்து சேர்ந்தேன்.

வரதன்: இப்படியா செய்தான் அந்த ஜமீன்தார்.

தங்கவேலு: ஆமாம் வரதண்ணே. உடம்பெல்லாம் இன்னும் வலிக்கிறது. இனிமேல் இந்தக் கவியைப் பற்றியே நினைக்கமாட்டேன். நமக்குக் கவியும் வேண்டாம் இத்தகைய சன்மானமும் வேண்டாம்...... சரி, உன்னை ஜமீன்தார் வீட்டுக்கு வெளியிலேயே இருக்கும்படிச் சொல்லிவிட்டுப் போனேனே, நீ ஏன் அங்கில்லாமல் வந்துவிட்டாய்?

வரதன்: நீ உள்ளே சென்று சிறிது நேரத்திற்குள் 'தொப் திப்' என்று சப்தம் கேட்டது. சன்மானம் மிக பலமாக இருக்கிறதென்று நினைத்து ஒரே ஓட்டமாக ஓடிவந்து விட்டேன்.

கங்கன்: என்னதான் இருந்தாலும், இப்படியா மூக்கையும் கையையும் உடைப்பது?

வரதன்: என்ன செய்வது, ஜமீன்தார் அதிகாரம்! பணம் கொஞ்சம் அதிகமாக இருந்துவிட்டால் கர்வம் தலைக்கேறி விடுகிறது!

கங்கன்: அதனால்தான் பிடுங்கிக் கொண்டார்கள்!

வரதன்: பிடிங்கிக்கொண்டார்களா? எதைப் பிடிங்கிக்கொண்டார்கள்?

கங்கன்: உனக்குத் தெரியாதா? எப்பவோ பிடிங்கிக் கொண்டார்களே!

வரதன்: எதை, யார், எதற்காகப் பிடிங்கிக் கொண்டார்கள். விவரமாகச் சொல்லண்ணே.

கங்கன்: அரசாங்கத்தார் ஜமீன்தார்களிடமிருந்து ஜமீன்களை எப்பவோ பிடிங்கிக் கொண்டார்களே!

தங்கவேலு: உண்மையாகவா?

வரதன்: இப்படி ஏழைகளை வாட்டி வதைத்தால் ஏன் பிடிங்கிக் கொள்ளமாட்டார்கள்?

தங்கவேலு: இப்பொழுது நம் ஜமீன்தாருக்கு ஜமீனே இல்லையா?

தங்கன்: அவர் ஜமீன் இழந்து எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன.

தங்கவேலு: அவருக்கு ஜமீன் போனால் என்ன? கண்ணுக்கு எட்டும் தூரம் அவருக்குச் சொந்த நிலங்கள் இருக்கின்றன. அதனால்தான் நம்மைப் போல ஏழைகளை வாட்டி வதைக்கிறார்.

வரதன்: அந்த ஜமீன்தாருக்கு நல்ல மகன் வந்து பிறந்தான், அவன் மானத்தை வாங்குவதற்கு! நம் வயிற்றெரிச்சல் வீண் போகுமா?

(மூவரும் போகிறார்கள்).

பத்தாவது காட்சி.

காலம்: மாலை

இடம்: சோலை

உறுப்பினர்கள்: வள்ளி, கருணாகரன்.

(கருணாகரன் சோலையில் வள்ளியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்; வள்ளி தூரத்தில் மிக விரைவாக ஓடி வருவதைக் காண்கிறான். உடனே அவன் ஒரு மரத்தின் பக்கத்தில் சென்று மறைந்து கொள்கிறான். வள்ளி அவ்விடத்திற்கு வந்து சுற்றிப் பார்க்கிறாள். கருணாகரன் அவளறியா வண்ணம் மெல்ல வந்து தன் கைகளால் அவள் கண்களை மூடுகிறான்).

வள்ளி: தெரியும். உங்களுக்கு எப்பொழுதும் என்னை ஏமாற்றுவது தான் வேலை.

(சிரித்துக்கொண்டே அவனுடைய கைகளைத் தன் கண்களினின்றும் நீக்குகிறாள்).

கருணாகரன்: வள்ளி, நான் எவ்வளவு நேரம் உனக்காக இங்குக் காத்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?

வள்ளி: நீங்கள் காத்துக்கொண்டிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் என்ன செய்வது? ஆற்றுக்குச் சென்று தண்ணீர் கொண்டு வர இவ்வளவு நேரமாகி விட்டது.

கருணாகரன்: வள்ளி, நீ நாள் தோறும் தண்ணீருக்காக இரண்டு மூன்று கல் நடப்பது எனக்கு மிக்க வருத்தமாக இருக்கிறது. இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்.

வள்ளி: ஐயையோ! இதற்காக ஒருவித ஏற்பாடும் வேண்டாம். உங்கள் அப்பாவுக்குத் தெரிந்தால் அவர் சீறி விழுவார். அவரை நினைத்தால் என் நெஞ்சம் நடுங்குகிறது. என்னால் தங்களுக்கு ஏதாவது ஆபத்து நேருமோ என்று அஞ்சுகிறேன்.

கருணாகரன்: நாம் துன்பமெல்லாம் மறந்து இன்பமாக இருக்க வேண்டிய இச் சமயத்தில் நீ ஏன் ஏதேதோ நினைந்து உன் மனதைக் குழப்பிக் கொள்கிறாய்? வருவது வரட்டும். நான் எதற்கும் அஞ்சேன். வள்ளி, இங்கு இளங் காற்று இப்பொழுது எவ்வளவு இன்பமாக வீசுகிறது! சற்று முன் நீ இல்லாத சமயத்தில் இக் காற்று என்னை எவ்வளவு வருத்திற்று தெரியுமா? இப்போது உன்னைக் கண்டதும் இவ் விளங் காற்றுத் தன் கொடுமையை எல்லாம் இழந்து அன்புடையதாய்மாறி இன்பம்செய்கிறது. நல்லார் சேர்க்கையால் தீயவரும் நல்லவராகிவிடுவர் என்பது உண்மையே.

வள்ளி: (நாணித் தலைகுனிகிறாள்) எவ்வகையிலும் தகுதியற்ற ஏழையாகிய என்னைத் தாங்கள் அன்பினால் புகழ்கிறீர்கள். நான் தாயும் தந்தையும் இழந்த ஓர் அனாதை. தங்கள் அன்பும் ஆதரவும் இல்லாமல்

[library stamp, illegible]

இருந்தால், நான் என்னபாடுபட்டிருப்பேன்! தங்கள் கருணையால் அல்லவா நான் இவ்வளவு சுகத்தோடு வாழ்கிறேன். என்னைப்போல் பேறு பெற்றவர் இவ்வுலகத்தில் யார் இருக்கிறார்கள்! தாங்களே என் கண்கண்ட தெய்வம்.

கருணாகரன்: உன்னைப் போல் பண்புடைய பெண்ணை இவ்வுலகில் எங்கும் காணமுடியாது. நீ தாழ்ந்த குலத்தில் தோன்றியவளாயினும் உயர்ந்த குணத்தால் ஓங்கி விளங்குகிறாய். நீ சேற்றிலே விளைந்த செந்தாமரை. நீயே என் வாழ்வு! நீயே என் செல்வம்! வள்ளி, இனி உன்னையன்றி நான் உயிர் வாழ முடியாது.

(*வள்ளியை அணைத்துக் கொள்கிறான்.*)

பதினொன்றும் காட்சி.

காலம்: பிற்பகல்

இடம்: ஜமீன்தார் வீடு

உறுப்பினர்கள்: ஜமீன்தார் இராமசாமிப் பிள்ளை, அவர் நண்பர் அரங்கசாமிப் பிள்ளை, கணக்குப் பிள்ளை கிட்டு ஐயர்.

(*ஜமீன்தார் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். கணக்கப்பிள்ளை கிட்டு ஐயர் கணக்குப் புத்தகங்களை அவருக்குக் காட்டிக் கையெழுத்து வாங்குகிறார்.*)

ஜமீன்தார்: நமக்குச் சேரவேண்டிய கடன்களெல்லாம் சரியாய் வந்து சேர்ந்தனவா?

கிட்டு ஐயர்: சில 'புரோநோட்டு' பாக்கிக்கு வட்டி மட்டுந்தான் வந்தது. சிலவற்றிற்கு முதலும் வட்டியும் சேர்ந்திருக்கின்றன. இன்னும் சில கடன்களுக்கு ஒன்றுமே வரவில்லை.

ஜமீன்தார்: ஒன்றுமே வரவில்லை என்று சும்மா இருந்தால் வரவேண்டிய கடன் வந்துவிடுமா? யார்யார் இன்னும் கடனைக் கொடுக்கவில்லையோ அவர்கள் மீது வழக்குத் தொடர நாளைக்கே ஏற்பாடு செய்யும்.

கிட்டு: அப்படியே செய்கிறேன்.

ஜமீன்தார்: குத்தகை பாக்கியெல்லாம் என்ன ஆயிற்று?

கிட்டு: இன்னும் ஏழெட்டுப் பேர் கொடுக்கவில்லை. நேற்றுகூட அவர்களைப் பார்த்துக் கேட்டேன். இந்த வருஷம் விளைவு இல்லையாம். அதனாலே குத்தகைப் பணத்தைக் கொஞ்சம் குறைக்கவேண்டுமென்று அவர்களெல்லாம் சொல்கிறார்கள்.

ஜமீன்தார்: விளைவு இல்லாமல் போனால், அதற்கு நாமென்ன செய்வது? குத்தகைப் பணம் குறைக்க முடியாது. யார் யார் இன்னும் கொடுக்கவில்லையோ அவர்களிடம் போய் நான் வரச்சொன்னதாகச் சொல். ஒவ்வொருவனையும் நான் நேரில் கேட்கிறேன். கொடுக்க மறுத்தால், பிறகு இதோ இருக்கவே இருக்கிறது இந்தச் சாட்டை, நான் பார்த்துக் கொள்கிறேன்.

கிட்டு: அதுதான் சரி.

(*அரங்கசாமிப் பிள்ளை வருகிறார். கிட்டு ஐயர் போகிறார்.*)

ஜமீன்தார்: ரங்கசாமி, வா, வா. என் பல நாட்களாக இந்தப்பக்கமே நீ திரும்பவில்லை?

அரங்கசாமி: எத்தனையோ முறை இங்கு வரவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் முடியவில்லை.

ஜமீன்தார்: ஏன்? அதிக வேலையோ?

அரங்கசாமி: ஆமாம் ராமசாமி ஓய்வே இல்லை. இன்றைக்குக்கூட எனக்கு அதிக வேலையாய் இருந்தது. முக்கியமான செய்தி ஒன்று உன்னிடம் சொல்ல வேண்டுமென்று வந்தேன்.

ஜமீன்தார்: என்ன அது?

அரங்கசாமி: வீதியிலே காலை வைத்தால் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. உன்மகன் கருணாகரன் பறைப்பெண் வள்ளியைக் காதலிப்ப தாக ஊரெங்கும் இழிவாகப் பேசிக் கொள்கிறார்கள். இது பொறுக்க முடியவில்லை ராமசாமி.

ஜமீன்தார்: (சீற்றத்துடன்) என் மகன் கருணாகரா அப்பறைச் சிறுக்கியை நேசிக்கிறான்? இதற்காகவா அவனைச் சீரும் சிறப்போடும் இத்தனை நாள் வளர்த்தேன்! ஆம், உண்மை யாக இருக்கலாம். சில நாட்களாக அவன் போக்கே மாறுதலடைந்திருக் கிறது.........ஐயோ, இந்த அவமானம் என்றால் பொறுக்க முடியவில்லையே! அவனை என் உயிரினும் மேலாக அல்லவோ நான் எண்ணி வளர்த்து வருகிறேன். என் குலத்திற்கு அழி யாப பழியை அவன் ஏற்படுத்தி விட்டானே!

அரங்கசாமி: உன் மகனைக் குறித்து வருந்துவதில் என்ன பயன், இராம சாமி? அந்தப் பறைப்பெண் எப்படி யாவது அவனை மயக்கி இருப்பாள்?

ஜமீன்தார்: ஆம். என் மகன் அவ்வளவு துணிவு உடையவன் அல்லன். இதற்கு அவள்தான் காரண மாக இருக்கும். என்ன செய்வ தென்று தோன்றவில்லையே, ரங்கசாமி!

அரங்கசாமி: அவளை ஊரைவிட்டுத் துரத்தி விடுங்கள். அவள் இந்த ஊரில் இல்லாமற் போனால் கருணா கரன் அவளை எப்படி சந்திக்கமுடியும்? உடனே அவனுக்கு ஒரு பெண் பார்த்துத் திருமணத்தை முடித்து விடலாம் அல்லவா?

ஜமீன்தார்: இதுதான் சரியான யோசனை ரங்கசாமி.

பன்னிரண்டாவது காட்சி

இடம்: வள்ளி குடிசை

காலம்: நடு இரவு

உறுப்பினர்கள்: ஜமீன்தார் ராமசாமிப் பிள்ளை, ஏழுமலை, வள்ளி.

(நடு இரவில் ஏழுமலை கையில் 'டார்ச்' விளக்கு பிடித்துக்கொண்டு முன்னே நடக்க, ஜமீன்தார் அவன் பின்னே சென்று வள்ளி குடிசையை அடைகிறார்.)

ஜமீன்தார்: ஏழுமலை! கதவைத் தட்டுடா.

(ஏழுமலை குடிசைக் கதவைத் தட்டுகிறான்.)

ஏழுமலை: சாமி, பதிலே இல்லை. அவள் நன்றாகத் தூங்குகிறாள்போல் இருக்கிறது.

ஜமீன்தார்: ஓங்கித் தட்டடா?

ஏழுமலை: எய்! வள்ளி! வள்ளி! கதவைத்திற. *(தட்டுகிறான்)*

(வள்ளி கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகிறாள். அங்கு ஜமீன்தாரைக் கண்டு திடுக்கிட்டு நடுங்குகிறாள்.)

ஜமீன்தார்: ஏ! பறக் கழுதை! கதவைத் தட்டுபவன் உன்காதலன் என்று நினைத்துக் கதவைத் திறந்தாயோ! *(கோபத்தோடு சிரிக்கிறார்)* ஏ! நாயே! உனக்கு எவ்வளவு திமிரடி! என் மகனெங்கே; கேடுகெட்ட பறைச்சிறுக்கியாகிய நீயெங்கே! அவனை எப்படியோ மயக்கிக் கெடுத்து விட்டாயே!

வள்ளி: நானா கெடுத்து விட்டேன் ஐயோ!

ஜமீன்தார்: சீ! வாயை மூடு. அற்பப் பதரே! குறுக்கே பேசாதே. உன்னால் என் மானம் போகுதடி! சண்டாளி! பொழுது விடிவதற்குள் நீ இந்த ஊரை விட்டு வெளியே போக வேண்டும். இனிமேல் இந்த ஊர்ப்பக்கமே நீ திரும்பக்கூடாது. நீ மீறி இங்கிருந்தால் உன்னைச் சித்திரவதை செய்வேன்.

(ஜமீன்தாரும் ஏழுமலையும் போகிறார்கள்.)

வள்ளி: ஐயோ! அவர் மகனை நான் கெடுத்துவிட்டேனாம்! அவர் மகன் என்னிடம் அன்பு கொள்வது என் தவறா? இது என்ன நியாயம். ஐயோ! நான் இந்த ஊரை விட்டுச் சென்று எப்படி வாழ்வேன்! தெய்வமே!

(பாடுகிறாள்.)

ஐயோ அநியாயமே உலகம்
பாவம் ஒப்டமே
பழியோர் இடமே
பஞ்சனைப் பட்டே
பாதவிக்கின்றேன் (ஐயோ)
தந்தையை இழந்தேன்
நொந்து மெலிகின்றேன்
கொஞ்சமும் இரக்கம்
இல்லை இவ்வுலகே

(தொடரும்)

குழாய் விளக்குகள்

'அணு'

இரவைப் பகலாக்கும் குழாய் விளக்குகள் (tube lights) வெகு விரைவில் மூலைமுடுக்குகளை யெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டன. பெட்டிக் கடை, க்ராப்வெட்டு மிடங்கள், சலவை செய்யுமிடங்கள், சாதாரண வீடுகள் என்று பாக்கி விடாமல் அவை காட்சி யளிக்கின்றன. பந்தல்களில் அழகிற்கு அழகு; வெளிச்சத்திற்கு வெளிச்சம். வாழைத் தண்டைத் தோற்கடிக்கும் தோற்றம்! இந்த வாழைத் தண்டு விளக்குக்களில்தான் எத்தனை விதங் கள்! ஒரு பாகம் நீளமுள்ள விளக்கு முதல் படுக்கை யறைக்கேற்ப ஒரு சாண் நீளமுள்ள சிறு விளக்குகள், நமக்குப் பிடித்த நிறங்கொண்ட ஒளி யைத் தரும் விளக்குகள் முதலியனவும் உள்ளன.

கண்கூசாத குளிர்ந்த ஒளி; பகல் வேளைதானோ என்று எண்ணும்படி யாக நிழல் விழாத வெண்மை ஒளி. சாதாரண மின்சார பல்புகளைவிடக் குறைந்த மின்சாரச் செலவில் பன் மடங்கு ஒளிதரும் வசதிமிக்க குழாய் விளக்குகளை யார்தான் விரும்ப மாட் டார்கள்!

சாதாரண மின்சார விளக்குகளில் மின்சாரம் பாயும்போது அதிலுள்ள இழை சூடேறிப் பிரகாசித்து (incandescent) ஒளியைத் தருகிறது. இதில் மின்சாரத்தின் பெரும் பகுதி வேண்டாத வெப்பமாகவே மாறுகிறது; விளக்கு வரிக்காகக் கட்டும் பணத்தில் உண்மையில் ரூபாய்க்கு ஒன்றரையணா தான் வெளிச்சத்திற்காகக் கொடுக் கிறோம்; மீதி மின்சாரம் வெப்ப மாகவே வீணாகிறது. இவற்றை ஒளி விளக்குகள் என்பதை விட வெப்ப விளக்குகள் என்பது பொருந்தும்.

வெப்பம் தோன்றாமலேயே ஒளி தரக்கூடிய விளக்குகளானால் நாம் கொடுக்கும் பணம் தகும்.

ஆவி விளக்குகளில் (gas discharge lamps) சற்று அதிகப்படியான மின் சாரம் ஒளியாக மாற்றப்படுகிறது. உள்ளே அடைக்கப்பட்டுள்ள ஆவி சூடேறித்தான் பிரகாசிக்க வேண்டு மென்பதில்லை. ஆவியூடே மின்சாரம் பாயும்போது ஒளி பிறக்கிறது. தெருச்சந்திகளில் கண்ணைக் கூசும் பாதரச ஆவி விளக்குகள் (mercury-vapour lamps) அள்ளி வீசும் பச்சை ஒளியில் அல்ட்ரா வய லெட் கதிர்கள் அதிகம் கலந்துள்ளன. மஞ்சள் ஒளியைப்பெற சோடிய ஆவி விளக்குகளை (sodium-vapour lamps) உபயோகிக்கிறோம். விளம் பரப் பலகைகளில் பொலியும் நியான் விளக்குகள் ஆவிவகையைச் சேர்ந்த விளக்குகளே.

அல்ட்ரா வயலெட் கதிர்கள் கண் ணுக்குப் புலப்படாதவை. ஆனால் கண்களில் பட்டால் வலிதோன்ற ஆரம்பிக்கும்.

விளக்குகளி லிருந்து சாதாரணமாக வெளிப்படும் அல்ட்ரா வயலெட் கதிர் களைக் கண்ணுக்குப் புலப்படும் ஒளி யாக மாற்றியும் விளக்குகளின் பிர காசத்தை அதிகப்படுத்திக்கொள்ள லாம்.

சாதாரண ஒளியை விடச் சக்திமிக்கவை அல்ட்ரா வயலெட் கதிர்களும், எக்ஸ்-கதிர்களும். சில பொருள்கள் தம் மீது இக் கதிர்கள் படும்போதெல்லாம் ஒளிரும் தன்மையுடையவை. இத்தகைய பொருள்கள் பூசிய திரை மீது இக்கதிர்கள் பட்டால் திரைப்பரப்பும் ஒளிர்கிறது. மற்ருெரு வகைப் பொருள்கள் தம்மீது கதிர்கள் பட்டு சற்று நேரத்திற்குப் பின்னும் ஒளிர்ந்து கொண்டேயிருக்கும். முன்னைய வகைப் பொருள்களை fluorescent materials என்றும் பின்னையவற்றை phosphorescent materials என்றும் வழங்குகிருேம். இரண்டாம் இனத்தைச் சேர்ந்தவை துத்தநாக சல்பைடு (zinc sulphide), சுண்ணும்பு சல்பைடு (calcium sulphide) போன்ற பொடிகள். கடிகாரங்களில் ரேடியம் வைத்த முகப்புகளில் (radium dials) உள்ள எழுத்துக்கள், கதிரியக்கம் கொண்ட ரேடியம் போன்ற உப்புக்கள் சிறிதளவோடு மேற் கூறிய மலிவான சல்பைடுகளையும் அதிகம் சேர்த்துப் பூசப்பட் டிருக்கும். பல கடிகாரங்களில் கதிரியக்க உப்புகளே யில்லாமல் சல்பைடு பொடிகள் மட்டும் பூசப்பட்டிருக்கும். வெளிச்சம் நீங்கிய பின்னும் இவை சற்று நேரம் ஒளிர்ந்து கொண்டிருப்பதால் இருட்டிலும் மணி பார்க்க முடிகிறது.

முதற்கூறிய வகையான fluorescent பொருள்களைக் குழாய் விளக்குகளினுட்புறம் பூசப்பட்டிருப்பதால் இவ் விளக்குகளை ப்ளாரஸண்ட் விளக்குகள் (fluorescent lights) என்கிருேம். குழாயினுள் காற்று அகற்றப்பட்டுச் சிறிதளவு ஆர்க்கான் (Argon) என்ற வாயு விடப்பட் டிருக்கும்; அதோடு சற்றே பாதரஸமும் உள்ளே யிருக்கும். முதலில் ஆர்க்கான் வாயுவினூடே மின்சாரம் பாயும்; சற்று நேரத்திற்கெல்லாம் பாதரசமும் ஆவியாகி அல்ட்ரா வயலெட் கதிர்களை நிறைய வீசுகிறது. இக்கதிர்கள் பூச்சு முழுவதும் பட்டவுடன் பூச்சு ஒளிர்ந்து குழாய் பூராவும் பிரகாசிக்கிறது.

உள்ளே பூசுவதற்கேற்ற பொருள்கள் கலக்கப்படவேண்டிய விகிதங்களும், பற்பல நிறங்கொண்ட ஒளியைப் பெறுவதற்கு அக்கலவைகளில் செய்ய வேண்டிய மாறுதல்கள் போன்ற நுட்பங்களும் ரகசிய மானவை. சுண்ணும்பு டங்ஸ்டேட் (calcium tungstate), மெக்னீஷிய டங்ஸ்டேட் (magnesium tungstate) இவை நீலங் கலந்த ஒளியும், கேட்மியம் போரேட் (cadmium borote), கேட்மியம் சிலிகேட் (cadmium silicate) இவை இளஞ்சிவப்பான ஒளியும், துத்தநாக சிலிகேட் (Zinc Silicate) பச்சை ஒளியும், துத்தநாக பெரில்லிய சிலிகேட் (Zinc beryllium silicate) இலேசான மஞ்சள் ஒளியும் தரும். இவற்றின் பண்பை மிகுதிப் படுத்த மேங்கனீஸ் (Manganese) சம்மந்தமான பொருள்களும் சேர்க்கப்படும்.

துத்தநாக சல்பைடு வகையைச் சேர்ந்த பொடிகளையும் கலப்பதுண்டு; இப்பொடிகளோடு சற்றே ரேடியம் அல்லது தாமிரம் (Copper), காரீயம் (Lead), வெள்ளி போன்ற உலோக சம்மந்தமான உப்புகளும் சேர்த்து உபயோகிப்பார்கள்.

மேற்கூறிய பொருள்களைத் தக்கபடி கலந்து தேவையான நிறங்கொண்ட ஒளியோ, அல்லது பகல் வெளிச்சத்தைப் போன்ற ஒளி தரும்படியோ செய்துகொள்ளலாம்.

குழாய் விளக்குகளில் அதிக மின்சாரம் ஒளியாக மாறி, அதோடு அல்ட்ரா வயலெட் கதிர்களும் ஒளியாக மாற்றப்படுவதால் சாதாரண விளக்குகள், நியான் விளக்குகள் இவற்றைவிடச் சிக்கனமானவை. சாதாரண விளக்குகள் சுமார் ஆயிர மணி நேரம் உழைக்கக் கூடியவை. குழாய் விளக்குகள் சுமார் இரண்டு அல்லது மூன்று பங்கு காலம் உழைக்கும்.

ஒரு வார்த்தை; கெட்டுப்போன குழாய்களைத் தூரமான இடத்தில் குழி பறித்து மண்ணைப் போட்டு மூடிவிடுவது நலம். உள்ளே பூசியிருக்கும் பொருள்களின் விஷத் தன்மை காரணமாக, உடைந்த சில்லுகளால் ஏற்படும் காயங்கள் எளிதில் குணமடையாமல் தொல்லை விளைக்கும்.

ஒளியுண்டாக்கும் விதங்கள் எத்தனையோ உள்ளன. இங்கு குறிப்பிட்டவை தவிர ஏனைய வழிகள் ஆராய்ச்சிக்கூட அளவில் நிற்கின்றன. உதாரணமாக மின் மினிப் பூச்சியின் சக்தியில் பெரும் பகுதி ஒளியாக வெளிப்படுகிறது. அதன் உடலில் நிகழும் ரசாயன மாற்றங்களைப் போலப் பரிசோதனைக் குழாயிலும் நிகழ்த்தி ஒளியை உண்டாக்க முடியும். இவற்றை எளிய முறையில் அன்றாட உபயோகத்திற்குக் கொண்டுவர இன்னும் ஆராய்ச்சிகள் அவசியம்.

அமெரிக்காவில் சமீபத்தில் ஒரு வகைப் புது மாதிரியான விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பேனலஸண்ட் விளக்குகள் (Panelescent lamps) என்கிறார்கள். ஒரு தட்டையான பரப்பிலிருந்து ஒளி வருவதால் இவற்றைத் தள விளக்குகள் (Area lights) எனலாம்.

மின்சாரம் கடத்தக் கூடிய ஒரு வகைக் கண்ணாடித் தகடுகளைச் செய்கிறார்கள். கண்ணாடித் தகட்டையடுத்து மின்சாரங் கடத்தாத இனத்தைச் சேர்ந்த ஒளிர் பொருளால் (Fluorescent material) ஒரு மெல்லிய பூச்சு கொடுக்கப்படுகிறது. இதற்கும் மேலாக அலுமினியத்தை ஆவியாக்கி ஒரு படலமாகப் படிய விடுவார்கள். நம் வீட்டு மின்சார சக்திக்கு இணைத்தவுடன் இரு பக்கங்களிலும் மின்சாரம் பாய, மத்தியில் மின்சாரங் கடத்தாத ஒளிர் பொருள் இதமான ஒளியை அளிக்கிறது. வெப்பத்திற்கு அவசியமில்லாததால் பெரும் பகுதி மின்சாரம் வீணாவதும் இல்லை.

தள விளக்கில் மின்சாரச் செலவும் அவ்வளவு அதிகமில்லையாம். கண்ணாடிப் பரப்பை நமக்கு வேண்டிய உருவத்திலோ, வேண்டிய அளவு பெரிதாகவோ அமைத்துக் கொள்ளலாம். இவற்றின் ஒளி படிக்கக் கூடிய அளவிற்கு அதிகமாயில்லாவிட்டாலும் தள விளக்குகளைச் சுவற்றிலோ கூரைகளிலோ வைத்துக் கொள்ளலாம். இன்னும் இருட்டில் வசதியை உத்தேசித்து மாடிப் படிக்கட்டு, கடிகார முகப்புகள் முதலியவற்றுக்கும் பொருத்தி விடலாம்.

இவ் விளக்குகள் மூன்று நான்கு ஆண்டுகள் உழைக்குமென்று சொல்லப்படுகிறது. மேலும் குழாய் விளக்குகளைப் போலவே பகல் வெளிச்சம் போன்றும், வேறு பல நிறங் கொண்ட ஒளியைத் தரும்படியாகவும் தள விளக்குகளையும் அமைத்துக் கொள்ளலாம்.

அட்டைப் படம்

இங்கிலாந்து ரயிலில் மூன்றாவது வகுப்பு வண்டியில் ஒரு காட்சிதான் அட்டைப் படத்தில் நீங்கள் காண்பது. ஏதோ ஒரு பெரிய மாளிகைக்குள் தேநீர் விருந்து நடைபெறும் காட்சிபோல் தோற்றம் அளிக்கிறதல்லவா?

வினாக்களும் விடைகளும்

மின்னல் தோன்றும் அதே கணத்தில் ரேடியோவிலும் இரைச்சல் கேட்கிறது. இது ஏன்?

மேகங்களில் தேங்கிய மின்சாரம் காற்றினூடே பொறித் தொடராகப் பாயும்போது மின்னலாகத் தோன்றுகிறது. மின்சாரப் பொறி (Sparks) உண்டாகும்போதெல்லாம் ரேடியோ அலைகள் உற்பத்தியாகும். எல்லா அலை நீளங்களும் இதில் கதம்பமாயிருக்கும். ரேடியோ எந்த அலை நீளத்திற்குத் திருப்பி வைக்கப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதி அலைகள் நம் ரேடியோவிலும் ஒழுங்கற்ற ஒரு இரைச்சலை உண்டாக்குகிறது.

மின்னல் தோன்றிய அதே கணம் ரேடியோவில் அலறல் கேட்கிறது. ஒலியின் வேகம் குறைவானதால் சில வினாடிகள் கழித்து இடி முழக்கமும் நம் காதை எட்டும்.

க்ஷயரோகமுள்ள குடும்பத்தில் விவாக சம்பந்தம் செய்துகொள்ளலாமா? மணந்துகொள்ள விருக்கும் வரனுக்கு அந்த நோய் கிடையாது.

க்ஷயரோகம் பரம்பரையாக வரும் வியாதியன்று. சில சமயங்களில் ஒரே குடும்பத்தில் பலருக்கு இந்த வியாதி காணப்படுகிறது. இது பழக்கத்தில் நேரும் அஜாக்கிரதை காரணமாக ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தொற்றிப் பரவியதே யாகும்.

முகப்பரு எதனால் உண்டாகிறது? காமத்திற்கும் அதற்கும் சம்பந்தம் உண்டா? அதைப் போக்கும் மருந்து என்ன? முன்பு பரு வந்து வடு அல்லது குழி விழுந்திருந்தால் அதற்கு நிவர்த்தி யாது?

மேற்றோலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளும் எண்ணெய்ச் சுரப்பிகளும் 'வயது வந்தவுடன்' மும்முரமாக வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன. இதனால் எண்ணெயும் வியர்வையும் தோலின் சிறு துவாரங்களின்மூலம் வெளிவந்து ஆவியாகின்றன. எண்ணெய் சரிவர வெளி வராமல் தோலின் அடியில் தங்கிவிடும்போது மேற்றோலில் பருக்கள் தோன்றுகின்றன. பருவ வயதிற்கும் பருக்களுக்கும் உள்ள சம்பந்தம் இவ்வாறாகும்.

முகத்தை அடிக்கடி நன்கு கழுவிச் சுத்தமாக வைத்துக்கொள்வதும், தேகப்பயிற்சி செய்வதும் அவற்றைப் போக்கும் நல்ல வழிகள். உணவுக் கட்டுப்பாடுகளாலும் ஓரளவிற்குப் பருக்களைத் தடுக்கலாம். எலுமிச்சம் பழச் சாறும் க்ளிஸரினும் (Glycerine) தடவி வரலாம்.

பரு வந்த தழும்புகளை நீக்குவது இயலாது; நாட்பட்டு ஒரு வேளை மறையலாம்.

கக்குவான் இருமலை எந்த மருந்து குணப்படுத்தும்?

குழந்தைகளைத் தாக்கும் இக் கொடிய இருமல் எந்த மருந்தினாலும் எளிதில் குணமடைவதில்லை. சுமார் ஒருமாத காலம் குழந்தையை வாட்டிய பிறகே இருமல் நீங்குகிறது.

பெனிஸிலின் வகையைச் சேர்ந்த க்ளோரோமைஸிட்டின் (Chloromycetin) என்ற மருந்து சுமார் ஒரு வாரத்தில் நல்ல குணமளிப்பதாகக் கூறப்படுகிறது.

கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்

திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்

தெருளுடை மனத்து மன்ன னேவலிற்
றிரம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்னலுக்
கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட வுடையவ
னுய்த்த காரேறு
அருளுடை யொருவ னீக்க வப்பிணி
யவிழ்ந்த தொத்தான் 109

மன்னவன் பணியன் றாகி னும்பணி
மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன்
பெற்ற தன்றோ
என்னினி யுறுதி யப்பா லிப்பணி
தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே போகின்றேன்
விடையுங் கொண்டேன் 110

என்று கம்பன் புளுகிலுதித்த அசாத்திய ராமன் "அப்பொழுதலர்ந்த செந்தாமரை முகத்துடன்" விடை கொண்டு சென்றானாம். அம் மட்டு மன்று; கம்ப ராமனும் கம்ப கோசலை யும் அளவளாவிய பெரும் புளுகை யும் கேளுங்கள்.

நகர் நீங்குபடலத்தில்

கம்ப ராமன், கோசலை கோயிலில்

குழைக்கின்ற கவரியின்றிக் கொற்றவெண்
குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின்
னிரங்கி யேக
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன்
வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள் முன்னொரு
தமியன் சென்றான். 2

அதுகண்டு கம்ப கோசலை:—

புனைந்திலன் மௌலி குஞ்சி மஞ்சனப்
புனித நீரால்
நனைந்தில னென்கொ லென்னு மையத்தா
ளனைய பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலுங்
குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூ றுண்டோ நெடுமுடி
புனைதற் கென்றாள், 3

அதாவது அப்போ தலர்ந்த ராமத் தாமரையை இள ஞாயிற்றின் கதிர்கள் பனிநீர் கலந்து தாவக்குளிர்ந்த கோசலைத் தாமரை கேட்டனளாம்,

கோசல

"மங்கை யம்மொழி கூறலும்"

கம்பராம

...."மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றா னென்றான்" 4

அது கேட்ட குளிர்தாமரைக் கம்ப கோசலை,

"முறைமையன் றென்பதொன் றுண்டு
மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறின னல்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்" 5

ராமன் கோசலை இயற்கை யுணர்ச்சிகளை வால்மீகி உள்ளதுள்ளபடி நவிலுகின்றாரெனல்.

கம்பன் புளுகு இவ்வாறாக, "மூவரானவர் தம்முளு முந்திய நாவினார்" வாய்மையே கூறும் வால்மீகி சொல்வது கேளுங்கள்.

"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" வால்மீகியின் மாண்பு; "செயற்கைப் பொருளை ஆக்கமின்றிக் கூறல்" கம்ப சூத்திரம்.

அயோத்தியா காண்டம்
20-வது சர்க்கம்.

ஸ்லோகம்.

வால்மீக ராமன் கோசலையைக் கண்டு சொல்வது:

ப்ரஸ்த்திதோ த^{2}ண்ட^{2}காரண்ய
மாப்ரஷ்டு முபசக்ரமே
தே^{2}விநாநம் நச^{3}ாநீஷ்டே
மஷ்அத்^{2}ப்^{2}ஷ்அயமு பஸ்த்ஷ்இதம்

அதாவது வால்மீக ராமன் தண்ட காரணியத்திற்குப் புறப்பட்டவனைக்

(கோசலையைப் பார்த்துச்) சொல்லத் தொடங்கினான்:—

புகழ்வாய்ந்தவளே, மஹத்பய முயஸ்திதம்—பெரிதான துணுக்க மூலம் நேர்ந்திருப்பது—நிச்சயமாக நீ அறியவே இல்லை.

இதம் தவச துக்க ஆய
வைதேஹ்யா லக்ஷ்மணஸ்யச
கமிஷ்யே தண்டகாரண்யம்
கிமநேநாஸநேநமே

அதாவது,

மனையொன்றில் உட்காரும்படி சொன்ன கோசலையை நோக்கி வால்மீக ராமன் சொல்லுகிறான்:—

'இதனால் உனக்கும், சீதைக்கும், இலக்குவனுக்கும் துக்க ஆதாரமாக நான் தண்டகாரண்யம் போகப் போகின்றேன், எனக்கு இந்த ஆசனம் என்னத்திற்கு?'

இன்னும் வால்மீக ராமன் கூறுவதைக் கேளுங்கள். அப்போ தலர்ந்த தாமரை கூறுவதா அல்லது வெப்பி யுதிர்ந்த தாமரை கூறுவதா என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்.

வெம்பியுதிர்வதுதான் இயற்கை யிலக்கணமாதையால் வால்மீகி நவில்வதே வாய்மை:—

விஷ்டராஸநயோக்யோஹி
காலோ உயம் மாமுபஸ்திதஹ
சதுர்தஸஹி வர்ஷாணி
வத்ஸ்யாமி விஜநே வநே

அதாவது—'அன்னாய்! தருப்பை மணைக்கு உரியதான இந்த வேளை என்னை நெருங்கிவிட்டது. மக்களில்லாத காட்டிலல்லவா பதினான்கு ஆண்டுகள் நான் இருக்கப்போகிறேன்?'

இன்னும்

மத்ஸ உமூலபலைர் ஜீவந்ஹித்வா
முநிவதாமிஷம்
பரதாய மஹாராஜோ
யௌவ ராஜ்யம் ப்ரயச்சதி

அதாவது—'அன்னாய்! துறவியைப் போல ஊனைவிட்டு; தேன், வேர், கனிகள் (ஆகிய இவைகளால் யான்) உயிர் வகித்திருக்க வேண்டியவன். பேரரையர் (தசரதர்) இளவரசுப் பட்டத்தைப் பரதனுக்குக் கொடுக்கிறார்.'

இன்னும்

மாம்புநர் தண்டகாரண்யே
விவாஸயதி தாபஸம்
ஸஷ்டட் சாஷ்டௌச வர்ஷாணி
வத்ஸ்யாமி விஜநேவநே

அதாவது—'அன்னாய்! என்னையோ வென்றால் தண்டகாரணியத்தில் துறவியாக வாழ அனுப்புகிறார். அந்த மக்களில்லாக் காட்டில் நான் ஆறும் எட்டும் பதினான்கு ஆண்டுகள் வாழப் போகிறேன்.'

என்று வால்மீக ராமன் சொன்னான். இவ்வுணர்ச்சிகள்தான் முற்றிலும் இயற்கை யுணர்ச்சிகளாக, கம்பராமன் உணர்ச்சி உண்மையா என்பதையும் கம்பன் கூறியது முற்றிலும் புளுகல்லவா என்பதையும் நீங்களே ஆராய்ந்து கொள்ளுங்கள்.

மற்றும் "நிறை குணத்தவன் நின்னினு நல்லனால் குறைவிலன்" என்று பரதனை வாழ்த்திய கம்ப கோசலையுடன் வாய்மையிற் சிறந்த வால்மீக கோசலையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

மகாராஜா பரதனுக்கு இளவரசு கொடுக்கிறுர் என்று கேட்ட கோசலை,

அயோத்தியா காண்டம்
20-வது சர்க்கம்

ஸ்லோகம்.

ஆ(லேவ மாநோ வந்யாநீ
ப்(அலமூலீ (ச்ச வர்தயந்
(லாநீக்ருதைவ (லால (ல்ய
ய(ட்டி(ப் பர (சுநாவநே
பபாத (ல(அ(லா தே²வீ
தே²வ தேவ தீ²வ (ச்ச்யுதா

அதாவது காட்டிலுள்ள வேர் கனி முதலானவைகளைக்கொண்டு வாழப் போகிறேனென்று வால்மீக ராமன் கூறக்கேட்ட அவள் (கோசலை) காட்டிடத்தில் கோடரியால் வெட்டப்பட்ட ஆலமரத்துக் கிளைபோலவும் தெய்வ உலகத்தி லிருந்து இவ்வுலகத் தரை மீது விழுந்த தெய்வப் பெண்போலவும் திடீரென்று நிலத்தில் விழுந்தாள்.

இவ்வாறு விழுந்து சாய்ந்த வால்மீக கோசலையும், "நிறை குணத்தவன் நின்னிலும் நல்லனுல், குறைவிலன்" என்று பரதனை வாழ்த்திய கம்ப கோசலையும் ஒருவரேயோ? வேறு வேறோ கருதிப் பாருங்கள். கம்பன் கூற்று பச்சைப் புளுகல்லவா, பேரறிஞர்களே சொல்லுங்கள் — அவ்வாறு ஏன் புளுகவேண்டும் — வால்மீக கோசலைதான் இயற்கைக் குணத்தவளென்பதற்கும் வால்மீகி வாய்மையுடையவ ரென்பதற்கும் என்னுடன் ஒப்புவீர்களன்றோ?

(தொடரும்.)

கம்பன்-என் காதலன்

வரிசையிட்டு வந்தேன்னை
வதுவை புரியவந்த
பரிசைகேட்ட வெறும்புலமைப்
பாவலரின் கைமறுத்து,
திரிசங்கு நிலைபோலத்
திகைத்திருந்த வேளையிலே
அரிச்சிங்கம் போலவந்தான்
ஆட்கொண்டான் ஒருபுலவன்

அன்னவன்தான்

கோல்லும் இலக்கணத்தின்
கோத்தடிமை யாகாமல்
சோல்லுக்குச் சோல்லழகு
சுகமாய்ச் சுதிகூட்டக்
கல்லும் கனிந்துருகக்
கவிசோன்ன மாராசன்
சந்தத்தின் இங்கிதமும்
செந்தமிழின் மெய்யழகும்
சிந்தனையின் லட்சியத்தின்
சிகரத்துப் பொன்னுெளியும்
தந்தேனக்கு என்னுளத்தைத்
தன்னடிமை யாக்கிவிட்ட
போன்னடியான் அந்தப்
புலவர் திருக்கோமான்

— *திருச்சிற்றம்பலக் கவிராயர்*

ஜப்பான் சமாதான உடன்படிக்கை

திரு சு. நடராசன், B. A.

சரணாகதிப்படலம்:

ஐவோஜிமா மார்ச்சில் வீழ்ந்தது. ஜப்பான் – சோவியத் அனாக்கிரமிப்பு ஒப்பந்தத்தை நீடிக்க முடியாதென்று ஏப்ரலில் மாஸ்கோ தெரிவித்தது. மே மாதத்தில் ஜெர்மனி சரணாகதி யடைந்தது. ஓகினாமா ஜூனில் பூர்ணமாகப் பிடிபட்டது. ஜப்பானியத் தீவுக் கூட்டங்களின்மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுமாரி பொழிந்து அளவிலாத சேதத்தை ஏற்படுத்தின. இவை 1945-ல் ஜப்பானுக்கு நேர்ந்த அவதிகள்.

மிகக் குறுகிய காலத்தில் ஒரு பெருநிலப்பரப்பையே தன் வசமாக்கிக்கொண்டே ஜப்பான் தொடர்ந்து வந்த இந்தத் துரதிர்ஷ்டங்களால் நிலை குலைந்து போயிற்று.

1945 ஜூன் 22-ந் தேதியன்று போர்நிறுத்தத்திற்கு வழிகோலுமாறு ஜப்பானியச் சக்ரவர்த்தி தமது யுத்த ஆலோசனைக் கவுன்சிலைக் கேட்டுக்கொண்டார். டோக்கியோவி லிருந்த சோவியத் ஸ்தானிகர்மூலம் சமரசம் காண ஒரு முயற்சி மேற்கொள்ளப் பட்டது.

ஜப்பான் சரணாகதியடைய வேண்டும் என்று ஜூலை 26-ல் வெளியான பாட்ஸ்டாம் பிரகடனம் வற்புறுத்தியது.

ஆக. 8-ந் தேதியன்று சோவியத் யூனியன் ஜப்பான்மீது போர் தொடுத்தது. அதற்கு மறுநாளே சோவியத் துருப்புகள் மஞ்சூரியாவில் பிரவேசித்தன.

இந்த இடையில் ஹிரோஷிமா மீதும், நாகஸாகி மீதும் அமெரிக்க விமானங்கள் அணுக் குண்டுகளைப் பிரயோகித்தன.

ஜப்பானுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் இந்நிகழ்ச்சிகளால் சிதறுண்டு போயிற்று.

யுத்தத்தை நிறுத்தாவிட்டால் நாடு நாசமாவதைத் தவிர பிறிதொரு மார்க்கமில்லை. ஆகவே நடுநிலைமை நாடுகளான ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து வாயிலாக ஜப்பான் நேச நாடுகளுக்குச் சரணாகதிச் செய்தியை அனுப்பியது.

நேசநாடுகள் ஜப்பானின் நிபந்தனை யற்ற சரணாகதியை ஏற்றன.

1945-ம் வருடம் செப்டம்பர் மாதம் 2-ந் தேதி ஜப்பானின் 2600 ஆண்டுச் சரித்திரம் காணாத ஓர் அவமானச் சம்பவம் நிகழ்ந்தது. அன்றுதான் டோக்கியோ விரிகுடாவில் அமெரிக்காவின் மிகப்பெரும் போர்க்கப்பலான 'மிஸ்ஸௌரி' யில் ஜப்பானிய வெளி விவகார மந்திரி மமோருஷிகேமித்சு சரணாகதிப் பத்திரத்தில் கையொப்பமிட்டார்.

மக்-ஆர்தர் வந்தார்

ஆட்சிப்பீடத்தில் ஹிரோ ஹிடோவை வைத்துக் கொண்டே ஜப்பானை ஆட்டிப்படைக்க ஜெனரல் மக்-ஆர்தர் டோக்கியோ வந்து சேர்ந்தார்.

ஜப்பானில் ராணுவக் கலைப்பு வேலை வெற்றிகரமாக விரைவில் முடிக்கப்பட்டது.

செப்-11-ந் தேதி ஜெனரல் டோஜோவும், இதர ஜப்பானிய போர்த்தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். குற்றவாளிகளை விசாரித்துத் தண்டிக்க தூரக் கிழக்கு நாடுகளுக்கான சர்வதேச ராணுவ டிரிப்யூனல் நிறுவப்பட்டது.

ஜப்பான் உலக நாடுகளோடு பூண்டிருந்த ஸ்தானிக உறவு அடியோடு துண்டிக்கப்பட்டது.

ஜப்பானின் பழைய போக்கை நேர்முகமாக இல்லாவிடினும் மறைமுகமாகவாவது சிலர் ஆதரித்து வந்தனர். இவர்களைக் கண்டு பிடித்துத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காகச் சுத்தீகரிப்பு இயக்கம் மும்முரமாக நடைபெற்றது.

ஜப்பானியச் சக்ரவர்த்தியின் பேரதிகாரங்களுக்கு வரம்பு கோலப்பட்டது.

சுருக்கமாகச் சொன்னால் ஜெனரல் மக்-ஆர்தர், ஜப்பானை அமெரிக்கா சொன்னபடி கேட்கும் நல்ல பிள்ளையாக மாற்றிவிட்டார்.

ஜெர்மனி வீழ்ந்ததால் ஐரோப்பாவில் ராணுவ ஆன்யம் ஏற்பட்டது. ஜப்பான் வீழ்ந்ததால் ஆசியாவில் ராணுவ சூன்யம் உண்டாயிற்று. இன்றைய சர்வதேச நிலைமையில், ஐரோப்பாவிலோ ஆசியாவிலோ ராணுவ சூன்யங்கள் இருப்பது ஆபத்தானது என்பது அமெரிக்காவின் எண்ணம். ஆகவே ஜெர்மனியையும், ஜப்பானையும் புனர்வாழ்விப்பது உலகின் பாதுகாப்புக்கு அவசியம் என்ற அடிப்படையில் அமெரிக்கா நடவடிக்கைகள் மேற்கொண்டது. அவற்றில் ஒன்றுதான் ஜப்பான் சமாதான உடன்படிக்கை.

பிரிஸ்கோ மகாநாடு

யு. எஸ். ஜனாதிபதி ட்ருமன் குடியரசுக் கட்சிப் பிரமுகரும், வெளி விவகார இலாகா நிபுணருமான ஜான்பாஸ்டர் டல்லஸிடம் ஜப்பான் சமாதான உடன்படிக்கைப் பத்திரத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார்.

ஜான் பாஸ்டர் டல்லஸ் பதினொரு மாதகாலம் பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கடைசியில் உடன்படிக்கைப் பத்திரத்தைப் பூர்த்தி செய்தார். ஜப்பான் ஒன்றுபோகப் பிறிதெந்த நேச நாடும் இந்த உடன்படிக்கை நகலை ஆதரிப்பதாகத் தோன்றவில்லை. எங்குப் பார்த்தாலும் ஏகப்பட்ட எதிர்ப்பு. ஜப்பானில் அதிகாரம் வகிக்கும் யொஷீடா மந்திரிசபை உடன்படிக்கையை ஆதரித்தது என்றால் அது ஜப்பானிய மக்களின் மனப்பூர்வமான அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கிறது என்று சொல்லமுடியாது.

டல்லஸ் தமது நகலை மீண்டும் கொஞ்சம் திருத்தினார். இனி மாற்றமுடியாதென்று அறிவித்தார் அமெரிக்க வெளிவிவகார மந்திரி அச்சீசன்.

1951-செப்-4-ந் தேதியன்று ஜப்பான் சமாதான மகாநாடு சான் பிரான்சிஸ்கோவில் நடைபெறும் என்று அமெரிக்கா நாளும் குறித்து விட்டது.

மகாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகள் உடன்படிக்கைப்பற்றித் தத்தம் அபிப்பிராயத்தைத் தாராளமாகத் தெரிவிக்கலாம் என்று அச்சீஸன் கூறினர். ஆனல் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் உடன்படிக்கைக்குப் பிரேரிக்கும் திருத்தங்கள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட மாட்டா என்பதைத் தெளிவு படுத்தினர் அச்சீஸன்.

இந்தக் கட்டத்தில்தான் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பெரும் கருத்து வேற்றுமை காணப்பட்டது.

டல்லஸ் முதல்நகலைத் தயாரித்து அபிப்பிராயம் கோரி அனுப்பிய போதே இந்தியா பல குறைகளை எடுத்துக்காட்டி, அவற்றிற்குப் பரிகாரம் காணவேண்டு மென்று வற்புறுத்தியது. அமெரிக்கா இந்தியாவின் குரலுக்கு செவிசாய்க்காமலேயே இரண்டாவது நகலைத் தயாரித்துவிட்டு அதுவே இறுதி நகல் என்றும் பிரகடனம் செய்தது. அதே மூச்சில் பிரிஸ்கோ மகாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு அழைப்பும் அனுப்பிவைத்தது.

கையொப்பமிடும் அலங்காரப் பணிக்காகப் பிரிஸ்கோ சென்றுவர வேண்டியதில்லை என்று இந்திய சர்க்கார் கருதினர்.

இந்தியாவின் கொள்கை நிலையைப் பாராட்டி, பர்மாவும் பின்பற்றியது.

யூகோஸ்லாவியாவும் பிரிஸ்கோ மகாநாட்டைப் பகிஷ்கரித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ரஷ்யா ஒரு பெரிய ராஜதந்திர அணுக்குண்டைப் பிரயோகித்தது. ஜப்பான் சமாதான மகாநாட்டில் தான் கலந்துகொள்ளப் போவதாக அந்நாடு அறிவித்தது.

எதிர்பாராத இந்நிகழ்ச்சி அமெரிக்காவைச் சந்தேகத்திலும் சஞ்சலத்திலும் ஆழ்த்தியது.

சான்பிரான்ஸிஸ்கோவில் நடைபெறவிருக்கும் பலப்பரீட்சைக்கு அமெரிக்கா தன்னை ஆயத்தம் செய்துகொண்டது.

பிரிஸ்கோ மகாநாடு ஆரம்பமாவதற்கு முன்னல் யு. எஸ். பிலிப்பைன் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமும், யு. எஸ். ஆஸ்திரேலியா -நியூஜிலந்து முக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமும் கையெழுத்தாயின.

1951-செப். 4-ந் தேதியன்று சான்பிரான்சிஸ்கோ நகரில் 'ஓபேரா ஹவுஸில்' ஜப்பான் சமாதான உடன்படிக்கை மகாநாடு ஆரம்பமாயிற்று. அமெரிக்க வெளி விவகார மந்திரி மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினர். யு எஸ். ஜனதிபதி ட்ரூமன் மகாநாட்டைத் திறந்துவைத்து உரை நிகழ்த்தினர்.

இதே ஓபேரா ஹவுஸில்தான் சற்றேறக்குறைய ஆறு வருடங்களுக்குமுன் ஐ. நா. சாசனத்தில் உலக நாடுகள் கையொப்பமிட்டன. அன்று இந்த மண்டபத்தில் காணப்பட்ட உற்சாகமும், உறுதியும், நம்பிக்கையும் ஜப்பானிய சமாதான மகாநாட்டின்போது எங்கே ஓடி ஒளிந்துகொண்டனவோ தெரியவில்லை.

முதல்நாள் வரவேற்புரைகளுக்கும், வாழ்த்துரைகளுக்குமே சரியாகப் போயிற்று.

செப். 5-ந்தேதியன்று காலையில் மகாநாட்டின் அலுவல்கள் தொடங்கின. முதல் 120-நிமிடங்கள் எல்லாக் கோஷ்டிகளின் வாய்ச் சண்டையில் அழிந்தன. அமெரிக்க

கோஷ்டியின் 'மெஜாரிடி' சோவியத் கோஷ்டியை அடக்கிவிட்டது.

பிறகு ஒப்பந்தம் கையெழுத்தான 8-ந்தேதி வரை குறிப்பிடத்தக்க, ரசாபாசமான நிகழ்ச்சிகளெதுவும் நடைபெறவில்லை.

சனிக்கிழமையன்று (செப். 8) உடன்படிக்கையில் கையொப்பங்கள் இடப்பட்டன.

சமாதான உடன்படிக்கை கையெழுத்தான கொஞ்ச நேரத்தில் அமெரிக்கா—ஜப்பான் பரஸ்பரப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இரு நாட்டுப் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டனர்.

இந்தியாவின் கொள்கை நிலை

அஸாஹி சிம்பூன் என்ற ஜாப் பத்திரிகை பிரிஸ்கோ மகாநாடு பற்றிப் பொதுமக்கள் என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய ஒரு வாக்கெடுப்பு நடத்தியது. "பிரிஸ்கோ மகாநாட்டில் உங்கள் கவனத்தை நிரம்பவும் கவர்ந்த அம்சம் எது?" என்ற கேள்விக்கு ஜப்பானிய மக்கள் அளித்த பதிலை அறிவது அவசியம்.

பிரதமர் யொஷீடாவின் பிரசங்கம் — 21%

மகாநாடு சுமுகமாக நடைபெற்றது — 17%

ஜப்பான் சுதந்திரமடைந்தது — 7%

ஜப்பானின் எதிர்காலம் கடினமாயிருக்கும் — 4%

அமெரிக்கா— ரஷ்யா மோதல் — 4%

ஜனதிபதி ட்ரூமன் பிரசங்கம் — 2%

சோவியத் பிரதிநிதியின் போக்கு — 4%

இலங்கைப் பிரதிநிதியின் பிரசங்கம் — 2%

இதர அம்சங்கள் — 6%

மகாநாட்டு நிகழ்ச்சிகளால் கவரப்படாதவர்கள் — 33%

இந்த அபிப்பிராய கணிப்பிலிருந்து மகாநாட்டு நிகழ்ச்சிகளால் கவரப்படாதவர்கள் தொகை மிக அதிகம் என்பதை அறியலாம்.

இதைத்தான் இந்தியா ஆதியிலேயே சொல்லிற்று. அமெரிக்கா தயாரித்துள்ள சமாதான உடன்படிக்கைப் பத்திரம் ஜப்பானிய மக்களுக்குப் பிடித்தமாயிராது; யொஷீடா சர்க்கார் உடன்படிக்கையை ஆதரித்தால் அது மக்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கவில்லை என்றே அர்த்தம் என்பதாக இந்தியா தெரிவித்தது. இந்த அபிப்பிராயத்தை அமெரிக்கா ஆட்சேபித்தது.

ஜப்பான் சமாதான உடன்படிக்கை கீழ்க்காணும் இரு நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதாயிருக்கவேண்டும் என்பது இந்தியாவின் கருத்து.

1 ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் பிற நாடுகளுக்குச் சமதையான, கவுரவமான அந்தஸ்தையும் திருப்தியையும் ஜப்பானுக்கு அளிக்க வேண்டும்.

2 தூரக் கிழக்கில் அமைதி நிலவவேண்டும் என்று விரும்பும் நாடுகளனைத்தும் உடன்படிக்கையில் பங்கெடுத்துக்கொள்வதற்கு வகை செய்யவேண்டும்.

ஜப்பானுக்கு ரையூகு, போனின் தீவுகளை வழங்கிவிடவேண்டுமென்பது இந்தியாவின் கோரிக்கை.

இத் தீவுகளில் ஐ. நா. அங்கீகாரத்துடன் தர்மகர்த்தா பொறுப்பில் ஆட்சி நடத்தவேண்டுமென்பது அமெரிக்காவின் ஆசை.

சரித்திர ரீதியாகத் தமக்குச் சேரவேண்டிய பூபாகங்களில் அந்நியர் ஆதிக்கம் செலுத்துவது கண்டு ஜப்பானியர் அதிருப்தி கொண்டு, தூரக் கிழக்கில் யுத்த மேகங்கள் குவிவதற்கு ஏதுவுண்டாகும் என்பது இந்திய சர்க்காரின் கருத்து.

தற்போது ஜப்பானிலுள்ள நேச நாட்டுத் (அமெரிக்க) துருப்புகள் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதன் மூலம் அந்நாட்டில் தொடர்ந்து தங்கலாம் என்று சமாதான உடன்படிக்கையின் ஒரு ஷரத்து கூறுகிறது. இது அமெரிக்கத் துருப்புகளை ஜப்பானில் நிறுத்திவைக்க வேண்டுமென்ற அந்தரங்க நோக்கத்துடன் சேர்க்கப்பட்ட ஷரத்து என்று இந்தியா கருதுகிறது.

இந்தியாவின் ஆட்சேபணையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை.

பாட்ஸ்டாம் பிரகடனத்தின் பிரகாரம் பார்மோஸாத் தீவை இதுபோது கம்யூனிஸ்ட் சீனவிடம் ஒப்படைப்பதுதான் நியாயம் என்று இந்தியா கூறுகிறது.

அவசியமில்லை யென்கிறது அமெரிக்கா.

அடிப்படை விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட் டிருப்பதால் பிரிஸ்கோ மகாநாட்டில் கலந்து கொள்வதற்கில்லை என்று இந்தியா அறிவித்துவிட்டது. ஜப்பானுடன் தனியாக ஒரு சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு ஸ்தானிக உறவையும் ஸ்தாபித்துக் கொள்ளுவதாக இந்தியா தெரிவித்திருக்கிறது.

வருங் காலம்

1945-க்கப்புறம் ஜப்பானுக்குக் கிரஹணம் பிடித்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். எவ்வளவோ வசதிக் குறைவுகள் இருந்தும் உழைப்புக்கும் திறமைக்கும் பிரசித்திபெற்ற அந்தச் சின்னஞ்சிறிய தேசம் அபரிமிதமாகப் பொருளாதாரத் துறையில் முன்னேறியிருக்கிறது.

ஐந்து வருடங்களில் ஜப்பான் கப்பல் கட்டும் தொழிலில் உலகில் இரண்டாவது ஸ்தானத்தை அடைந்திருக்கிறது. ஜப்பானிய எஃகும் சிமிட்டியும் லட்சக் கணக்கான டன்கள் அளவில் ஆஸ்திரேலியாவுக்கும், மலேயாவுக்கும், தென் அமெரிக்காவுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஜப்பானியத் தொழில் ரசாயன உற்பத்திப் பொருள்களுக்கு உலகெங்கும் கிராக்கி காணப்படுகிறது. 1934-36-ல் இருந்ததைப்போல ஒன்பது மடங்கு அபிவிருத்தியடைந்திருக்கிறது அலுமினியம் தொழில். நிலக்கரி உற்பத்தி யுத்த முற்கால உச்ச நிலையை எட்டிவிட்டது. மின்சார உற்பத்தி 77 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. காகிதத் தொழில் 50-சதம் அபிவிருத்தியடைந்திருக்கிறது. பொன் உற்பத்தி 10-சதம் உயர்ந்திருக்கிறது.

இங்ஙனம் சகல துறைகளிலும் மின்னல் வேகத்தில் முன்னேறி வரும் ஜப்பான் வல்லரசுப் பூசலில் பீரங்கித் தீனியாகிவிடக் கூடாது என்பதே அந்நாட்டிடம் அனுதாபமும், நல்லெண்ணமும் உள்ள அனைவருக்கும் ஆவல்.

தெய்வம் தோற்றது

"கலைவாணன்"

●

புறநகர் மார்பைக் கிறிப் போந்திடும் அதுவே ஈண்டும்
உறவினில் கலக்கும் ஆண்கள் உளத்தினுக் கின்ப மூட்டிப்
பிற வெலாம் அதனுள் பெற்றுப் பெருமையில் பகட்டி வாழும்
திறமுடைப் பெண்கள் தேங்கும் தேவடி யார்கள் வீதி.

கண்டவர் உளத்தை எல்லாம் காந்தமே ஒப்ப வாங்கிக்
கொண்டவர் விழைந்த இன்பைக் கொடுத்ததற் குற்ற கூலி
தண்டிடும் தகைமை யோடு தலைக்கடை வாயில் தோறும்
பெண்டிரின் கூட்டம் தோன்றப் பேரெழில் சிதறும் யாண்டும்.

உடமையின் விலையால் இன்ப உணர்ச்சியை வாங்கித் துய்க்கும்
மடமையில் திரியும் ஆண்கள் மனத்தினை மயக்கித் தங்கள்
அடகென உடலை வைத்தே அன்னவர்க் கின்பை நல்கும்
கடமையின் தியாகத் தீயில் கசங்கிய கணிகைக் கூட்டம்.

அற்பரை மலர்க்கை நீட்டி அழைத்திதழ் அமுத மூட்டிக்
கற்பினை இழிந்த செப்புக் காசினில் விலைக்கு மாற்றி
விற்பதற் காகவீட்டில் வீதியை நோக்கித் தங்கச்
சிற்பமே போல நிற்கும் சிந்தையர் அந்த மாதர்.

வீதியின் விவரத் தோடு விளங்குமவ் வீதி யெங்கும்
மாதினில் மையல் காட்டும் மன்மதன் கொலுவைச் சொன்னோம்.

எதிலும் உயர்ந்த தாய்ஓர் இல்லிடைக் காந்தும் காமச்
சோதியின் சோபைச் சேதி சொல்லினில் சுவைக்கச் செல்வோம்.

கோமள முழுதுங் கூட்டிக் கொணர்ந்துநீள் புவியில் செய்ய
காமவெங் கனலின், சோதி காந்திடும் பருவங் காட்டும்
தேமது ரத்தின் பெண்மைத் தெய்விக உருவப் பாங்கைப்
பாமரன் என்வாய்ச் சொற்கள் பகுத்தெடுத் துரைக்கப் போமோ?

●

காரிருள் விண்ணின் மாரியின் வண்ணக் கற்றைவார் சடைக்குழல் பின்னல்.
வீரியங் காட்டி வீரிடும் வேலை வெள்ளலை போற்கரு விழிகள்.
கோரிய சுகத்தைக் கூட்டிட விளிக்கும் கொவ்வையின் கனிநிக ரிதழ்கள்.
நாரியர் குலமும் நாடிடத் தேடும் நளினமாய் அமைந்தபுன் னகைப்பு.

பொன்னினை உருக்கிப் புனைந்ததற் கேற்பப் புதுமெரு கூட்டிய வண்ணம்.
செங்நிறச் செக்கர் தன்னிறம் தோய்ந்த செழுந்தளி ரெனவிரல் கைகள்.
புன்னகைத் தழகுப் போதவிழ் கமலப் பூவினை நிகர்க்கு மெல்லுடலம்.
இன்னதிற் கூடும் இன்பெலாம் மண்ணின் ஈனர்கைக் காசினுக் கன்றோ?

கலைநிறை மதியம்; போதவிழ் கமலம்; கட்டுடல் பெற்றகார் மின்னல்;
சிலையுறுஞ் சிற்பம்; சித்திரச் சிர்த்தி; சிந்தையின் சிந்தனைச் சிறப்பு;
அலைபடா முத்தம்; அறிவதன் எல்லை; ஆசையின் மின்னொளிக் காந்தம்;
நிலையிலா இயற்கை உலைவிடைக் கலந்து நித்திய சுகந்தரும் சக்தி.

மண்ணினை விண்ணாய் மாற்றிடும் வலிய மாயமா மோகனச் சோதி;
கண்ணினில்போதைக் கள்ளினைப் பாய்ச்சிக் கவர்ந்திடும் மயல்மதுக் கிண்ணம்;
பண்ணுடன் அமைந்த பாவினிற் கலந்து பரவிடும் செந்தமிழ்ப் பனுவல்;
எண்ணிடும் நெஞ்சும் இனித்திடச் செய்யும் ஈடிலாக் கற்பகச் செந்தேன்.

சேவல்கள் கூவும் காவிடை நடனம் செய்திடு மாண்மயி லென்கோ!
பாவலர் அமர்ந்த பந்தியின் நடுவே பழகிடும் கம்பனே என்கோ!
பூவகைத் தொடையில் மேவிட முகிழ்த்த புதுமலர்க் கமலமே என்கோ!
ஆவலைத் தூண்டி ஆடவர் மனத்தை ஆட்டுமவ் வழகைஎன் னென்பேன்!

நெஞ்சினில் விம்மும் கஞ்சவெம் முலைகள் நிமிர்ந்திடக் கச்சினுள் நிறுத்தும்;
பஞ்சினும் மென்மை கொஞ்சிடும் உடலில் பசியதோர் பூந்துகில் புனையும்.
மஞ்சினிற் கருமை விஞ்சிடுங் குழலில் மணமலர் மல்லிகை சூடும்.
நஞ்சுடன் அமுதை நயமுறக் காட்ட நயனமேல் கரியமை தீட்டும்.

புன்னகை புரியப் பூவிதழ் விரியும் புதுமலர்க் கமலமேல் நின்று
இன்னிசை பாடி எக்களிப் புற்றே இளந்துயில் புரிந்திடும் தும்பித்
தன்னிறங் காட்டப் பொன்னிறங் காட்டித் தனியெழில் கனிவுறும் வதனக்
கன்னமேற் புனுகிற் கலந்திருட் சாந்தின் கருநிறத் திலக மொன் றேற்றும்

இளைப்புறு நெஞ்சம் இன்பினைத் தேடி ஏங்கிய பாங்கில்நேர்ப் பட்டுக்
களைப்பினை நீக்கிக் களிப்பினைக் காணக் கையினிற் காசொடு நிற்போர்
சளைத்திடு மட்டும் சாகசங் காட்டிச் சரசசல் லாபமாய் நெஞ்சை
வளைத்திடக் கரத்தில் வாய்ந்தொலி கூட்டும் வளைகளுக் கழகொளி யூட்டும்

பட்டினும் சிறந்த பஞ்சினும் மென்மை பாய்ச்சிய எழிலொளி வாய்ந்தே
கட்டுடல் முழுதும் கமழ்தரப் பன்னீர் கலந்தசெஞ் சந்தனம் பூசும்
மொட்டிதழ் விரியும்முளரியின் மோக மோகன முறுவலின் முகத்துப்
பொட்டிடும். பட்டோர் புந்தியை ஈர்க்கப் பூவிளந் தாதினை யொற்றும்

மங்கையர் மனமும் மருவிடத் துடிக்க மார்பினில் மதர்த்தெழு மழகுக்
கொங்கைமே லோடிக் குறுநகை சிதறக் கொழுமணிச் சரம்பல சூடித்
திங்களின் இரண்டு கங்கிலும் வால்மீன் தெரிவதற் கொப்பத் தன் செவியில்
தங்கிடும் வைரத் தொங்கல்கள் ஓசியத் தலைக்கடை வாயிலை நண்ணும்.

●

இல்லினை மெழுகிக் கூட்டி இன்னெழிற் கோலம் தீட்டி
நல்லொளி காட்டக் கூட நடுவிலோர் தீபம் வைத்து
மெல்லிய வெண்பட் டொன்றை மெத்தைமேல் விரித்துப் போட்டு
அல்லிருள் வரவை நோக்கி ஆவலாய்க் காத்து நிற்கும்.

தங்கமென் தகட்டி லாய தனையவெற் றிலையும் சீவித்
தெங்கிளந் திருக லோடு தீஞ்சுவை கூட்டும் பாக்கும்
சங்குவெண் சுதையும் வைத்துச் சந்தனக் கிண்ணத் தோடே
அங்கொரு வெள்ளித் தட்டு அம்புலிக் கழகு காட்டும்.

புட்டியின் மதுவை வார்க்கப் புதியபொற் குவளை தூக்கும்
கட்டிலின் மெத்தை யெங்கும் கமழ்தர அத்தர் ஊற்றும்
தட்டினில் பழமும் பாலும் தாங்கிமுன் வந்து வைக்கும்
மெட்டிகள் இசைக்கத் துள்ளி மின்னென நடந்து போகும்.

வெள்ளிவெண் ணிலவும் கண்டு வெள்கிடும் மந்த காசம்
கள்ளிதழ் அமுதம் தேக்கிக் காட்டிடும் சுந்த ராங்கம்

உள்ளுவார் நெஞ்சைப்பற்றி உலைத்திடும் மோக நாட்டம்
கொள்ளரும் அமுத போகம் கூட்டிடும் காம ரூபம்.

தன்மனை அடைந்து கூடும் தலைவனைக் காணு முன்னே
பன்மலர் மிலைந்த மின்னல் பாம்பென முதுகில் தேங்க
மென்மலர்க் காந்தி காட்டும் மேனகை யனையாள் மார்பில்
மன்மதன் கழைவில் தூக்கி மலர்க்கணை பொழிய லானான்.

பருவம்மெய் யிடையே தோற்றப் பணைத்தெழும் மார்பம் விம்மக்
கருவிழி அலைந்து காண்பார் கருத்தினில் காமம் பாய்ச்ச
உருவெழில் காட்டி இல்லத் தொருபுறம் நிற்பாள் நோக்கம்
தெருவினில் வரும்அத் தேவ தேவன்முன் தேங்கிற் றம்மா!

●

எண்ணருந் துயர்க்கெலாம் ஈறு காட்டிட
மண்ணினில் பாரத மக்கள் தம்பழம்
புண்ணிய வசத்தினால் போந்து லாவிடும்
கண்ணியக் கதிரொளிக் காந்தி மாதவன்.

ஞானமும் கருணையும் நலம்பெற் றோங்கிட
ஊனமும் பேதமும் ஒழிந்து சாம்பிட
வானமும் வையமும் வணங்கி ஏத்திடத்
தீனர்கள் பந்துவாய்த் திகழும் வேதியன்.

இன்னருள் முழுமதி யென்ன வாண்முகம்
மன்னிய அன்பொளி மணக்கும் புன்னகை
தன்னிக ரொன்றிலாத் தருமந் தாங்குடல்
என்னெனச் சொல்வதவ் வெழிலின் பாங்கினை!

கங்கையின் தண்மையும் யமுனை வேகமும்
பொங்கிய தண்டமிழ்ப் பொன்னி மென்மையும்
அங்கிணைந் தழகொடு ஆண்மை பாய்ச்சிடத்
தங்கியுள் வேட்கையைத் தணிக்கும் சாகரம்.

கண்டவர் நெஞ்சினைக் கவருங் காந்தியன்
மண்டலம் புகழுறு மறையின் நாயகன்
அண்டிய வணைத்திடும் அன்புச் சோதியன்
விண்டலம் வெள்கிடும் விமல வித்தகன்.

மாசினைத் தாண்டிய மதியைப் போன்றௌிர்
தேசினிற் பாரத தேசக் காவலன்
காசினுக் கன்பினைக் காட்டப் போந்தஅவ்
வேசியின் வீதியில் விரைந்து சென்றனன்.

மாரியைக் கண்டெழும் மயிலின் கூட்டநேர்
காரிருள் நடுவிலே கண்சி மிட்டிடும்
ஓரிரு விளக்குகள் ஒளிரும் காந்தியில்
காரிகைக் கூட்டமக் காந்தி கண்டது.

கண்டனர் பற்பலர் கலவி இன்புற
அண்டினர் பற்பலர் அவரு ளாயினும்
மண்டிய வேசையர் மரபு மாண்புறக்
கொண்டதக் கணிகையின் குச்சு வீடரோ!

மொழியை மீறிய மோகனன் அத்தெரு
வழியில் வந்துதன் வாயிலை நண்ணவும்
கழிபெ ரும்உவ கைக்கடற் பொங்கலில்
விழிதி றந்ததில் விண்சுகம் பாய்ந்தது.

மூர்த்தியின் மோகன முறுவல் பாய்ந்திடப்
பார்த்தனள் அவளவன் பார்க்கக் கண்டுளம்
ஆர்த்தது ஆசையின் அசைப்பில் மேனியே
வேர்த்தது மார்பகம் விம்மித் தாழ்ந்தது.

கண்வழிக் கண்டது கருத்தைத் தேக்கிடப்
பெண்மையின் பேரெழில் பேழை யொத்தவள்
வெண்கலச் சிலையென விழித்து நின்றனள்
விண்ணொளி காணவும் விரிந்த பூவென.

காமமும் கவடுமே கண்டு பாழ்த்ததன்
பாமர நெஞ்சொடு பகட்டி நிற்குமக்
கோமள சுந்தரி குறுகி முன்வரும்
சோமனைக் காணவும் சொக்கி விட்டனள்.

ஒருவர்கண் ஒருவரை உற்று நோக்கிட
உருவமும் உருவிடை உயர்வு காட்டிடும்

பருவமும் விரித்ததோர் பாசக் கண்ணியில்
இருவரின் இதயமும் இணைந்த தோர்கணம்.

வீச்சிடும் தன்கரு விழியின் வெட்டிலும்,
மூச்சிடும் மார்பினில் முகிழ்த்த மொட்டிலும்,
பேச்சிலும், ஆண்களைப் பிணைத்த பெண்ணுளம்
ஆச்சர்யம்! உற்றஅவ் ஆண்முன் தாழ்ந்ததே!

தாழ்ந்தது, காமமே தனது வாழ்க்கையாய்ச்
சூழ்ந்திடத் தொழும்புசெய் சூழ்ச்சி முற்றிலும்
வீழ்ந்தது, விந்தை!ஓர் வேசை நெஞ்சினைப்
போழ்ந்துமெய்க் காதலும் பூத்து விட்டதே!

காசையல் லால்மனக் கனிவு கண்டிலா
வேசையின் நெஞ்சினுள் விஷம்ம றைந்துமெய்
ஆசையும் எழுவதோ? அதிச யம்இது!
மாசையெல் லாம்விதி மறைக்க லானதே!

புன்மையில் புரட்டியும் புதுமை காட்டியும்
தன்மனப் போக்கினில் தரணி மாந்தர்கள்
மென்மனம் அலைப்புற மிடுக்கிப் பார்க்கும் ஏ!
மன்மத! நின்கணை மழுங்கி விட்டதோ

ஒன்றிப மனத்தொடு உள்ளம் துள்ளிட
முன்றிலி லிருந்தவள் மோகப் போதையில்
நின்றவன் — ஒருகணம் நெருங்கி வந்தவன்
துன்றுமுன் கயிறதோ துண்டித் திட்டதே!

நிலையுறு கதவினை நீக்கி வாசலில்
சிலையெனக் காதலில் சிந்தை தேங்கிட
மலைவுடன் நின்றஅம் மங்கை தேறுமுன்
தலைவன்அவ் வாயிலைத் தாண்டி விட்டனன்.

கரும்புவில் ஒடிந்தது! காமன் ஓய்ந்தனன்!
இரும்பிலும் வலியவன் இதயத் தெய்ததில்
அரும்பிய அவன்கணை ஐந்தும் வீழ்ந்தன!
திரும்பவும் மனிதன்முன் தெய்வம் தோற்றது.

சென்னை-600 008

Estd. 1933. Telegram: { VENKATESA, Udamalpet.

ஸ்ரீ

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,

உடுமலைப்பேட்டை.

○ ● ○

100நெ. வரை மெல்லிய ரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

○ ● ○

எங்கள் புதிய தறிகளிலிருந்து வெளிவந்த தரத்தில் சிறந்த துணி ரகங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன.

○ ● ○

சலவை மில்லும் தயாராகிறது.

1951-ம் ஆண்டில் உயர்ந்த சலவைத்துணிகளும் வெளிவரும்.

○ ● ○

மானேஜிங் ஏஜண்டுகள்:

ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு அண்டு கம்பெனி.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மெண்டு தொழிலாளர்
ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்
சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே
நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்
இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்
நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல
டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

Managing Agents :—
N. APPUSWAMY NAIDU & CO.,

Managing Director:—
G. V. MUTHUSWAMY, B. Sc.,

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A.M.I.E.E. (London) and Printed at the P. S. G. Industrial Institute Press, Peelamedu, P. O., Coimbatore.

டெலிபோன் நெ. 17 தந்தி: "ரங்கவிலாஸ்"

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்
அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

மூலதனம், ரூ. 16,00,000 வெளியிடப்பட்டு வசூலான ரூ. 15,02,500.

வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

2-ம் நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய

இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.

Telegrams : PIONEER. *Telephone : 160.*

THE COIMBATORE PIONEER MILLS, LIMITED.

★

PEELAMEDU, COIMBATORE, SOUTH INDIA.

★

SPINDLES–19,700.

★

SPINNERS OF HIGH QUALITY

YARN–40s TO 100s.

★

MANAGING DIRECTOR:

G. R. GOVINDARAJULU NAIDU.

Printed at the P. S. G. I. I. Press, Peelamedu, Coimbatore, (S. India).